கல்கி











KALKI
3-5-1970
40 காசு



வியர்வை நாற்றத்திலிருந்து பூரண பாதுகாப்பு

ப்ளூ ஸீல் டியோடெரண்ட் டால்க்

ஹெக்ஸக்ளோரோபீன் கலந்தது


வலிமை மிகக ஹெக்ஸக்ளோரோபீன் பாக்டீரியாக்களின் அழிவைத் தடுக்க. வியர்வையின் நாற்றம் நீங்கி புத்துணர்ச்சி பெறுவீர். உடலே நறுமணத்துடன் கமழச்செய்யும் அதன் சுகந்தம்.

நீவேயிருக்கட்டும்! பாதுகாப்புக்கும் புத்துணர்ச்சிக்கும் உங்களுக்கு உறுதி அளிப்பதற்கு பட்டுமென்மை ப்ளூ ஸீல் டியோடெரண்ட் டால்கைத் தவிர வேறெதுவுமில்லை

ப்ளூ ஸீல் டியோடெரண்ட் டால்க் ஹெக்ஸக்ளோரோபீன் கலந்தது.

சீஸ்ப்ரோ பாண்ட்ஸின் இன்னொரு தரமான தயாரிப்பு.

சீஸ்ப்ரோ பாண்ட்ஸ் இன்கார்பொரேடெட் (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பட்டது)



CAMY
GENEVA
கேமி கடிகாரம்
நாளுக்கு 24 மணி
நேரமும், வருடம் 365
நாட்களும் கவர்ச்சி-
யையும், துல்லியமான
இயக்கத்தையும் வழங்குகிறது.
பல மாடல்களிலிருந்து தேர்ந்தெடுங்கள் -
எல்லாம் நியாயமான விலை கொண்டவை.
RATAN BATRA/CW/TAN/92

கல்கி பொருளடக்கம்

சாதாரண, சித்திரை, 20 — 1970, மே 3

தீவிரவாதமும் தேசத்தின் தேவையும்	(தலையங்கம்)	— 5
ராஜாஜியின் கருத்துக்கள்	...	— 6
பொன்னியின் செல்வன்	அமரர் கல்கி	— 9
ராமாயணம்	ராஜாஜி	— 18
காணக் கிடைக்காத தங்கம்	ஜெகசிற்பியன்	— 21
ரகுபதி ராகவ	தமிழாக்கம்: ராஜாஜி	— 27
முடியாது? முடியாது!	பேட்டி: ஏ. சுவாமிநாதன்	— 28
அனுபவக் கவிஞர்	(அட்டைப் பட விளக்கம்)	— 30
இளமை பொங்கும் எழுபது!	பட்டினத்தார்	— 33
குடை ராட்டினம்	எஸ். ரங்கநாயகி	— 37
யாருக்காக...?	கமலா தோதாத்ரி	— 47
உச்ச வரம்பு உடனே வேண்டும்!	நாடோடி	— 51
களிமண் கால்கள்	ஜி. எஸ். பாலகிருஷ்ணன்	— 54
கொறிக்கவும் சிரிக்கவும்	கோமதி சுவாமிநாதன்	— 61
சீதா கல்யாணம்	சாருத்தலன்	— 64
வட்டமேஜை	...	— 72

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00


ராஷ்டிரபதியின்
அலுவல்!
SAMA


கடனை அடைக்காமலே அதிலிருந்து விடுபடச் சட்டம் உதவுமா?
அது சாத்தியமல்ல.
ஏன்? இதோ புதிய வழி உள்ளதே! முதலில் கடனை அடைப்பதாக அரசியல் சாஸனத்தில் ஒரு ஷரத்து சேர்த்து விட்டுப் பிறகு பார்லிமென்டைக் கொண்டு அப்பகுதியை நீக்கினால், கடன் தானாக ரத்தாகி விடுமே!
SAMA



தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

மலர் 29 □ இதழ் 40

தீவிரவாதமும் தேசத்தின் தேவையும்

சர்வ தேச அபிவிருத்தி ஸ்தாபனத்தின் டைரக்டராக இந்தியாவில் ஐந்து ஆண்டுகள் பணியாற்றியவர் டாக்டர் ஜான் பி. லூயிஸ் என்ற அமெரிக்கர். அவர் ஒரு நூல் இயற்றியிருக்கிறார். அதிலிருந்து 'அமெரிக்கன் ரிவ்யூ' சஞ்சிகையில் வெளியாகியுள்ள ஒரு பகுதியைக் கீழே கொடுக்கிறேன்:

> சாதாரண மக்களுக்கு அநுகூலமுள்ள வகையில் விவகாரங்களின் போக்கு தீவிரமாவது அவசியமென்று இந்தியாவில் இப்போது தலைமை ஸ்தானத்தி விருப்பவர்கள் கருதுகின்றனர். இது சரியான உணர்ச்சியே. ஆனால் புதிதாக மேற்கொள்ளும் எந்தத் தீவிர ஏற்பாடும் பயனுள்ளதாக இருக்க வேண்டும் என்பதை இத்தலைமையினர் உள்ளபடி உணர்ந்திருக்கிறார்கள் என்பதற்குச் சான்று காணவில்லை. பயன் தரக்கூடிய எந்த ஏற்பாடும் உறுதியான அடிப்படையைக் கொண்டிருக்க வேண்டும். விரைவாகவும், கணிசமாகவும் புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்கி, பரம ஏழைகளாக இருப்போருக்கு வருமானங்களும் நல் வாய்ப்புக்களும் கிடைக்கச் செய்வதாக அது அமைய வேண்டும். பழைய கோஷங்களை எழுப்பிக் கொண் டிருப்பதால் பயனில்லை. செத்து மடிந்த நிலையில் இருப்பவர்களைத் தாக்கிக் கொண்டிருப்பதால் லாபமில்லை. தீவிர வாதப் போக்கு இன்றைய நிலைக்குப் பொருத்தமாக இருக்க வேண்டுமாயின், பொருளாதார வளர்ச்சியுடன் கூட அது உருப்படியாகப் பிணைக்கப் பட்டிருக்க வேண்டும். இதையும் புதுத் தலைமையினர் போதிய அளவு உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. தொழிலாளருக்கான வேலை வாய்ப்புக்களை அளிப்பதன் மூலம் பல வகையில் உற்பத்தியை வளர்த்துக் கொண்டே செல்ல முடியும். பொருளாதார அபிவிருத்திக்கு இது அவசியத் தேவை. பாசனக் கால்வாய்கள் வெட்டுவது, ஏரிக் கரை அமைப்பது, பண்ணையிலிருந்து சந்தைக்கு ரோடுகள் போடுவது, தானியக் கிடங்கு ஏற்பாடுகள், விற்பனை வசதிகள் போன்றவை பெருகிக் கொண்டே போக வேண்டும். நாட்டுப்புறம் வளர்ச்சி யடைவதற்கு வேண்டிய ஆதார வசதிகள் அனைத்தையும் அளிக்கும் கேந்திரங்கள் தேவை. மேலே குறிப்பிட்ட வசதிகளுடன் கூட, பள்ளிக் கூடங்கள், தொழில் கல்விக்கான வசதிகள், சுகாதார நிலையங்கள், குடும்பக் கட்டுப்பாட்டு நிலையங்கள் முதலியவை பரவலாகப் பெருக வேண்டும். நகர்ப்புறங்களின் வளர்ச்சிக்கு வேண்டிய ஆதார வசதிகளையும் பூர்த்தி செய்தாக வேண்டும். மக்களுக்கு ஜாகை வசதிகளை விரிவு படுத்த வேண்டும். இந்தியாவில் நெடுஞ்சாலைகள் மிக மிகக் குறைவாகவே இருக்கின்றன. இந்தியா அனைத்தும் ஒரு பெரிய பொது மார்க்கெட்டாக இருந்துவருகிறது. இந்தப் பொது மார்க்கெட்டின் தேவைக்கு ஏற்பத் தேசிய நெடுஞ்சாலைகள் முறையாக அமைக்கப்பட வேண்டும்.

''ஸ்வராஜ்யா''வும் சுதந்திரக் கட்சித் தலைவர்களும் — குறிப்பாக ஸ்ரீ லோபோ பிரபுவும் — வருடக் கணக்கில் வற்புறுத்தி வந்திருப்பது இதைத்தான்.

தீவிர வாதம் என்றால் கொடுத்த வாக்கை மீறுவதும், வாக்குறுதிகளை அவமதிப்பதுந்தான் என்று சில தலைவர்களும், பார்லிமெண்ட் அங்கத்தினர்களும் தவறாக நினைக்கிறார்கள். தேசத்தின் தீவிரத் தேவையான பொது நலத்துடன்கூடச் சம்பந்தமேயில்லாத இந்தப் போலி தீவிர வாதத்தின் நிகர விளைவு யாதெனில், நமது சர்க்காரின் வாய்மையும் வாக்குறுதிகளும் நம்ப இயலாதவை என்ற நிலைமை ஏற்பட்டிருப்பதுதான். தேசத்தின் வலிமை குன்றி, நமது தார்மிக அந்தஸ்து சிதைவதுதான் இத் தீவிர வாதத்தினால் நமக்குக் கிடைத்துள்ள லாபம்.

('ஸ்வராஜ்யா'வில் ராஜாஜி எழுதியது.)

என்ன சேதி?

லெனின் நூற்றாண்டு

உலகப் பெரியார்கள் வரிசையில் நிலையான இடம் பெற்றுள்ள பலரில் ருஷ்ய நாட்டுப் புரட்சி வீரர் லெனினும் ஒருவர். மக்கள் சிந்தனையைத் தூண்டிக் குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தின் போக்கையே திசை மாறச் செய்துள்ள மார்க்ஸிய கருத்துக்களுக்குச் செயல் வடிவம் கொடுத்தவர் அவர். அந்த அடிப்படையில் ஒரு சமுதாயத்தையே மாற்றி அமைத்து அரசு ஏற்படுத்தி நிலைக்கச் செய்தவர். லெனின் புரிந்த இந்தச் சாதனைகளை ருஷ்ய நாட்டினரும் இதர நாட்டினரும் மகத்தானவை என்று வியப்பதில் ஆச்சரியமில்லை. மக்கட் சமுதாயத்தின் போக்கையே மாற்றி அமைத்த சரித்திர புருஷர் என்ற வகையில் ருஷ்ய நாட்டு லெனினுக்கு அவருடைய நூற்றாண்டுப் பிறந்த தினத்தில் நாம் அஞ்சலி செலுத்துகிறோம்.

தஞ்சையைப் பாராட்டுகிறோம்

சென்ற இடமெல்லாம் ஆஸ்திகமும் ஆலயமும் பின்னிப் பிணைந்து விரவியுள்ள தஞ்சை மாவட்டத்தின் தலைநகரிலே, நாஸ்திக வாதத்தின் தலைவர் திரு ஈ. வெ. ரா.வின் சிலையின் அடியில் நாஸ்திகப் பிரசார வாசகங்கள் பொறிக்கப்பட்டிருப்பது தமிழ் நாட்டில் பல்லோர் உள்ளங்களைப் புண்படுத்தி வந்திருக்கிறது.

குறிப்பிட்ட சமயத்தைச் சேர்ந்தவர்களின் உள்ளத்தைப் புண்படுத்தக் கூடியதாக வாசகங்கள் அமைந்திருப்பின் சட்டம் குறுக்கிட வாய்ப்புண்டு. ஆனால் வாசகங்களோ இறைப் பற்றுள்ள எவரையும் புண்படுத்தக் கூடியதாக, பொதுவாக உள்ளன. அதனால் சட்டம் தலையிட இயலவில்லை. ஆனால் இப்போது ஹிந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள் ஆகிய எல்லா சமயத்தாரும் ஒன்றுசேர்ந்து, மேற்படி வாசகங்களை அகற்றத் தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறார்கள். திரு ஏ. ஒய். எஸ். பரிசுத்த நாடார், எம்.எல்.ஏ. தலைமையில், தஞ்சை பிஷப் ரெவரண்ட் பாதர் ஆர். ஏ. சுந்தரம் முதலிய பலர் சென்ற 23ந் தேதி நடந்த கூட்டத்தில் பேசியிருக்கிறார்கள். சட்டம் செய்ய இயலாததைப் பொதுமக்களின் வேண்டுகோள் நிறைவேற்றும் என்று எதிர்பார்ப்போமாக.

புதிய கௌரவம்

அகில இந்திய தொழில் நிர்வாகச் சங்கம், தொழிலதிபர்கள் ஸ்தாபனத்தின் தென்னிந்தியக் கிளை ஆகியவற்றுக்கு முறையே திரு எம். கே. ராஜு அவர்களும் திரு என். எஸ். பட் அவர்களும் நடப்பு ஆண்டுத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறோம்.

நவீன காலத் தொழில் நிறுவனங்களைத் திறம்பட நிர்வகிப்பதென்பது சிக்கல் மிகுந்த வேலை. அதற்குச் சாமர்த்தியமும் சமத்காரமும் மட்டும் போதாது. மனிதத் தன்மை, உயர் பண்புகள், நுட்பக் கல்வியறிவு, நிர்வாக அறிவு, தெளிவான சிந்தனை — இப்படிப் பல குணாதிசயங்கள் வேண்டும். இவற்றையெல்



திரு எம். கே. ராஜு



திரு என். எஸ். பட்

லாம் இவ்விருவரும் ஒருங்கே பெற்றுள்ளனர். இந்தியா பிஸ்டன்ஸ் கம்பெனியின் டைரக்டராகவும் மானேஜராகவும் பணி புரிந்து வருகிறார் திரு எம். கே. ராஜு. பின்னி தொழிலகத்தின் டைரக்டர்களுள் ஒருவர் திரு பட். இவ்விருவரது பதவிக்காலம் பயனுள்ள பொற்காலமாகத் திகழட்டும்.

ராஜாஜியின் கருத்துக்கள்

புதிய காங்கிரஸின் பார்லிமெண்டரி கட்சிக் கமிட்டி கூடி, நக்ஸல்பாரிகள் என்ற தீவிர கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கைகளைப் பற்றிக் கவலையுடன் விவாதித்ததாகச் செய்திகள் கூறுகின்றன. நக்ஸல்பாரி நடவடிக்கைகளை ஒடுக்குவதற்காகப் புதிய சட்டம் ஒன்றை நிறைவேற்றுவதன் சாத்தியக்கூறுகளை அரசு ஆராய்ந்து வருவதாக, அந்தக் கூட்டத்தில் பிரதம மந்திரி கூறினாராம். நக்ஸல்பாரி நடவடிக்கைகள் கடுங் குற்றங்களாகும். கம்யூனிஸ்டுகளிடையே ஒரு பிரிவினர் இந்திய சர்க்காரைக் குழி பறிக்கும் நோக்கத்துடன் இவற்றில் ஈடுபடுவதாகத் தெரிகிறது. கம்யூனிஸ்டுகள் கோபமடையப் போகிறார்களே என்ற எண்ணத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு ஸ்ரீமதி இந்திராகாந்தி தயங்குகிறார். இந்தத் தயக்கத்தை அவர் கைவிட்டால் போதும்; புதிய சட்டம் எதையும் இயற்ற வேண்டிய அவசியமில்லை.

★

மேற்கு வங்க சர்க்காரின் தலைமைக் காரியாலயத்தில் ஏப்ரில் 22ந் தேதி ஒரு குண்டு வெடித்தது. இது ராஷ்டிரபதியின் ஆட்சிக்கு எதிரிடையான கம்யூனிஸ்டு ஆர்ப்பாட்டம். ஆனால் எத்தனையோ ஆர்ப்பாட்டங்களில் இதுவும் ஒன்று எனக் கருதி இவ்விஷயத்தில் அலட்சியமாயிருக்க முடியாது. அமைதியைச்

சிதைத்து, வன்செயல்களில் ஈடுபடுவதற்குக் கம்யூனிஸ்டுகள் என்னவெல்லாம் செய்யக் கூடும் என்பதற்கு இது ஓர் உதாரணம். கம்யூனிஸ்டுகளின் நாச வேலைத் திட்டத்துக்கு எதிராக மத்திய சர்க்காரில் உள்ள ஆளும் கட்சியும் மற்ற ஜனநாயகக் கட்சிகளும் ஓர் ஐக்கிய முன்னணியாக ஒன்று சேர வேண்டும். இதில் ஒரு வருந்தத்தக்க அம்சம் இருக்கிறது. கம்யூனிஸ்டுகள் பல பிரிவினராக இருக்கிறார்கள்; அப் பிரிவுகளில் ஏதாவது ஒன்றின் ஆதரவை ஸ்ரீமதி இந்திரா காந்தியைத் தலைவராகக் கொண்ட ஆளும் கட்சி நம்பியிருக்கிறது!

★

குஜராத் தவிர ஏனைய ராஜ்ய சர்க்கார்கள் நடத்தும் லாட்டரிகளைக் குறித்தும், இதனை யூனியன் அரசாங்கமும் ராஷ்டிரபதியும் வெறுமே பார்த்துக் கொண்டிருப்பது குறித்தும் நான் படும் பெரும் வேதனையை ஓரளவு குறைக்கும் செய்தி வந்துள்ளது. அதாவது, லாட்டரி நடத்துவது என்கிற ஈனமான விவகாரத்தை ஜனசங்கம் ஐயம் திரிபற உறுதியாகக் கண்டித்திருக்கிறது. பத்திரிகைகளிலும் ரேடியோவிலும் விளம்பர வசியம் வீசி ஏழை மக்களின் பணத்தைத் திரட்டி இதை ஏஜெண்டுகளுடன் சர்க்காரே பகிர்ந்து கொள்ளுவது ஈனமான செயலே அன்றோ?

பல ஏழை மக்களின் பணத்தைத் திரட்டி, யாரோ ஒருவருக்கு லக்ஷமோ இரண்டு லக்ஷமோ பரிசு தருவது சோஷலிஸம்தானா?

எந்தக் கோணத்தில் பார்த்தாலும் லாட்டரி வியாபாரம் அதர்மமானது, மானக்கேடானது. ராஜ்யங்கள் லாட்டரி நடத்துவதை அரசியல் சாஸனம் அனுமதிக்காததால், ஸுப்ரீம் கோர்ட் கருத்தின் மீது இதைத் தடுக்குமாறு ராஷ்டிரபதியைத் தூண்டலாம் என நம்பி வந்தேன். ஆனால் என் நம்பிக்கை பொய்த்து விட்டது. இச்சமயத்தில் என் வேதனையை ஜனசங்கமும் பகிர்ந்து கொள்வது குறித்து அக்கட்சியிடம் நன்றி கொள்கிறேன்.


திருப்பதியில் தியாகையர்

சமீபத்தில் திருப்பதியில் நடைபெற்ற ஸ்ரீ தியாகராஜ உத்ஸவம் குறிப்பிடத்தக்கதொரு கலை விழாவாகும். சங்கீத சத்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளுக்கு அஞ்சலி செலுத்தும் விழா இருபத்தேழு ஆண்டுகளாகத் திருப்பதியில் நடைபெற்று வருகிறது. இவ்வாண்டு உற்சவத்தில் கலந்து கொண்ட திருப்பதி திருமலை தேவஸ்தானத்தின் நிருவாக அதிகாரி ஸ்ரீ சந்திரமௌளி ரெட்டி, விழாக் குழுவுடன் திருப்பதி தேவஸ்தானமும் ஒருங்கிணைந்து, ஒரு மன்றம் அமைக்கவும், இந்த உற்சவத்தை இன்னும் சிறப்பாக நடத்தவும் பூரண ஒத்துழைப்பு நல்கத் தயாராக உள்ளது என்ற நல்ல செய்தியைத் தெரிவித்தார். தொடக்க உரை நிகழ்த்திய மைசூர் முதல்வர் ஸ்ரீ வீரேந்திர பாட்டீல் இந்த யோசனையை வரவேற்றார். ''சென்ற பிப்ரவரி மாதம் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மிக்கு பீமாவரம் நகரசபையில் வரவேற்பு அளிக்கப்பட்டபோது, நன்றி உரை கூறிய ஸ்ரீமதி எம். எஸ். 'திருவையாற்றில் ஸ்ரீ தியாகராஜர் மறைந்த தினத்தன்று ஆராதனை நடத்துவது போலவே, திருப்பதியில் அவரது ஜயந்தி தினத்தைப் பெரிய சங்கீத உற்சவமாகக் கொண்டாட வேண்டும்; இவ்விழாவில் ஆந்திரம், தமிழகம், கேரளம், கர்நாடகம் ஆகிய எல்லா ராஜ்ய வித்துவான்களும் விதுஷிகளும் கலந்து கொள்ள வேண்டும்' என்று சொன்னதாக அறிந்தேன். இச்சிறிய யோசனையைப் பூரணமாக வரவேற்கிறேன். இவ்வாறே இனி திருப்பதியில் ஸ்ரீ தியாகராஜ ஜனன உற்சவம் பெரிய அளவில் நடைபெற முயற்சி மேற்கொள்ள வேண்டுமென விரும்புகிறேன்'' என்றார் ஸ்ரீ வீரேந்திர பாட்டீல்.


இவ்விழாவுக்குத் தலைமை தாங்கிய ஆந்திரப் பிரதேச துணை முதல் மந்திரி ஸ்ரீ ஜே.வி. நரஸிங்க ராவ், தியாகராஜ கிருதிகளை விசேஷமாகப் பிரபலப்படுத்தி வருவதற்காகத் தமிழ் மக்களுக்குப் புகழ்மாலை சூட்டினார். ஆந்திரப் பிரதேசத்திலும், கர்நாடகத்திலும் இதே போல் சங்கீத சத்குருவின் பாடல்களைப் பிரசாரம் செய்யவேண்டும் என்றும், இதற்கு மைசூர் முதல்வரும், எம். எஸ்ஸும் விரும்புவது போன்ற இசை விழா நடத்துவது பெருந்துணை புரியும் என்றும் கூறினார்.

தியாகையர் க்ஷேத்திராடனம் செய்த திருப்பதி மகாக்ஷேத்திரத்தில் அம்மகானின் ஜயந்தி நன்னாள் மகத்தான இசைவிழாவாகப் பரிணமிப்பதற்கு வேங்கடேசப் பெருமான் திருவருள் புரிவாராக!

படத்தில் இடமிருந்து வலமாக: திருவாளர்கள் சந்திரமௌளி ரெட்டி, அனந்தசயனம் அய்யங்கார், நரஸிங்க ராவ், வீரேந்திர பாட்டீல்.












கால்கேட் டென்டல் க்ரீமின் மூலம் வாய் துர்நாற்றத்தைத் தடுத்திடுங்கள்... நாள்முழுவதும் பற்சிதைவை எதிர்த்திடுங்கள்!

கால்கேட், 10க்கு 7 பேர்களில் வாய்துர்நாற்றத்தை உடனடியாக அகற்றுகிறது என்றும் ...





DC.G.42TM



பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி



நாற்பதாம் அத்தியாயம்

ஆனைமங்கலம்

நம் கதாநாயகிகளில் ஒருத்தியான வானதி அடிக்கடி நினைவு இழக்கும் வழக்கம் வைத்துக் கொண்டிருக்கிறாள் அல்லவா? இந்த ஒரு தடவை மட்டும் நேயர்கள் அதைப் பொறுக்கும்படி வேண்டுகிறோம். ஏனெனில், அவளுடைய நோய் நீங்கும் காலம் நெருங்கி விட்டது.

வானதிக்கு நினைவு சிறிது வந்தபோது முதலில் அவள் ஊசலாடுவது போலத் தோன்றியது. பின்னர் அவள், தான் வானவெளியில் பிரயாணம் செய்து கொண்டிருப்பதாக எண்ணினாள். "சிம் சிம்", "ஜிம் ஜிம்" என்று மழைத் தூற்றலின் சத்தம் கேட்டது. குளிர்ந்த காற்று 'குப்குப்' என்று உடம்பின்மீது வீசிற்று. அதனால் தேகம் சிலிர்த்தது. சரி, சரி, மேக மண்டலங்களின் வழியாக வானுலகிற்குப் போய்க் கொண்டிருக்கிறோம் என்று எண்ணினாள். சுற்றிலும் இருள் சூழ்ந்திருந்தது. இடையிடையே மின்னல் வெளிச்சம் 'பளிச்' சிட்டு மறைந்தது.

முதன்மந்திரி கடைசியாகக் கஜேந்திர மோட்சத்தைப் பற்றிக் கூறியதும், யானை அதன் துதிக்கையினால் தன்னைச் சுற்றி வளைத்துத் தூக்கியதும் இலேசாக நினைவு வந்தன. முதன் மந்திரி அநிருத்தர் கூறியபடியே நடந்து விட்டது. மண்ணுலகில் என் ஆயுள் முடிந்து இப்போது மோட்சத்துக்குப் போய்க்கொண்டிருக்கிறேன். மோட்ச உலகில் தேவர்களையும் தேவிகளையும் பார்ப்பேன்.

ஆனால் எல்லாத் தேவர்களிலும் என் மனத்துக்குகந்த தெய்வமாகிய அவரை அங்கே நான் பார்க்க முடியாது. மனத்துக்கு இன்பமில்லாத அத்தகைய மோட்ச உலகத்துக்குப் போவதில் என்ன பயன் ?

அடடே! இது என்ன ஊசலாட்டம்! உடம்பை இப்படித் தூக்கித் தூக்கிப் போடுகிறதே! ஆனால் தலை வைத்திருக்கும் இடம் மெத்தென்று சுகமாயிருக்கிறது. தாயின் மடியைப் போல் இருக்கிறது. ஏன் ? தாயைக் காட்டிலும் என்னிடம் பிரியம் வாய்ந்த இளைய பிராட்டியின் மடியைப் போலவும் இருக்கிறது!... ஆ! குந்தவைதேவி இப்போது பழையாறையில் என்ன செய்து கொண்டிருக்கிறாரோ? என்னைப் பற்றிய செய்தி அவருக்கு இதற்குள் எட்டியிருக்குமா?

மோட்ச உலகத்துக்கு வானவெளியில் மேக மண்டலங்களின் வழியாகப் பிரயாணம் செய்வது சரிதான். ஆனால் என்ன வாகனத்தில் பிரயாணம் செய்கிறேன்? சொர்க்க லோகத்துப் புஷ்பக விமானமா இது? அல்லது தேவேந்திரனுடைய ஐராவதம் என்ற யானையா? அப்பா! யானை என்றாலே சிறிது பயமாகத்தானிருக்கிறது! யானையும் அதன் துவண்டு வளையும் துதிக்கையும்! — அப்படித் துவளும் துதிக்கையில்தான் எவ்

வளவு பலம் அதற்கு? — போனது போயிற்று! இனி அதைப் பற்றிப் பயம் என்ன? கவலை என்ன?

ஆனால் தலை வைத்திருக்கும் இடம் இவ்வளவு பட்டுப்போல் மிருதுவாயிருக்கும் காரணம் யாது? சுற்றிலும் இருளா யிருப்பதால் ஒன்றும் தெரியவில்லை. கையினால் துளாவிப் பார்க்கலாம். உண்மையில், பட்டுத் திரைச் சீலைமாதிரிதான் தோன்றுகிறது. கொஞ்சம் ஈரமாயும் இருக்கிறது.

ஆகா! இது என்ன? என் கன்னங்களை யார் தொடுகிறது? மல்லிகைப் பூவைப் போன்ற மிருதுவான கரம் அல்லவா தொடுகிறது?

''வானதி! வானதி !''

இளையபிராட்டி குந்தவை தேவியின் குரல் அல்லவா இது? என்ன விந்தை! இப்படியும் இருக்க முடியுமா? அக்காவும் ஒருவேளை என்னுடன் சொர்க்கத்துக்கு வருகிறார்களா?

''வானதி! வானதி!''

''அக்கா! நீங்கள்தானா?''

''நான்தான்! வேறு யார்?''

''நீங்கள் கூட என்னுடன் மோட்ச உலகத்துக்கு வருகிறீர்களா?''

''மோட்ச உலகத்துக்குப் போக அதற்குள் உனக்கு என்னடி அவசரம்? இந்த உலகம் அதற்குள்ளே வெறுத்துப் போய் விட்டதா?''

''பின்னே, நாம் எங்கே போகிறோம்?''

''என்னடி? அதுகூட மறந்து போய் விட்டதா? ஆனைமங்கலத்துக்குப் போகிறோம் என்று தெரியாதா?''

''என்ன ஊர்? இன்னொரு தடவை சொல்லுங்கள்!''

''சரியாய்ப் போச்சு! ஆனைமங்கலத்துக்குப் போகிறோம். ஆனையின் முதுகில் ஏறிக் கொண்டு போகிறோம்!''

''ஐயோ! யானையா?''

''அடி பைத்தியமே! உன் உடம்பு ஏனடி நடுங்குகிறது! யானை என்ற பெயரைக் கேட்டாலே பயப்படத் தொடங்கிவிட்டாயா?''

''அக்கா! சற்று முன் நான் தூங்கிப் போய் விட்டேனா?''

''ஆமாம், ஆமாம்! யானையின்மேல் அம்பாரியில் பிரயாணம் செய்கிற சொகுஸில் ஆனந்தமாய்த் தூங்கி விட்டாய்!''

''ஆனந்தம் ஒன்றுமில்லை, அக்கா! பயங்கரமான கனவுகள் கண்டேன்!''

''அப்படித்தான் தோன்றியது. ஏதேதோ பிதற்றினாய்!''


''என்ன அக்கா பிதற்றினேன்?''

''காளாமுகர் என்றாய்! பலி என்றாய்! கஜேந்திர மோட்சம் என்றாய்! யானைத் துதிக்கை என்றாய்! அப்புறம் முதன் மந்திரிஅநிருத்தரைப் 'பாவி, பழிகாரன்' என்று திட்டினாய். அந்தப் பிரம்மராயருக்கு நன்றாய் வேண்டும்! நீ தூக்கத்தில் அவரைப் பற்றித் திட்டியதை யெல்லாம் அவர் கேட்டிருந்தால், பல நாள் தூங்கவே மாட்டார்!''

''அதெல்லாம் நடந்தது நிஜமாகக் கனவுதானா அக்கா!''

''நிஜமாகக் கனவா, பொய்யாகக் கனவா? எனக்கு என்ன தெரியும்? நீ என்ன சொப்பனம் கண்டாய் என்பதே எனக்குத் தெரியாது.''

''காளாமுகர்கள் என்னைப் பிடித்துக் கொண்டு போனார்கள். முதன் மந்திரி என்னிடம் இளவரசவரைப் பற்றி இரகசியத்தைக் கேட்டார். நான் சொல்ல மறுத்து விட்டேன். உடனே யானையை அழைத்து என்னைத் தூக்கி எறிந்து கொல்லும்படி கட்டளை யிட்



டார். அப்போது நான் கொஞ்சம் கூடக் கலங்காமல் தைரியமாக இருந்தேன். அக்கா! அப்போது உங்கள் ஞாபகமும் வந்தது—நீங்கள் அங்கே இல்லையே, என்னுடைய தைரியத்தைப் பார்ப்பதற்கு என்று.''

''போகட்டும், சொப்பனத்திலாவது அவ்வளவு தைரியமாக நடந்து கொண்டாயே! அதன் பொருட்டுச் சந்தோஷம்.''

'வானதி சற்றுச் சும்மா இருந்துவிட்டு, ''என்னால் நம்ப முடியவில்லை!'' என்றாள்.

''உன்னால் என்னத்தை நம்ப முடியவில்லையடி?''

''நான் கண்டதெல்லாம் கனவு என்று நம்ப முடியவில்லை.''

''சில சமயம் சொப்பனங்கள் அப்படித்தான் இருக்கும். நிஜமாக நடந்தது போலவே தோன்றும். நான்கூட அப்



படிப்பட்ட சொப்பனங்கள் பல முறை கண்டிருக்கிறேன்.''

''அப்படி என்ன சொப்பனம் கண்டிருக்கிறீர்கள்? சொல்லுங்களேன்?''

''ஏன் என் தம்பிகூடத்தான் அடிக்கடி என் கனவில் வருகிறான். இலங்கைக்கு அவன் போய் எத்தனை மாதங்கள் ஆயிற்று? ஆனால் இரவில் கண்ணை மூடினால் அவன் தத்ரூபமாய் என் கண் முன்னால் வந்து நிற்கிறான்...''

''நீங்கள் அதிர்ஷ்டசாலி அக்கா!''

''என் அதிர்ஷ்டத்தை நீதான் மெச்சிக்கொள்ள வேண்டும். அவன் கடலில் குதித்த செய்தி வந்ததிலிருந்து என் மனம் எப்படித் துடித்துக் கொண்டிருக்கிறதென்று உனக்குத் தெரியாது.''

''அப்படியானால் அதுவும் ஒரு பயங்கர சொப்பனம் அல்லவா? அவர் கடலில் மூழ்கியது மட்டும் நிஜமான செய்திதானா?''

''அதுவும் ஒரு துர்ச் சொப்பனமாக இருந்தால் எவ்வளவோ நன்றாயிருக்குமே? அது மட்டும் நிஜந்தானடி, வானதி! இளவரசன் அருள்மொழி கடலில் குதித்ததை நேரில் பார்த்தவர் வந்து சொன்னாரே! அதை நம்பாமல் என்ன செய்வது?''

''வாணர்குல வீரரைத்தானே சொல்கிறீர்கள்? அவர் இளவரசரைப் பற்றி வேறு ஏதும் சொல்லவில்லையா? ஓடக்காரப் பெண்ணைப் பற்றியும் நாகைப் பட்டினம் சூடாமணி விஹாரத்தைப் பற்றியும் ஏதும் சொல்லவில்லையா?''

''இதெல்லாம் உன் சொப்பனமாக இருக்க வேண்டும். ஆம், ஓடக்காரி பூங்குழலியைப் பற்றியும் நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்தைப் பற்றியும் நீ தூக்கத்தில் பிதற்றினாய்! புத்தபிக்ஷுணி ஆகப் போவதாகக் கூட உளறினாய்! அதற்குள் உனக்கு என்னடி இந்த உலக வாழ்க்கையின் மீது அவ்வளவு வெறுப்பு? எதற்காக நீ புத்த பிக்ஷுணி ஆக வேண்டும்?''

''அக்கா! என் மனசு உங்களுக்குத் தெரியாதா? அவரைக் கடல் கொண்டு விட்டது என்று கேட்ட பிறகு எனக்கு இந்த உலகில் என்ன வாழ்வு வைத்திருக்கிறது? சொப்பனத்தில் கண்டபடியே யானை என்னைத் துதிக்கையால் தூக்கி எறிந்து கொன்றிருக்கக் கூடாதா என்று தோன்றுகிறது.''

''அடி பாவி! நீயும் போய்விட்டால் என் கதி என்னடி ஆகிறது?''

''உங்கள் விஷயம் வேறு அக்கா! நீங்கள்....''

''ஆமாம், ஆமாம்! அருள்மொழியிடம் என்னைக் காட்டிலும் உனக்கு அதிக ஆசை! இல்லையா?''

''அக்கா! அப்படி ஒன்றும் நான் சொல்லவில்லை. தங்களைப் போல் நான் மனோதைரியம் உள்ளவள் அல்ல. அவர் இறந்து விட்ட பிறகு...''

''சீச்சீ! என்ன வார்த்தை சொல்கிறாய்? அவன் 'இறந்தான்' என்று நீ ஏன் சொல்ல வேண்டும்? உனக்கு நிச்சயமாய்த் தெரியுமா? பழுவேட்டரையர்களும், பழுவூர் ராணியும், பேதை மதுராந்தகனும் அப்படிச் சொல்லிக் கொம்மாளம் அடிப்பார்கள். நீயும் நானும் அப்படி ஏன் சொல்லவேண்டும்? அல்லது ஏன் நினைக்கத்தான் வேண்டும்?''

''பின்னே, என்ன சொல்கிறீர்கள்? அவர் சுழிக் காற்றில் கடலிலே குதித்த பிறகு... வேறு என்ன ஆகியிருக்க முடியும்? பிழைத்திருந்தால் இத்தனை நாள் வந்திருக்க மாட்டாரா?''

''அடி பைத்தியமே! கடலில் குதித்தால் அவனைக் கடல் கொண்டுவிட்டது என்று அர்த்தமா?''

''கரை ஏறியிருந்தால் இத்தனை நாள் தெரியாமலா இருக்கும்?''

''என் தகப்பனாரின் கதை உனக்குத் தெரியுமா? அவர் இளம் பிராயத்தில் பல மாத காலம் இருக்கும் இடமே தெரியாமலிருந்தது. தேடிப் பிடித்துக் கொண்டு வந்து இளவரசுப் பட்டம் கட்டினார்கள். என் பாட்டனார் அரிஞ்சய சோழர் தக்கோல யுத்தத்துக்குப் பிறகு அடியோடு மறைந்து விட்டார். பல வருஷங்களுக்குப் பிறகுதான் அவர் இருக்குமிடம் தெரிந்தது. நான் சொல்கிறேன், கேள், வானதி! காவேரித்தாய் ஒரு சமயம் என் தம்பியைக் காப்பாற்றிக் கரை சேர்த்தாள். அது மாதிரியே சமுத்திர ராஜனும் பொன்னியின் செல்வனைக் கரை சேர்த்திருப்பார். நமது கடற்கரைக்கும் இலங்கைத் தீவுக்கும் மத்தியில் எத்தனையோ சிறிய சிறிய தீவுகள் இருக்கின்றன. அத்தீவுகளில் ஒன்றில் அருள்மொழி ஒதுங்கியிருக்கக் கூடும் அல்லவா? அவனைத் தேடும் வேலையை நன்றாகச் செய்யும்படி தூண்டுவதற்காகவே நான் இந்தப் பிரயாணம் புறப்பட்டேன், உன்னையும் அழைத்துக் கொண்டு. உனக்கு இதெல்லாம் ஞாபகமே இல்லை போலிருக்கிறது. உன் பேரில் தப்பு இல்லை. இளவரசனைப் பற்றிய செய்தி வந்ததிலிருந்து உன் புத்தியே பேதலித்து விட்டது. இப்போதுதான் கொஞ்சம் தெளிவாகப் பேச ஆரம்பித்திருக்கிறாய்!''

வானதி சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு, ''அக்கா! நாம் எந்த ஊருக்குப் போகிறோம் என்று சொன்னீர்கள்?'' என்றாள்.

''ஆனை மங்கலத்துக்கு.''

''அது எங்கே இருக்கிறது?''

'' நாகைப் பட்டினத்துக்கு அருகில் கடற்கரை ஓரத்தில் இருக்கிறது. நீ ஏதோ சொப்பனம் கண்டு உளறுகிறாயே? அந்தச் சூடாமணி விஹாரத்துக்கும் ஆனைமங்கலத்துக்கும் கொஞ்ச தூரந் தான். நீ புத்த பிக்ஷுணியாவதாயிருந் தால்கூட அதற்கும் சௌகரியமாகவே யிருக்கும். ஆனால் நீ மணிமேகலையாவ தற்கு அவசரப்பட வேண்டாம். பொன் னியின் செல்வனைப் பற்றித் திடமான செய்தி கிடைத்த பிறகு முடிவு செய்து கொள்ளலாம்!'' என்று குந்தவை கூறி விட்டு இலேசாகச் சிரித்தாள்.

''அக்கா! இது என்ன நீங்கள் சிரிக் கிறீர்கள்! சிரிப்பதற்கு எப்படி உங்க ளுக்கு மனம் வருகிறது? இளவரசர் பிழைத்திருப்பார் என்று உங்களுக்கு அவ்வளவு நம்பிக்கை இருக்கிறதா?''

''நம்பிக்கை இல்லாவிட்டால் நான் இப்படி இருப்பேனா. வானதி! நான் பார்த்து வைத்திருக்கும் ஜோசியங்கள் எல்லாம் பொய்யாகப் போவதில்லை. என் தம்பியின் கையில் உள்ள சங்கு சக்கர ரேகைகளும் பொய்யாகப் போவ தில்லை. இதுவரையில் எல்லாம் சரி யாகத்தான் நடந்து வந்திருக்கிறது.''

''என்ன சரியாக நடந்து வந்திருக் கிறது? எனக்கு ஒன்றும் தெரியவில் லையே!'' என்றாள் வானதி.

''உனக்கு ஏன் தெரியப் போகிறது? நீதான் சித்தப்பிரமை பிடித்து அலை கிறாயே? அருள்மொழிக்கு இளம் வயதில் பல கண்டங்கள் நேரும் என்று சொன்னார்கள். அதன்படி நேர்ந்து வந் திருக்கின்றன. பின்னே, மற்றவையும் நடந்துதானே ஆக வேண்டும்?''

''மற்றவை என்றால்?''

''எத்தனையோ தடவை நான்சொல்லி யாகிவிட்டது. நீயும் கேட்டிருக்கிறாய். மறுபடியும் எதற்காகச் சொல்லச் சொல் கிறாய்? பேசாமல் தூங்கு! பொழுது விடிந்து பார்த்துக் கொள்ளலாம்.''

வானதி மீண்டும் சிறிது நேரம் சிந் தனையில் ஆழ்ந்திருந்து விட்டு ''இராத் திரியெல்லாம் யானை மீது பிரயாணம் செய்யப் போகிறோமா அக்கா? எதற் காக?'' என்று கேட்டாள்.

''அதுகூடவா உனக்கு ஞாபகம் இல்லை? பகலில் நாம் பிரயாணம் செய் தால் வழியில் உள்ள ஊர்களில் எல்லாம் ஜனங்கள் நம்மைச் சூழ்ந்து கொள் வார்கள். 'பொன்னியின் செல்வன் எங்கே?' 'சோழ நாட்டின் தவப் புதல் வன் எங்கே?' என்று கேட்பார்கள். பழு வேட்டரையர் மீது குற்றம் சுமத்து வார்கள். பழுவூர் இளைய ராணியைச் சபிப்பார்கள். சக்கரவர்த்தியைக் கூட நிந்தித்தாலும் நிந்திப்பார்கள். அதை யெல்லாம் நாம் எதற்காகக் காதினால் கேட்க வேண்டும்? நான்தான் ஜனங்களை அப்படியெல்லாம் தூண்டிவிட்டதாகப் பழுவேட்டரையர்கள் சொன்னாலும் சொல்வார்கள். எதற்காக அந்த வம்பு என்றுதான் இராத்திரியில் புறப் பட்டேன். இதையெல்லாம் பழை யாறையிலிருந்து புறப்படும் போதே உனக்குச் சொன்னேன். மறுபடியும் கேட்கிறாய். நல்ல சித்தப் பிரமை பிடித்து உன்னை ஆட்டுகிறது! சூடா மணி விஹாரத்துப் புத்த பிக்ஷுக் களிடம் சொல்லித்தான் உன் சித்தப் பிரமையைப் போக்க வழி தேடவேண் டும்! போனால் போகட்டும்; நீ இப் போது தூங்கு! எனக்கும் தூக்கம் வரு கிறது. இந்த ஆடும் குன்றின் மீது உட்கார்ந்தபடியேதான் இன்று இரவு நாம் தூங்கியாக வேண்டும்'' என்றாள் இளையபிராட்டி.

வானதி இனி ஒன்றும் பேசக்கூடாது என்று தீர்மானித்து மௌனமானாள். அவளுடைய உள்ளம் ஒரே குழப்பமாக இருந்தது. அன்று நடந்ததையெல்லாம் ஒவ்வொன்றாக நினைத்துப் பார்த்துக் கொண்டாள். எல்லாம் உண்மையாக நிகழ்ந்த சம்பவங்களாகவே தோன்றின. 'எனக்குச் சித்தப்பிரமை ஒன்று மில்லை; அக்காதான் என்னைப் பைத் தியமாக அடிக்கப் பார்க்கிறாள்' என்று

சில சமயம் எண்ணினுள். யானை தன்னைத் துதிக்கையினுல் சுற்றித் தூக்கிய பிறகு என்ன நடந்தது என்பதை எண்ணி எண்ணிப் பார்த்தாள். ஒன்றும் நினைவுக்கு வரவில்லை. என்னதான் நடந்திருக்கும்? தன் உயிருக்கே ஆபத்தான அந்த வேளைக்கு அக்கா சரியாக அங்கே வந்து தன்னைக் காப்பாற்றியிருக்க வேண்டும். அக்காவைப் பார்த்ததும் முதன் மந்திரி நடுநடுங்கிப் போயிருக்கவேண்டும். ஆயினும் யானைத் துதிக்கையின் பிடியிலிருந்து காப்பாற்றுவது என்பது அவ்வளவு சுலபமான காரியமா?... ஒருவேளை இவ்வாறு இருக்குமோ?... தன்னைத் துதிக்கையால் கட்டித் தூக்கிய யானைதாஞ இது? மேலே அம்பாரி இருந்தது அந்த இருட்டிலும் சிறிது தெரிந்தது. இளைய பிராட்டி அந்த அம்பாரியிலேயே இருந்திருக்கலாம். யானை துதிக்கையினுல் தூக்கித் தன்னைத் தூர எறிவதற்குப் பதிலாக மேலே அம்பாரியில் விட்டிருக்கக்கூடும். அம்மாதிரி செய்ய யானைகள் பழக்கப் பட்டிருப்பதை வானதி பல முறை பார்த்ததுண்டு. முதன் மந்திரியும் இளையபிராட்டியும் சேர்ந்து இம்மாதிரி சூழ்ச்சி செய்திருக்கிறார்களோ? எதற்காக? நான் தனியாகப் பிரயாணம் செய்வதைத் தடுக்கும் பொருட்டுத்தான். என்னுடைய தைரியத்தைச் சோதிப்பதற்காகவும் இளைய பிராட்டி இம்மாதிரி செய்திருக்கலாம். பொம்மை முதலையை என் அருகிலே விட்டு ஒரு சமயம் சோதனை செய்யவில்லையா? எப்படியாவது இருக்கட்டும்; நான் இன்று தனிவழியே புறப்பட்டது பெருந் தவறு. இப்போது அக்காவின் மடியில் தலையை வைத்துப் படுத்திருப்பது எவ்வளவு நிம்மதியாயிருக்கிறது? அக்காவின் வார்த்தைகள் எவ்வளவு தைரியமும் உற்சாகமும் அளிக்கின்றன! பொன்னியின் செல்வர் எங்கேயோ பத்திரமாக இருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை. ஒருவேளை இந்தப் பிரயாணத்தின் முடிவில் அவரைச் சந்திப்போமா?... இவ்வாறு எண்ணியபோது வானதியின் உள்ளத்தில் அளவில்லாத கிளர்ச்சி ஏற்பட்டது. மனச் சோர்வுக்கு நேர்மாருன உற்சாக இயல்பு இப்போது அவளை ஆட்கொண்டது.

யானை கம்பீரமாக நடந்து சென்று கொண்டிருந்தது.

யானைமேல் அம்பாரி ஆடி அசைந்து கொண்டிருந்தது.

முன்னும் பின்னும் காவற் படைகள் போய்க் கொண்டிருந்தன.

மழை சிறு தூற்றலாயிற்று. பிறகு தூற்றலும் நின்றது.

வானத்தில் மேகக் கூட்டங்கள் சிதறிக் கலைந்தன.

நட்சத்திரங்கள் எட்டிப் பார்த்தன.

வானதி யானையின் அம்பாரிக் கூரை வழியாக மேலே வானத்தில் தெரிந்த நட்சத்திரங்களைப் பார்த்தாள்.

வான வெளியில் சஞ்சரிக்கும் நட்சத்திரங்களுக்கும் பூலோகத்தில் வாழும்

கல்யாணக் கவிதை

திருமணத்துக்கு இன்றியமையாத சடங்கு ஸப்தபதி. இது நடைபெருவிட்டால் விவாகம் சட்டப்படி அமுலாகாது. நாடு முழுவதும் இன்றும் இதுவே சட்டம். சென்ற மாதம் ஸப்தபதி நடைபெருத காரணத்தால் ஒரு விவாகம் ரத்து ஆகிவிட்டதென்று டில்லி உயர்நீதி மன்றம் முடிவு கூறிற்று.

இவ்வளவு முக்கியமான சடங்கின் பொருள் என்ன?

ஏழடியும் வைத்துநீ தோழி
யென வருவாய்,
தோழமையே கொண்டுநாம்
வாழவே இவ்வுறுதியாம்.
இணைபிரிய லாகாது நாமிருவர்
தோழீ !
பிணைந்திருத்தல் நன்று நாம்
வலிமைக்கொரு இன்பமாம்
வானமே நான் எனில்
மாநிலம் நீயே
கானமே நான் எனில்
பாடலும் நீயே



உயிர்தரு வேகம் நானே ஆயின்
உயிர்பெறு தேகம் உனதேயன்றே ?
மனமும் சொல்லும் நானும் நீயும்
இனமே நீ என் துணையாய் வருவாய் !

மணமகன் பெண்ணைக் கைப்பிடித்து ஏழடி நடத்திச் செல்லுகிருன். ஆகையால் இதற்கு 'ஸப்தபதி' என்று பெயர். ஒவ்வோர் அடிக்கும் ஒவ்வொரு பொருள்: இன்பம், வலிமை, கடமை, நலம், செல்வம், பருவங்கள், வந்தனை ஆக ஏழு நோக்கங்கள்.

யாரோ ஒரு முனிவர் மூவாயிரம் வருடங்களுக்கு முன் தொகுத்த சொற்களே ஸப்தபதி.

சட்டப்படி விவாகத்தில் இதற்கு முதலிடம் கொடுத்தனர் ஆங்கிலேயர்.

— கே. எஸ். ஸ்ரீனிவாசன்

மனிதர்களின் வாழ்க்கைக்கும் ஏதேனும் சம்பந்தம் இருக்க முடியுமா என்று அதிசயப் பட்டாள்.

பொன்னியின் செல்வர் உதித்த நட்சத்திரத்துக்கும் தான் பிறந்த நட்சத்திரத் துக்கும் உள்ள பொருத்தத் தைப் பற்றிச் சோதிடர்கள் சொல்வதில் ஏதேனும் உண்மை இருக்குமா?

தன் வயிற்றில் பிறக்கும் மகன் மூன்று உலகத்தையும் ஆளப் போகிறான் என்று சோதிடர்களுடன் சேர்ந்து அக்காவும் சொல்வது உண்மை யாகுமா?

வால் நட்சத்திரம் தோன்று வது ஏதோ உற்பாதத்துக்கு அறிகுறி என்று ஜனங்கள் பேசிக் கொள்கிறார்களே, அது எவ்வளவு தூரம் நிஜமா யிருக்கும்?

அப்படி என்ன உற்பாதம் நடக்கும்?

பொன்னியின் செல்வர் கட லில் மூழ்கியதுதான் அந்த உற்பாதமா?

அக்கா கொண்டுள்ள நம் பிக்கையின்படி அவர் திரும்பி வருவாரா?

அப்படியானால் வேறு என்ன உற் பாதம் நடக்கக் கூடும்?....

கொலை அல்ல; கலைதான்!



பயப்படாதீர்கள்! உயிருள்ள பெண்தான்; ஆனால் அவளை அடிக்க ஓங்கிய கை சிலையே! ஜெர்மானிய புகைப்படக் கலைஞர் ஒருவர் எடுத்த இப் படம் விநோதப் புகைப்படக் கண்காட்சி யில் அனைவர் கவனத்தையும் கவர்ந்தது. - பூ.பி.எஸ்.

இம்மாதிரி யெல்லாம் வெகு நேரம் சிந்தனை செய்து கொண்டிருந்த பிறகு வானதி இலேசாகக் கண்ணயர்ந்தாள்.

அவள் கண் விழித்துப் பார்த்தபோது பொழுது புலர்ந்திருந்தது.

புள்ளினங்கள் உதய கீதம் பாடின.

இளையபிராட்டியும் விழித்துக்கொண் டிருந்தாள். அம்பாரியின் பட்டுத் திரையை விலக்கிக் கொண்டு வெளியே பார்த்து, "இதோ ஆனைமங்கலம் வந்து விட்டோம். சோழ மாளிகையின் வாச லுக்கே வந்து விட்டோம்" என்றாள்.

இரு இளவரசிகளும் யானை மீதிருந்து இறங்கினார்கள்.

மாளிகைக்குள்ளே பிரவேசித்தார்கள். அங்கே ஆயத்தமாயிருந்த அரண்மனைத் தாதிமார்கள் இளவரசிகள் இருவரை யும் மாளிகையின் எல்லாப் பகுதிகளுக் கும் அழைத்துச் சென்று காட்டினார்கள்.

கடைசியில் மாளிகையின் கீழ்ப்புறத் துக்கு வந்து அங்கிருந்த அலங்கார முன் றின் முகப்பில் நின்றபடி கடலுடன் கலந்த கால்வாயைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

"அக்கா! இளவரசரைத் தேடுவ தற்கு ஏற்பாடு செய்யப் போவதாகச் சொன்னீர்களே? என்ன செய்திருக் கிறீர்கள்?" என்றாள் கொடும்பாளூர் இளவரசி.

"ஆமடி வானதி! தேடுவதற்கு ஏற் பாடு ஆரம்பமாகிவிட்டது. அதோபார்! ஒரு படகு வருகிறது. அதில் வருகிற வர்கள் ஒருவேளை ஏதேனும் செய்தி கொண்டு வந்தாலும் கொண்டு வரு வார்கள்!" என்றாள் குந்தவை.

வானதி திரும்பிப் பார்த்தாள். சற் றுத் தூரத்தில் மரக் கிளைகளின் இடை வெளியில் ஒரு சிறிய படகு வருவது தெரிந்தது. அதில் இருவர் இருந் தார்கள்.

"அக்கா! அந்தப் படகில் வருவது யார்?" என்று வானதி கேட்டாள்.

"படகு தள்ளுகிறவன் சேந்தன் அமுதன். தஞ்சாவூர்ப் பாதாளச்சிறையி லிருந்து நாம் அன்றொரு நாள் விடுதலை செய்தோமே, அவன்! உட்கார்ந்திருப் பவள் பூங்குழலி!"



"எதெதற்கோ உச்ச வரம்பு கொண்டு வருகிறீர்களே! ஒரு பெண் மாசத்துக்கு மூன்று பவுடர் டப்பாக்களுக்கு மேல் உபயோகிக்கக் கூடாதுன்னு ஒரு சட்டம் போடக் கூடாதா?"

வானதிக்கு உடம்பு சிலிர்த்தது.

"அக்கா! நான் அந்தப் பெண்ணைப் பார்க்க விரும்பவில்லை. உள்ளே போகிறேன்!" என்றாள்.

"என்னடி அவளைக் கண்டு அவ்வளவு பயம்! உன்னை அவள் விழுங்கி விடுவாளா, என்ன? நான் பார்த்துக் கொள்கிறேன். நீ பயப்படாமல் சும்மா இரு!" என்றாள் குந்தவை.

படகு நெருங்கிவந்துகொண்டிருந்தது.

* * *

யானைத் துதிக்கையில் அகப்பட்ட வானதி எப்படி உயிர் பிழைத்தாள்? இதைக் குறித்து அவள் இரண்டாவதாகச் செய்த ஊகந்தான் சரியானது. யானை துதிக்கையைச் சுழற்றி அவளைத் தூர எறியவில்லை. மேலே தூக்கி அம்பாரியின் அருகில் இலேசாக வைத்தது. அங்கே திரை மறைவில் ஆயத்தமாயிருந்த குந்தவை அவளை வாரி அணைத்து மடியில் போட்டுக் கொண்டாள்.

பிறகு முதன் மந்திரியும் பல்லக்கில் ஏறினார். "தேவி! போய் வரட்டுமா? உன் பிரயாணம் இனிதாயிருக்கட்டும். அதன் முடிவும் இனிதாயிருக்கட்டும்!" என்று சொன்னார்.

"ஐயா! தங்கள் உதவிக்கு மிக்க நன்றி!" என்றாள் இளையபிராட்டி.

"கொடும்பாளூர்க் கோமகளைக் கோழை என்றாயே? அவளைப் போல் நெஞ்சழுத்தக்காரப் பெண்ணை நான் பார்த்ததேயில்லை."

"முன்னேயெல்லாம் அவள் கோழையாகத்தானிருந்தாள். கொஞ்சநாளாகத்தான் அவளுக்கு இவ்வளவு தைரியம் வந்திருக்கிறது" என்றாள் குந்தவை.

"எல்லாம் உன்னுடைய பயிற்சிதான். அந்தப் பெண் என்னைப் பயங்கர ராட்சதன் என்று எண்ணியிருப்பாள். போனால் போகட்டும். என்னைப் பற்றி எவ்வளவோ பேர் எத்தனையோவிதமாக எண்ணிக் கொண்டிருப்பார்கள். நான் அதற்காக வெல்லாம் கவலைப்படுவதில்லை. போய் வருகிறேன், அம்மா!"

இவ்விதம் முதன் மந்திரி கூறியதும் அவருடைய பல்லக்கும் நாலு வீரர்களும் மட்டும் மேற்குத் திசையில் செல்ல, யானை குதிரை பரிவாரங்கள் எல்லாம் கிழக்கு நோக்கிச் சென்றன.

* * *

முதன் மந்திரியின் பல்லக்குப் புறப்பட்ட சிறிது நேரத்துக்கெல்லாம் மழை பிடித்துக் கொண்டது. மழையைப் பொருட்படுத்தாமல் சிவிகை தூக்கிய ஆட்களும் சிவிகையைக் காத்த வீரர்களும் சென்று கொண்டிருந்தார்கள்.

மழை குறைந்து தூற்றல் நிற்கும் சமயத்தில் திடீரென்று பல்லக்கு நின்றது.

"ஏன் நிற்கிறீர்கள்?" என்று முதன் மந்திரி கேட்டார்.

"சுவாமி! அந்த மரத்தடியில் யாரோ கிடப்பது போலத் தெரிந்தது!" என்றான் முன்னால் சென்ற காவலர்களில் ஒருவன்.

முதன்மந்திரி அவன் சுட்டிக் காட்டிய திசையை உற்றுப் பார்த்தார். பளிச்சென்று ஒரு மின்னல் மின்னியது.

"ஆமாம்; யாரோ கிடக்கிறதாகத்தான் தெரிகிறது. இறங்கிப் பார்க்கிறேன்" என்றார் முதன் மந்திரி.

சிவிகையிலிருந்து இறங்கி அருகில் சென்ற போது மரத்தடியில் கிடந்த மனிதன் முனகும் சத்தம் கேட்டது.

"யார் இங்கே?" என்றார் அநிருத்தர்.

அதற்குப் பதிலாக, "முதன் மந்திரி போலிருக்கிறதே!" என்ற ஈனமான குரல் கேட்டது.

"ஆம்; கேட்பது முதன் மந்திரிதான்! இங்கே கிடப்பது யார்?"

"ஐயா! தெரியவில்லையா? நான்தான் மதுராந்தகன்!"

"இளவரசே! இது என்ன கோலம்? இங்கே எப்படி வந்தீர்கள்? என்ன நேர்ந்தது?" என்று பரபரப்புடன் கேட்டுக் கொண்டே முதன் மந்திரி, மதுராந்தகரைத் தூக்கி நிறுத்த முயன்றார்.

(தொடரும்)



ராமாயணம்

ராஜாஜி



ஜடாயுவின் பேச்சைக் கேட்ட ராவணன் சினம் கொண்டு பறவையான ஜடாயுவைத் தாக்கினான்.

பெரும் காற்றுக்கும் மேகக் கூட்டத்துக்கும் நடக்கும் யுத்தத்தைப் போல் ஓர் அற்புத யுத்தம் அந்த வனத்தில் நடந்தது. சிறகு கொண்ட மலையைப்போல் ஜடாயு தாங்காத கோபத்துடன் யுத்தம் செய்தான். கொல்லும் நாராசங்களை ராவணன் விடுத்தான். அவற்றை யெல்லாம் கழுகரசன் தடுத்து ராவணனுடைய உடலைக் கீறிக் கிழித்தான். அரக்கன் ரோஷம் கொண்டு சர்ப்பங்கள் போன்ற மிகவும் கூரிய அஸ்திரங்களைப் பறவையின் மேல் விடுத்தான்.

கழுகரசன் மிகவும் துன்பப்பட்டான். தேரிலிருந்த சீதையைப் பார்த்தான். கண்ணீர் பெருகிய அவள் கண்களையும் பார்த்தான். அந்தக் காட்சியைச் சகிக்காமல் ராவணனைப் பலமாகத் தாக்கினான். தன் உடலில் உண்டாகிய காயங்களையாவது அரக்கன் செலுத்திய அம்புகளையாவது கொஞ்சமும் கவனியாமல் தாக்கினான். தன் சிறகுகளினால் அரக்கன் தலையிலிருந்த ரத்தினக் கிரீடத்தையும், அவன் கையிலிருந்த வில்லையும் ஒடித்துத் தள்ளினான்.

இந்த அவமானத்தைத் தாங்காமல் பெரும் கோபம் அடைந்த ராவணன் இன்னொரு வில்லெடுத்துச் சரமாரி பொழிந்தான். பக்ஷிராஜன் தன் சிறகுகளால் அந்த அம்புகளை உதறித் தள்ளி அரக்கன் பிடித்த இரண்டாவது வில்லையும் ஒடித்துத் தள்ளினான்.

அதன்மேல் ஜடாயு தேரைத் தாக்கி, பிசாச முகங்களைக் கொண்ட கோவேறு கழுதைகளையும் சாரதியையும் கொன்று தேரைச் சுக்குநூறாகப் பொடி செய்து விட்டான். சீதையைப் பிடித்துக் கொண்டே ராவணன் பூமியில் விழுந்தான். வாகனமிழந்து, சாரதியையும் இழந்து அரக்கன் பூமியில் விழுந்த போது, பூதங்கள் எல்லாம், 'சரி, சரி' என்று பக்ஷிராஜனைப் பாராட்டின.

வயோதிக நிலையும், யுத்தத்தின் சிரமமும் காயங்களும் எல்லாம் சேர்ந்து ஜடாயுவைக் களைப்படையச் செய்தன. ஒரு நிமிஷம் தள்ளாமல் நின்றான். அதைக் கண்டு ராவணன் இதுதான் சமயம் என்று சீதையைப் பிடித்திருந்த வண்ணமே தோன்றி அப்படியே ஆகாயத்தில் கிளம்பிப் போகப் பார்த்தான். உடனே பக்ஷி

ராஜன் மறுபடியும் ராவணனைத் தாக்கி நிறுத்தி, "அரக்கனே! திருடனைப் போல் ஓடுகிறாயா, நீசனே! நீ நாசமாகப் போவது நிச்சயம். நின்று யுத்தம் செய்! யுத்தத்தில் உன் தம்பி கரன் அடைந்த கதியை நீயும் அடைவாய். கோழையைப் போலும் திருடனைப் போலும் ஓடித் தப்பப் பார்க்காதே!" என்று சொல்லி அவனுடைய முதுகின் மேல் திடீரென்று மேலிருந்து இறங்கிக் கால் நகங்களாலும், கூரிய மூக்காலும் கொத்தியும், கீறியும் ரணமாக்கி ராவணனை மிகவும் துன்புறுத்தினான்.

இதைத் தாங்க முடியாமல் ஒரு பக்கம் சீதையைப் பிடித்துக் கொண்டே தன் முதுகின் மேலிருந்த ஜடாயுவைத் தன் கைத்தலங்களால் அடித்து விரட்டப் பார்த்தான். சீதையைப் பிடித்த கைகளைப் பக்ஷி ராஜன் ஒன்றன் பின் ஒன்றாகக் கொத்திப் பிடுங்கி எறிந்தான்.



பிடுங்கி எறிய எறிய ராவணனுக்குப் புதுக் கைகள் புற்றிலிருந்து பாம்பு வருகிற மாதிரி முளைத்து வந்தன. வலி தாங்காமல் கோபம் மேலிட்டு ராவணன் சீதையைக் கீழே விட்டு விட்டு ஜடாயுவைக் கைகளால் அடித்தும் கால்களால் உதைத்தும் பலமாகத் தாக்கினான்.

இந்தக் கோர யுத்தம் வெகு நேரம் நடந்தது. வீரனாகிய ஜடாயு மிகவும் கஷ்டப்பட்டான். பிறகு ராவணன் தன் கத்தியை எடுத்துப் பக்ஷி ராஜனுடைய சிறகுகளையும் கால்களையும் கருணையின்றி வெட்டினான். பக்ஷி அதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியாமல் தரையில் குற்றுயிராக வீழ்ந்தது.

ஜானகி குதித்து ஓடித் தரையில் வீழ்த்தப்பட்ட பறவையை இறுகத் தழுவிக் கொண்டு, "என் அப்பனே! எனக்காக உயிர் விட்டாயே! என் நாதருக்கு மற்றொரு தகப்பனாக வந்தாயே? இறந்தாயே!" என்று புலம்பினாள்.

மகா சௌரியத்தோடு யுத்தம் செய்து விட்டுக் காட்டுத் தீ எரிந்து அணைந்து விட்டது போல் தரையில் விழுந்த பறவையைப் பார்த்து ராவணன் திருப்தியடைந்தான். சீதையோ பறவையை அணைத்துக் கொண்டு, "இறந்த என் மாமனார் தசரத

ராஜா உயிர் பெற்றது போல் யுத்தம் செய்தாயே!'' என்று புலம்பினாள்.

பிறகு அரக்கன் அவளைத் தூக்கிப் போகச் சென்றான். ''ஐயோ!'' என்று கதறிக் கொண்டு அவள் இங்குமங்கும் அனாதையாக ஓடினாள். அங்கிருந்த மரங்களைப் பிடித்துக் கொண்டு, ''நாதா! எங்கிருக்கிறீர்கள்? லக்ஷ்மணா! எங்கிருக்கிறாய்? ஓடி வாருங்கள்!'' என்று புலம்பினாள். ராக்ஷஸன் அவளைப் பலாத்காரமாகத் தூக்கிப் பிடித்துக் கொண்டு ஆகாயத்தில் கிளம்பினான்.-

மேலே கருமேகத்தை அடுத்த மின்னலைப் போல் பிரகாசித்தாள் சீதை. அரக்கன் அவளைத் தூக்கிச் செல்லும் போது காட்டுத் தீ பற்றி எரிந்து கொண்டிருக்கிற ஒரு மலை போல் காணப்பட்டான். வைச்ரவணனுடைய தம்பியாகிய ராவணனின் தேகம் ஆகாயத்தில் வேகமாகச் செல்லும் போது சீதையின் பிரகாசத்தால் ஒரு தூமகேதுவைப் போலிருந்தது.

இப்படி ஜானகி அரக்கன் கையில் அகப்பட்டு அபகரிக்கப்பட்டாள். அச்சமயம் சூரியன் தன் பிரகாசத்தை இழந்தான். இருள் சூழ்ந்தது.

சர்வபூதங்களும் புலம்பின. ''தர்மம் அழிந்தது; சத்தியம் மறைந்தது; நீதி நெறி, கருணை யெல்லாம் ஒழிந்தன'' என்று பிரலாபித்தன.

தரையிலிருந்து பார்த்த ஊமைப் பிராணிகளும் கண்களில் நீர் சொரிந்தன.

ராவணன் ஆகாயத்தில் கருணையின்றிப் பிராட்டியைப் பிடித்துக் கொண்டு தன் விநாசத்தை நோக்கி வேகமாகச் சென்றான். சீதை சூடியிருந்த மலர்களின் இதழ்கள் சிந்திச் சிதறியவை, ராவணனுடைய சம்பத்து சிதறி விழும் என்று சொல்லிக் கொண்டு விழுவது போல் காணப்பட்டன.

51. சிறைவாசம்

கோபத்தாலும் துயரத்தாலும் வாட்டப்பட்ட சீதை சிவந்துபோன தன் கண்களை நன்றாகத் திறந்து அரக்கன் முகத்தைத் தைரியமாகப் பார்த்துச் சொன்னாள்:

''நீசனே! உன் பெயரையும் குலத்தையும் வீரப் பிரதாபங்களையும் என்னிடம் மிகக் கம்பீரமாகச் சொல்லிக் கொண்டு எவ்வளவு பெரிய சூரனாக நடந்து கொண்டாய்? வெட்கமில்லையா உனக்கு? பக்கத்தில் யாருமில்லாத சமயம் பார்த்து ஒரு ஸ்திரீயைத் தூக்கி ஓடும் சூரனே! எத்தனை பெரிய வீரன் நீ! ராமன் இல்லாத சமயம் பார்த்து வெட்கமில்லாமல் திருட்டு வேலை செய்தாய்!


''என்னைக் காப்பாற்றப் பார்த்த கிழப் பறவையைக் கொன்ற சூரனே! ஆசிரமத்தில் என்னென்ன வீரமும் சாமர்த்தியமும் பேசினாய்? யுத்தம் செய்யத் தைரியமில்லாமல் திருட்டு வேலை செய்த உன் புகழை உலகம் என்றென்றும் புகழுமல்லவா? நீசனே! நீ பெருமையாகச் சொன்ன உன் குலத்துக்கே அவமானம் இழைத்தாய்!

''நீ என்ன சம்பாதிக்கப் போகிறாய்? என்னை இப்படி எடுத்துக் கொண்டு வேகமாக ஓடிப் போய் எத்தனை நாள் பிழைத்திருக்கப் போகிறாய்? வெகு சீக்கிரம் என் நாதனுடைய வில்லிலிருந்து பாயும் சரங்கள் உன் உடலில் புகுந்து உன் உயிரைத் தூக்கிப் போகப் போகின்றன. என் நாதன் பார்வையில் நீ சிக்கினால் போதும். அப்போதே நீ மாண்டாய். தப்பிப் பிழைத்தாய் என்று எண்ணாதே! நிச்சயமாய் மாள்வாய். உன் அயோக்கியப் பிரயத்தனமெல்லாம் உனக்கு என்ன நன்மை தரப் போகிறது? ஒருநாளும் என்னை நீ அடைய மாட்டாய். உயிர் நீப்பேனே ஒழிய உனக்கு நான் வசப்பட மாட்டேன். நிச்சயமாகக் கொல்லப் படுவாய். வெகு சீக்கிரமாகவே நரகத்தில் வைதரணீ நதியைப் பார்க்கப் போகிறாய். பழுக்கக் காய்ச்சிய இரும்புப் பிரதிமை உனக்காகக் காத்திருக்கிறது. அதைத் தழுவிக் கொள்ளப் போகிறாய். இரும்பு முட்கள் கொண்ட மரமும் உனக்காகவே நரகத்தில் இருக்கிறது. ஒரு முகூர்த்தத்தில் ஜனஸ்தானத்தில் உன்னுடைய பதினாலாயிரம் அரக்கர்களைத் தேரின்றி ஒருவராக நின்று அழித்த என் ராமன் உன்னை விடப் போகிறாரா? உனக்காகக் காத்திருக்கும் யமனிடம் உன்னைச் சீக்கிரம் ஒப்புவிப்பார்.''

இவ்வாறு சீதை பலவிதமாக இகழ்ந்தும் தாக்கியும் எச்சரித்தும் சொன்னதை அரக்கன் காதில் போட்டுக் கொள்ளாமல் ஆகாய மார்க்கமாக லங்கையை நோக்கி வில்லினின்று பாயும் அம்பைப் போலத் தேரின்றிப் பறந்தே விசையாகச் சென்றான்.

பல மலைகளையும் ஆறுகளையும் தாண்டிச் செல்லும்போது வழியில் ஒரு மலை மேல் யாரோ நிற்பதைக் கண்டாள் சீதை. அப்பொழுது மேலுத்தரியத்தை எடுத்துத் தன் ஆபரணங்களை அதில் முடித்துக் கீழே போட்டாள். ராமன் தன்னைத் தேடுவார்; தன்னை எடுத்துப் போன வழி அவருக்குத் தெரிய வேண்டும் என்று இவ்வாறு செய்தாள். அழுது கொண்டிருந்த அவளைக் கீழே மலைமேலிருந்த வானரங்களும் பார்த்தன. (தொடரும்)

காணக் கிடைக்காத



தங்கம்

ஜெகசிற்பியன்

அத்தியாயம் நான்கு

வாடகைக்கு எடுத்துப் போயிருந்த ஒரு சைக்கிளைக் கொண்டுவந்து சேர்த்து விட்டு அதற்கான பணத்தைக் கொடுத்தான் பூக்காரன் ஒருவன். மணி கணக்கிடுவதில் ஓர் அரை மணி நேரத்தை அவன் குறைத்துச் சொல்ல, ஏழுமலை அதை ஒத்துக் கொள்ளாமல் கண்டிப்பாகக் காசு கேட்க, இருவருக்கும் வாக்குவாதம் மூண்டு அப்புறம் ஒரு இனுசாகச் சமரசம் ஆகியது. கால் மணி நேரத்துக்கு மட்டும் காசை வாங்கிக்கொண்ட ஏழுமலை, பூக்காரன் போனதும் அவனை வாயில் வந்தபடி திட்ட ஆரம்பித்து விட்டான். இம்மாதிரி தகராறுகள் அங்கே அடிக்கடி நடக்குமாதலால் அருணகிரி இதிலொன்றும் தலையிட்டுக் கொள்ளவில்லை.

கடை வாசலில் ஸ்டூலைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்த ஏழுமலை சற்று நேரம் அருணகிரியையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். இந்தச் சமயம் அருணகிரிக்கு ஏதோ ஓர் ஆயுதம் தேவைப்படவே, செய்து கொண்டிருந்த வேலையை அப்படியே போட்டு விட்டு எழுந்து கடைக்குள் வந்தான்.

''ஏண்டா தம்பி! நீ எது வரையில் படிச்சிருக்கிறே?'' என்று கண்களைப் பாதி இடுக்கிக் கொண்டு சாதாரணமாகக் கேட்டான் ஏழுமலை.

தனக்குத் தேவைப்பட்ட ஆயுதத்தை எடுத்துக் கொண்டு வெளியே வந்த அருணகிரி சற்றுத் தயங்கி நின்று தன் முதலாளியை நிமிர்ந்து பார்க்காமலே தலை குனிந்தபடி, ''லெவன்த் ஸ்டாண்டர்டு வரை படிச்சேம்பா !... அதாவது பதினோராம் வகுப்பு வரை'' என்றான் தணிந்த குரலில்.

''ஓ.... பதினொண்ணும் கிளாஸ்வரை படிச்சவனா நீ? இத்தினி நாளா எனக்

ருக் தெரியாதே!'' என்று தலையாட்டினான் ஏழுமலை.

அருணகிரிக்கு உள்ளூறப் பெருமை தலைதூக்கியது. இந்தச் சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு தனது கல்வி யோக்கியதாம்சத்தை இன்னும் கொஞ்சம் வெளிச்சம் போட்டுக் காட்டித் தன் முதலாளியைக் 'கிர்'ரடிக்கச் செய்து விட வேண்டும் என்ற துடிப்புடன், ''ஆமாம்பா!.... நான்... வந்து....'' என்று பெருமிதம் கலந்த புன்னகையுடன் ஏதோ சொல்ல வாயெடுத்தான்.

அவன் சொல்லப் போவதைக் கேட்க விரும்பாதவன் போல் சட்டென்று குறுக்கிட்டு, ''சர்த்தான்டா, பெரய வேலையைப் பாரு! பிசாத்து, பதினொண்ணும் கிளாஸ் படிச்சுட்டுப் பெரிசா இங்கிலீசிலே பொளந்து கட்ட வந்துட்டான்! இந்த ஊர்லே சோக்ராப் பசங்ககூடத்தான் தாட்பூட்னு ஒட்டை இங்கிலீசு பேசறானுங்க! பதினொண்ணாவது படிச்சுட்டுக் காத்தடிக்க வந்திருக்கிறயே, இதிலிருந்தே தெரியலையா உன் படிப்பு லட்சணம்? போடா, சீ. போ!'' என்று அலட்சியமாகச் சிரித்தான் ஏழுமலை. அதோடு விடாமல் பையனை இன்னும் கொஞ்சம் மட்டம் தட்ட வேண்டும் என்று எண்ணியவனாய், ''டேய் சோங்கு! அந்த எச்சக் குவளையைக் கழுவி எடுத்துக்கிட்டுப் போய் ஸ்ட்ராங்கா சிங்கிள் டீ வாங்கிக்கிட்டு வாடா'' என்று விரட்டினான்.

அவமானத்தால் முகம் வெளிறிச் சிறுக்க, உடல் குன்றிப் போனான் அருணகிரி. 'இத்தனை நாட்களாக என்னைப் பற்றி யாரிடமும் எதுவும் சொல்லாமல் இருந்துவிட்டு இப்போது இவனிடம் என் படிப்பு விவரத்தைச் சொல்ல முற்பட்டது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்!' என்று எண்ணி மனம் நொந்தவனாய் டீக்கடையை நோக்கி நடந்தான்.

இரவு மணி ஏழு ஆகியது. எட்டு மணிக்கு மேலேதான் அந்தச் சைக்கிள் கடை சாத்துவது வழக்கம். அது வரையில் அருணகிரியும் இருப்பான்; இருந்தாக வேண்டும்.

ஆனால் இன்று அவனுக்கு அவ்வளவு நேரம் இருக்கப் பிடிக்கவில்லை. தன் முதலாளியிடமிருந்து வழக்கத்துக்கு அதிகமாகவே அடியும் வசவும் வாங்கியதால் ஏற்பட்ட மனத் தொய்வுடன் கூட, தன் அக்கா மத்தியானம் தன்னைப் பார்க்க வந்து பார்க்காமலே போய் விட்ட காரணம் என்னவாயிருக்கும் என்ற குழப்பக் கவலையும் சேர்ந்து கொள்ளவே அவன் வீட்டுக்குப் புறப்பட ஆயத்தமானான்.

''என்னடா, மணி என்ன ஆச்சு? இதுக்குள்ளாற ஓடப் பார்க்கிறே!'' என்று கேட்டான் ஏழுமலை.

''ஆமாம்பா! இன்னிக்கு நான் கொஞ்சம் சீக்கிரமா வீட்டுக்குப் போகணும்!''

''எதுக்காம்?''

''வேலை இருக்குது!''

பையனின் பதில் ஒரு தினுசாக இருப்பதைப் புரிந்து கொண்ட ஏழுமலை, ''ஓகோ!'' என்று தலையாட்டி விட்டு, ''தெருவிலே சாமான்களை அப்படியப்படியே போட்டு விட்டுப் போயிட்டா எப்படிடா? எல்லாத்தையும் ஏறக்கட்டி வைச்சுட்டுப் போ!'' என்றான் மிகுந்த எரிச்சலுடன்.

அருணகிரி மௌனமாக அந்தக் காரியங்களைச் செய்து முடித்தபின், தான் அணிந்திருந்த அழுக்குப் பனியனையும், கால்சராயையும் கழற்றி ஒரு மூலையில் வைத்து விட்டு, அங்கேயே வெகு பத்திரமாக மடித்து வைத்திருந்த ஒரு காக்கிப் பாண்டையும் அரைக்கை வெள்ளைச் சட்டையையும் எடுத்து அணிந்து கொண்டான். வேலை முடிந்ததும் அவன் கடை சைக்கிள் ஒன்றில் வீட்டுக்குப் போவதும், மறுநாள் காலை அதை எடுத்துக் கொண்டு வந்து வைத்து விடுவதும் வழக்கம். ஏழுமலையே அவனுக்கு அளித்துள்ள சலுகை இது. இப்போதும் அவ்வாறே ஒரு சைக்கிளை எடுக்கப் போனான்.

''டேய் சோங்கு! தொடாதேடா அதை!.... பொழுதோட போறதுமில்லாமெ தொரைக்குச் சைக்கிள் வேற வேணுமா? சீ, வையி! வையி!'' என்று சீறினான் ஏழுமலை. ''எவனாவது 'அயரு'க்கு வந்து கேட்டா என்னத்தை எடுத்துக் கொடுக்கிறதாம்?''

''ஆகட்டும்பா!'' என்று அமைதியாகச் சொல்லி விட்டுக் கால்நடையாகவே வீட்டுக்குக் கிளம்பினான் அருணகிரி.

அவனுடைய வீடு வசந்த நகரில் இருந்தது. வேகமாக நடந்தால் ஓர் அரைமணி நேரத்தில் போய்ச் சேர்ந்து விடலாம். ஆனால் அவன் மெல்லவே நடந்தான். உடலும் உள்ளமும் அவ்வளவுக்குச் சோர்ந்து போயிருந்தன.

இன்று தன் கடை முதலாளி தன்னை அடித்ததையும் திட்டியதையும் நினைக்க நினைக்க அவனுக்குத் துக்கம் நெஞ்சை அடைத்தது. எங்காவது கொஞ்ச நேரம் தனிமையில் உட்கார்ந்து அழ வேண்டும் போலிருந்தது.

'சே! இது என்ன புதுசா? தினமும் நடக்கிறதுதானே? இன்னைக்கு மட்டும்





நாகாலாந்தில் வசிக்கும் இந்தப் பெண்மணிகள் முதுகில் மூங்கில் குழாய்களை வைத்துக்கொண்டிருக்கிறார்களே எதற்கு?

(1) அது ஒரு அலங்காரம்.
(2) வீடு கட்ட அதைச் சுமந்து செல்கின்றனர்.
(3) அவர்களுக்கு அளிக்கப்பட்ட தண்டனை இது.
(4) வனவிலங்குகளுடன் போராட உதவுமென்று.
(5) மேற்குறிப்பிட்ட நான்கும் அல்லாத வேறு ஒரு காரணத்துக்காக

விடை: 26ம் பக்கம்

எனக்கு இவ்வளவு ரோஷமும் ஆத்திரமும் துக்கமும் வருவானேன்?'

இவ்வாறு நினைத்து ஆறுதல் பெற முயன்ற அவன், சட்டென்று நிமிர்ந்து பார்த்தான். எதிரே பார்சி கோயில் தெரிந்தது. அந்தக் கோயிலின் குட்டையான மதில் சுவர் மேல் ஏறி உட்காரலாம் என்று எண்ணி, இடதுபுற நடைபாதையிலிருந்து சாலையின் குறுக்கே இறங்கி நடக்கத் திரும்பியவன், மத்தியானம் தான் பழுது பார்த்த சைக்கிளை இந்தச் சாலை வழியே ஓட்டிக் கொண்டு வந்தபோது இதே இடத்தில் நடந்த அச்சிறு விபத்துச் சம்பவம் நினைவில் முகிழ்த்து எழவே தயங்கி நின்றான். இதுகாறும் அவன் மனத்தில் கவிந்திருந்த துயரப் புகை மூட்டம் கலைந்து, இனம் புரியாததோர் இன்பக் கிளுகிளுப்பு உணர்ச்சி கிளர்ந்து சோர்வுற்றிருந்த உடலைச் சற்றே கலகலப்பாக்கி நிமிர்த்தியது.

அவன் தனக்குள் மெல்லச் சிரித்துக் கொண்டான். 'அந்த இரண்டு பெண்களும் கண் மூடிக் கண் திறப்பதற்குள்ளே என்னமாய் விழுந்து விட்டார்கள்! நல்லவேளை, அடிகிடி ஒன்றும் படவில்லை; பட்டிருந்தால் பழியெல்லாம் என் மேல்தான் விழுந்திருக்கும்.'

அவனுக்கு முதலில் அந்தச் சோற்றுக் கடைக்காரப் பெண்ணின் மிரட்சியுற்ற முகமே மனக் கண்ணில் தோன்றியது: 'பாவம், அவள்தான் எவ்வளவு பயந்து போனாள்! அதிலும் நான் அவளைத் தொட்டுத் தூக்கிய போது நடுங்கிப் பதறியே விட்டாள்! எனக்கும் அப்போது அவ்வளவு துணிச்சல் எப்படி வந்தது என்றே தெரியவில்லை.'

அனுதாபத்துடன் மெல்லச் சிரித்துக் கொண்ட அவன் அந்தச் சல்வார் — கம்மீஸ் சுந்தரியையும் எண்ணிப் பார்த்தான்: 'என்ன அழகான பெண் அவள்! அவளுடைய முகம், அவளுடைய கண்கள், அவளுடைய கழுத்து அவளுடைய.... ம்... எல்லாமே எவ்வளவு அழகாய் இருந்தன!'

அவன் மனம் ஒருவித கூச்சப் புல்லரிப்பால் கிளுகிளுத்தது. அவளை இப்போது நேருக்கு நேர் பார்த்து விட்டவன்போல் தலை குனிந்தபடி, மத்தியானம் அவள் விழுந்த இடத்தை ஓரக் கண்ணால் திரும்பித் திரும்பிப் பார்த்தான்.

'அவளுக்குத்தான் என் மேல் எவ்வளவு கோபமும் எரிச்சலும் வந்து விட்டன! ஏதாவது பேசியிருந்தால் என் கன்னத்தில் அறைந்தும் விட்டிருப்பாள் போலும்! பணத் திமிர்; படிப்பின் ஆணவம்! என்னைப் படிக்காத முண்டம் என்று தீர்மானித்ததால் ஏற்பட்ட அலட்சியம்! இல்லையானால் சைக்கிள் விடத் தெரியாமல் விட்டு விழுந்து எழுந்த அவளுக்கு உதவி செய்யப்போன என்னை, 'நான்சென்ஸ்' 'கன்ட்ரிப்ரூட்' என்றெல்லாம் திட்டுவாளா?.... அப்புறம் என்னை அவள் சைக்கிள் கடையில் பார்த்தது இன்னும் இளக்காரமாகி விட்டிருக்கிறது; அதனால்தான் அவளுடைய சைக்கிள் சக்கரத்துக்கு நான் காற்று அடித்துக் கொண்டிருந்த போது அவள் அப்படிக் கிண்டலாகக் 'களுக்'கென்று சிரித்திருக்கிறாள்!'

இவ்வாறு எண்ணியதுமே அருணகிரிக்கு அவமானத்தால் 'குப்'பென்று வியர்த்து விட்டது. வெறுப்புடன் முகத்தைச் சுளித்தபடி தன்னையே

ஏற இறங்கப் பார்த்துக் கொண்டு அங்கிருந்து விரைந்து நடக்கலானான்.

'அந்தப் பெண் மட்டுமென்ன? வேறு எந்தப் படித்த பெண்ணுமே என்னைப் பற்றி அப்படித்தான் கேவலமாக நினைப்பாள்! என் கடை முதலாளி ஏழுமலையேகூட என்னை வாய்க்கு வந்தபடி அசிங்கம் அசிங்கமாகத் திட்டுவதற்கும், முரட்டுத்தனமாக அடிப்பதற்கும் காரணம் இதுதான் என்பது இன்று தெளிவாகத் தெரிந்து போயிற்றே! எனது உழைப்பால் காசு சம்பாதிக்கும் கடை முதலாளியே என்னைக் கொஞ்சமும் மதிக்காமல் ஒரு நாயைப் போல் நடத்துகிறான் என்றால், அழகும் அந்தஸ்தும் பணமும் படிப்பும் உள்ள அந்தப் பெண் எனக்கு மதிப்பும் மரியாதையும் கொடுத்து விடுவாளா?'

அருணகிரிக்கு அழுகை அடைத்துக் கொண்டு வந்தது. அவன் வேகமாக நடந்தான்.


'இப்படி நான் எல்லோராலும் அவமதிக்கப்பட்டுச் சீரழிவதற்குக் காரண கர்த்தா என்று யாரை நொந்து கொள்ள முடியும்? எவர்மீது குற்றம் சுமத்த இயலும்? என்னுடைய இந்நிலைக்கு நான்தானே காரணம்? ஆமாம்; என் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொண்டவனே நான்தான்!'

திடீரென்று அவன் மனம், புரண்டு போன ஆறு ஆண்டுகளின் கால ஏட்டைப் புரட்டிப் பார்ப்பதில் புகுந்தது.

* * *

அருணகிரிக்குச் சொந்த ஊர் சிதம்பரம், கடலூரிலிருந்த பஸ் கம்பெனியொன்றில் டிரைவராக வேலை பார்த்து வந்த அவனுடைய தந்தை ஒரு விபத்தில் மாண்டு போனார். அப்போது அவன் ஆறாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தான். அவனோடு பிறந்த ஒரே தமக்கை முத்தம்மா. தந்தை உயிராயிருந்த போதே அவளுக்குக் கல்யாணம் பண்ணி வைத்து விட்டார். மாப்பிள்ளை பெங்களூர்க்காரர்.

கணவனை இழந்து தனி மரமான அவனுடைய தாயார் சொர்ணத்தம்மாள், பஸ் கம்பெனியாரிடமிருந்து கிடைத்த நட்டுத் தொகை ஐயாயிரம் ரூபாயை வைத்துக் கொண்டு சிதம்பரத்திலேயே ஓர் ஆறு மாத காலம் வாழ்ந்தாள். அப்புறம், சென்னையில் கோழி முட்டை வியாபாரம் பண்ணிக்கொண்



சோதனையும் சாதனையும்

விம்பிள்டனில் 1961ம் வருஷம் பெண்களுக்கான இறுதி டென்னிஸ் போட்டி மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. முதல் ஆட்டத்தில் 6-4 என்ணிக்கையில் மார்ட்டிமர் ஆங்கிலா ஒரு செட்டை இழந்தார். இனி அவளை எதிர்த்து ஆடிய கிறிஸ்டைனே வெற்றி பெறுவாள் என்று டென்னிஸ் ரஸிகர்கள் எதிர்பார்த்தனர். இந்தச் சமயத்தில் மழை கொட்டு கொட்டென்று கொட்டியது. மார்ட்டிமரும், கிறிஸ்டைனும் உடை மாற்றிக் கொள்ளப் பயன்படும் தனித் தனி அறைகளுள் ஒதுங்கினர். விம்பிள்டன் வீராங்கனையாக வெற்றிபெற வேண்டிய இந்த இறுதிப் போட்டியில் தான் சரியாக ஆடவில்லையே என்று ரொம்ப வருத்தம் மார்ட்டிமருக்கு. தன்னைத் தானே கோபித்துக் கொண்டாள். அந்தக் கோபத்தில் மழையில் நனைந்து விட்டிருந்த தன் உடைகளைக் கிழித்துத் தூர எறிந்தாள். அவற்றை வெறுப்போடு உற்று நோக்கினாள். அவை இதுவரை அவளது அதிர்ஷ்ட உடைகளாக இருந்தன...... இப்போது.....?

போட்டி மைதானத்திலிருந்து ஆட்ட நிர்வாகி அழைப்பு விடுத்தார்: "மழை நின்று விட்டது! ஆட்டம் தொடங்கலாம்! ஆட்டக்காரர்கள் உடனே மைதானத்துக்கு வந்து சேர வேணும்!"

மார்ட்டிமருடைய தோழி அவளுக்கு வேறு உடைகளை அவசரம் அவசரமாக அணிவித்து அனுப்பினாள். மறுபடியும் மழை பெய்தது; ஓய்ந்தது!

இரண்டாவது ஆட்டத்தில் கிறிஸ்டைனுக்கு நான்கு செட்டும், மார்ட்டிமருக்கு மூன்று செட்டும் கிடைத்திருந்தன. மார்ட்டிமர் உக்கிரமாகப் போராடிக் கொண்டிருந்தாள். கிறிஸ்டைன் ஒரு பந்தை அடிக்க முன்னேறியபோது காலைத் தவறுதலாக வைக்கவே நிலை குலைந்து கீழே சாய்ந்தாள். ஆனால் அதிகம் அடிபட்டு விடவில்லை. அவள் தன் காலைத் தடவி விட்டுக் கொண்டே மெதுவாகத் தட்டுத் தடுமாறி எழுந்தாள். போன வருஷம் விளையாட்டின் போது அந்தக் காலில் இழுத்துக் கொண்டு பிராணவஸ்தைப்பட்டது அவள் நினைவுக்கு வந்தது. இதனால் அவள் மனம் தடுமாறியது. ஆட்டத்தில் கவனம் பிசகியது. டென்னிஸ் ரசிகர்களின் பாராட்டு கிறிஸ்டைன் பக்கமே இருந்தது. ஏதாவது நல்ல 'ஷாட்' அடித்தால் அவளுக்கு அமோகப் பாராட்டுதல்கள் கிடைத்தன. ஆயினும் கிறிஸ்டைன் மன நிலை சரியில்லாததால் சோபிக்கவில்லை.

இதற்குள் மார்ட்டிமர் தன் பக்கம் வெற்றியைத் திருப்பிக் கொள்ளத் தொடங்கினாள். பத்து வருஷக் கடுமையான பயிற்சியும் போராட்டமும் வீண் போகவில்லை; விம்பிள்டன் வீராங்கனைப் பட்டத்தைக் கொண்டு சேர்த்தன. - குண்டுமணி

மூங்கிலில் தண்ணீர்

ஐந்தாவது விடையே சரியானது. மூங்கில் குழாய்களுள் தண்ணீர் நிரப்பிக் கொண்டு வீடு திரும்புகின்றனர் அந்த நாகாலாந்து பெண்மணிகள்.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

டிருந்த அவளுடைய ஒன்றுவிட்ட தம்பி கண்ணுச்சாமி என்பவர் தம் வீட்டோடு வந்து இருக்குமாறு அவளை வற்புறுத்தினார். அவர் அழைத்ததன்பேரில் மகனை அழைத்துக் கொண்டு பட்டணம் போய்ச் சேர்ந்தாள். போன உடனேயே முதல் காரியமாக அருணகிரியை ஓர் உயர் நிலைப் பள்ளியில் சேர்த்தும் வைத்தாள். சிதம்பரத்தை விட்டு அவள் பட்டணத்துக்கு வந்த மூலநோக்கமே தன் மகனை நன்றாகப் படிக்க வைத்து ஒரு நல்ல உத்தியோகத்தில் அமரக் கூடியவனாக ஆக்கி வைத்துவிட வேண்டும் என்பது தான்.

கண்ணுச்சாமி நல்ல மனிதர். கொஞ்சம் வெகுளியான சுபாவம். எதையும் தாமே தமது நெற்றிப் பொட்டில் வைத்துப் பார்த்துத் தெரிந்து கொள்ள மாட்டார். பிடரிக்குப் பின்னுலிருந்து யாராவது கிசுகிசுத்தால் அதை உடனே பிடித்துக் கொள்வார். அதிலும் தம் இல்லத்தரசியின் மந்திர ஓதலை உடனடியாக ஏந்திக் கொள்வார். அந்தத் தலையணை மகுடி நாதத்துக்குப் பெட்டிப் பாம்பாகக் கட்டுப்பட்டுப் படம் எடுத்தும் ஆடுவார். வெள்ளைக் கோழி கறுப்பு முட்டை இட்டது என்று மட்டும் சொல்லாமல் வேறு அவள் எதைச் சொன்னலும் அப்படியே முழுக்க நம்பிவிடக் கூடிய அளவுக்குச் சுத்தமான 'பெண்டாட்டி பக்தர்' அவர்.

அவருக்கு ஆறு பிள்ளைகள். எல்லாம் குஞ்சும் குளுவானுமானவை. மூத்தது பெண்பிள்ளை. பெயர் பிரேமா. வயசு பதினொன்று. மகாகர்வி. அம்மாவின் அச்சு. நூலைப் போல் சேலை. பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தாள். படிப்பில் அவள் ஒருத்திக்குத்தான் நாட்டம். மற்றதுகளெல்லாம் மக்குகள். முட்டை வியாபாரியின் பிள்ளைகளாயிருந்ததாலோ என்னவோ அவர்கள் பள்ளிக்கூடம் போய் 'முட்டை'களையே கொள்முதல் பண்ணிக் கொண்டு வந்தார்கள்! அதற்காகக் கண்ணுச்சாமி அதிகம் கவலைப் பட்டுக் கொள்ளவில்லை. நன்றாய்ப் படிக்கும் மூத்த பெண் பிரேமாவை மட்டும் நன்றாகப் படிக்க வைத்து விட்டால் போதும் என்பது அவர் எண்ணம். அவ்வாறு எண்ண அவரது குறைந்த வருமானம் ஒரு காரணம்.

தம்பியின் வீட்டு நிலவரத்தைப் புரிந்து கொண்ட சொர்ணத்தம்மாள் அவர் போடும் சாப்பாட்டைச் சும்மா சாப்பிட்டு விடாமல் தனக்கும் தன்னுடைய பிள்ளைக்குமாகச் சேர்த்துச் சாப்பாட்டுக்கென மாதம் ஐம்பது ரூபாய் கொடுத்து வந்தாள். துணிமணிகளையும் தானே வாங்கிக் கொண்டாள். பிள்ளையின் படிப்புக்கு ஆகும் செலவையும் தன் கைப் பணத்தில் பார்த்துக் கொண்டாள். தான் கொண்டு வந்த பணத்தைத் தபாலாபீஸ் சேமிப்புக் கணக்கில் போட்டு வைத்துக் கொண்டு தேவையானபோது அதிலிருந்து எடுத்துக் கொண்டாள். தம்பியின் வீட்டில் தங்கியிருப்பதற்கு மட்டுமே வாடகை என்று ஒன்றும் தருவதில்லை. அப்படித் தருவது நன்றாயிருக்காது அல்லவா? ஆனாலும் அதற்கு ஈடாக வீட்டு வேலைகளில் முக்கால்வாசியை அவளே செய்து வந்தாள். சமயா சமயங்களில் தம்பி பிள்ளைகளுக்குச் சட்டைத் துணிமணிகளோ, பாடப் புத்தகங்களோ, தின்பண்டங்களோ, விளையாட்டுச் சாமான்களோ வாங்கித் தருவதும் உண்டு.

இப்படி, தானும் தன் பிள்ளையும் வந்து தங்கி யிருப்பது கண்ணுச்சாமிக்கு ஒரு சுமையாகவோ, இடைஞ்சலாகவோ இருந்துவிடக் கூடாது — அவ்வாறு அவர் கருதவோ உணரவோ கூடாது—என்பதில் வெகு எச்சரிக்கையுடன் இருந்து நாசூக்காக நடந்து கொண்டாள் சொர்ணத்தம்மாள். இதைப் புரிந்து கொண்ட கண்ணுச்சாமியும் முகம் கோணாமல் பரிவும் பாசமும் காட்டியே நடத்தினார்.

அவருடைய மனைவி ரஞ்சிதமும் நாலைந்து மாதங்கள் வரை ரொம்பச் சுமுகமாகவே இருந்தாள். அப்புறம் தான் அவளுடைய சுயபுத்தி கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்பட லாயிற்று.

சொர்ணத்தம்மாளுக்கும் அவள் பிள்ளைக்கும் தான் தண்டச் சோறு போட்டுக் குடி கெட்டுக் கொண்டிருப்பதாக ஜாடைமாடையாக முணு முணுக்க ஆரம்பித்தாள். தன் வெறுப்பையும் சலிப்பையும் பல வகைகளில் மறைமுகமாகக் காட்டத் தொடங்கினாள்.

(தொடரும்)

ரகுபதி ராகவ

மகாத்மா காந்தி

தமிழாக்கம்: ராஜாஜி

27

பௌத்த தர்மத்தைப் பின்பற்றிய டாக்டர் பாம்ளி அவர்கள் அபட்டாபாத் என்ற ஊரில் காந்திஜியைச் சந்தித்தார். "பிரார்த்தனையினால் கடவுளுடைய சித்தத்தை மாற்ற முடியுமா? அல்லது அறிய முடியுமா?" என்று கேட்டார்.

காந்திஜி சொன்னதாவது: "நான் பிரார்த்தனை செய்யும்போது இன்னதைச் செய்கிறேன் என்று என்னால் முற்றிலும் விளக்க முடியாது. ஆயினும் உங்களுடைய கேள்விக்குப் பதில் சொல்லப் பார்க்கிறேன். தெய்வ சங்கல்பத்தை மாற்ற முடியாது. ஆனால் ஈசன் உயிர் கொண்ட ஒவ்வொரு பிராணியின் உள்ளத்திலும் ஜடப் பொருளிலுமே இருக்கிறான். என் இதயத்துக்குள் துயிலும் தெய்வத்தைப் பிரார்த்தனையினால் எழுப்ப முயல்கிறேன். அந்தத் திருப்பள்ளி எழுச்சிக்குத்தான் பிரார்த்தனை என்று பெயர். மேதையினால் அடையும் அறிவுக்கும் உண்மை உணர்வுக்கும் பேதம் உண்டல்லவா? என்னுள் கடவுள் இருப்பதை மேதையினால் மட்டும் அறிந்தால் போதாது. அந்த அறிவு பக்தி நிலையை அடைவதற்காகப் பிரார்த்தனை வேண்டும். நான் இந்தியாவுக்கு விடுதலை விரும்புகிறேன். அந்த விருப்பம் பூர்த்தியாவதற்கும் அந்த முயற்சியில் ஈடுபட எனக்குச் சக்தி உண்டாவதற்கும் நான் பிரார்த்தனை செய்கிறேன். பிரார்த்தனையினால் என் உள்ளத்தில் நிறைவேற வேண்டிய திருப்பள்ளி எழுச்சி நிறைவேறும் என்று நான் நம்புகிறேன். நான் அடைய வேண்டிய சக்தியை என்னுடைய பிரார்த்தனையினால் அடைவேன் என்பது என்னுடைய நிச்சயம்."

இதைக் கேட்டுப் பாம்ளி சொன்னார்: "அப்படியானால் நீங்கள் செய்வது பிரார்த்தனை அல்ல. விண்ணப்பத்துக்குத்தானே பிரார்த்தனை என்று பெயர்? விண்ணப்பம் இல்லாவிடில் பிரார்த்தனை ஏது?"

"ஆம்" என்றார் காந்திஜி. "விண்ணப்பந்தான் செய்கிறேன். நான் செய்யும் விண்ணப்பம் என்னுடைய உள்ளத்துக்குச் சொல்கிறேன். தாழ்ச்சி பெற வேண்டாம், உயர்ந்து நில் என்று விண்ணப்பிக்கிறேன். உன்னை நீ முழுதும் அறிந்து கொள்ளவில்லை என்று என் உள்ளத்துக்குச் சொல்கிறேன். அனைத்தும் அடங்கி நிற்கும் பரம்பொருளில் கலந்து ஒன்றிப் போக இடைவிடாமல் முயல்வதே பிரார்த்தனை!"

"அம்முறையில் பிரார்த்தனை செய்ய முடியாதவர்கள் என்ன செய்வது?" என்று கேட்டார் பாம்ளியார்.

"அடக்கம் கொள்வாய் என்பேன். பிரார்த்தனை செய்ய வேண்டியதில்லை என்று எண்ணுகிறவர்களை அடக்கம் இல்லாதவர்கள் என்று சொல்லுவேன். புத்த பகவானே பிரார்த்தனை செய்தார் என்று நான் சொல்லுவேன். அடக்கத்துடன் அவரும் பிரார்த்தனை செய்தபடியினால் கோடிக்கணக்கான மக்களை அவர் ஆட்கொள்ள முடிந்தது. மேதைக்கும் அதனால் அடையும் அறிவுக்கும் மேம்பட்டது ஒன்றுண்டு. அதுதான் மக்களை ஆட்கொள்ளுகிறது. ஆஸ்திகர் அல்லாத சந்தேகவாதிகளையும் அதுதான் ஆட்கொள்கிறது. வாழ்க்கையில் சங்கடம் ஏற்பட்டபொழுது தத்துவார்த்தமும் சந்தேகமும் பயன்படுவதில்லை. சங்கடத்தில் அலையும் உள்ளத்துக்கு ஒரு பற்றுக்கோடு வேண்டும். என்னிடம் யாரேனும் வாதம் செய்தால் நான் அவர்களுக்கு இதைத்தான் சொல்லுவேன்: உன்னுடைய சிறுமையை நீ உணர வேண்டும். அப்படி உணர்ந்து அடக்கம் பெற்றால், கடவுள் எதற்கு, பிரார்த்தனை எதற்காக என்பதை அறிவாய். உன்னுடைய மேதை மிகப் பெரிதாயினும், இந்தப் பிரபஞ்சத்தில் அது எம்மட்டாகும்? உன்னுடைய அறிவு உன்னுடைய உள்ளத்துக்குக்கூடத் திருப்தி தராது. செல்வத்தினாலும் அன்பினாலும் பெறக்கூடிய சம்பத்து அனைத்தும் வாழ்க்கையில் சில சந்தர்ப்பங்களில் சற்றும் உதவாமல் போகிறது. அப்போதுதான் ஆண்டவனுடைய ஒளியில் ஒரு சிறிது நம்மை அடைகிறது. நம்முடைய வாழ்க்கையில் ஒவ்வொரு கணத்துக்கும் நாயகனை அவனுடைய தரிசனம் ஓரளவு பெறுகிறோம். அந்தத் தரிசனமே நான் பிரார்த்தனை என்பது."

பாம்ளி: "அதைத்தான் நாங்கள் உள்ளத்து அநுபவம் என்கிறோம். அறிவைவிட அது சிறந்தது. என் வாழ்க்கையில் இரண்டு தடவை நான் அதை அடைந்ததுண்டு. ஆனால் அந்த அநுபவம் மறைந்து போயிற்று. இழந்து விட்டேன். புத்தர் சொல்லியிருக்கும் இரண்டு வாக்கியங்கள் எனக்கு ஆறுதல் தருகின்றன. 'துக்கத்துக்குக் காரணம் ஆசையும் ஆணவமுமே' என்றார். மற்றொன்று 'ஏதும் நிலையில்லை. நினைவில் வையுங்கள்' என்றார். இந்த இரண்டு கருத்துக்களையும் தியானித்தால் அது ஆஸ்திகமே ஆகும் அல்லவா?"

காந்திஜி, "அதுவே பிரார்த்தனை" என்று முடித்தார். [ஹரிஜன் 19—8—39]

பெண்களால் முடியாது!

திரு எஸ். ஓய். வி. ஆர். சாஸ்திரி, *சென்னை—14*


பஸ்ஸில் காரியாலயத்துக்குப் போகப் பெண்கள் கும்பலாக நிற்பதைச் சென்னையில் சகஜமாகப் பார்க்கிறோம். ஒரு பெண், புது மாதிரியான புடவை, ஹாண்ட் பாக், குடை ஏதேனும் ஒன்றுடன் வந்தால், பஸ்ஸில் போகும்போது இந்தப் புதிய டிசைன்களைப் பற்றிய பேச்சு அடிபடாமல் இருப்பதில்லை.

''என்னடி, இனாவர் டிசைன் வாட்சா? எப்போ வாங்கினே?'' — இப்படி ஒரு கேள்வி.

வீட்டில் சிறுமிகள்கூட, வந்து போகும் உறவினர் வீட்டுப் பெண் எப்படி வந்தாள் என்பதை விமர்சிக்காமல் இருப்பதில்லை.

''நீனு போட்டுண்டு வந்த 'ஏணி மாடல்' (காதணி) ரொம்ப நன்னாயிருக்கு... அது மாதிரி நான்கூட செய்துக்கலாம்னு இருக்கேன்'' எனப் பேசுகிறார்கள், படிக்கும் பெண்கள்.





''அப்பா!.... மீனு போட்டுண்டு வந்த 'ஹீல் ஷூ' மாதிரி எனக்கும் வாங்கித் தரணும்....'' என கான்வென்ட் போகும் சிறுமி கூப்பாடு போடுகிறாள்.

பெண்களுக்குப் புதிய டிசைன்களைப் பற்றிப் பேசாமலிருக்கவே முடியாது. அவற்றுக்காக ஆசைப்படாமலும் இருக்க முடியாது!

திரு எஸ். பி. கிருஷ்ணன், *சென்னை—1*

பல்வேறு சபாக்களில் நிகழ்ச்சிகளின் போது உற்றுக் கவனித்தால் பெண்கள் நவீன நாகரிகம் பற்றிப் பேசுவது புரியும். ''ஜெய்ப்பூர் பச்சையில் நெக்லேஸ் பண்ணிண்டு வந்து விட்டாள் போலிருக்கு....! அதான் ஒரு தரத்துக்கு நாலு தரம் இருமிண்டிருக்காள்!'' என்று கேலியாகச் சொல்லுவாள் ஒருத்தி.

''பங்கஜம்! மாடிப் போர்ஷன் ரேணு, 'பாஷன் மாடல்' ஆகி விட்டாள்!....''— என்று இன்னொரு ஒலிபரப்பு!

இப்படி இன்றைய நாகரிகம் பற்றிப் பேசும் ஆசை ஆண்களுக்குக் கிடையாது.

ஆனால் பெண்களுக்கு, அதைப் பற்றிப் பேசுவதில் அபார ஆர்வம் இருக்கும். ஆண்களுக்குத் தலைவலி எடுக்கும்!

திரு ஜகதீசன், *சென்னை—2*

உடை — நகை விஷயத்தில் மட்டுமில்லை; வீட்டை அலங்கரிக்கும் விஷயத்திலும் பெண்கள் நவீன மோஸ்தர்களைத் தெரிந்து வைத்துக் கொள்வார்கள்.

உறவினர் வீட்டுக்கோ, நண்பர் வீட்டுக்கோ போய் வந்ததும் பேச்சு அநேகமாக இப்படித்தான் இருக்கும்:

''பார்த்தீர்களா?.... தரையில் விரிப்பு விரித்து, சோபா, ரேடியோ, பொம்மை அலமாரி இத்யாதியுடன் டிராயிங் ரூமை எவ்வளவு அழகாக வைத்திருக்கிறாள் கமலா?...''

''ஏன், நீயும் அப்படி வீட்டை அழகுபடுத்தலாமே...?'' என்று தவறிப் போய்ச் சொல்லி விட்டால் ஆபத்து!

''பாருங்கள்... 'உமன்' பத்திரிகையில் புது மாதிரி பர்னிச்சர் செட் போட்டோ பார்த்தேன்! அந்த 'கட்டிங்'கைக் கொடுத்து பர்னிச்சர் கடையில் ஆர்டர் தரப் போகிறேன்...'' என்று பெரிய திட்டம் திட்ட ஆரம்பித்து விடுவார்கள்.

ஆண்களால் முடியாது!

டாக்டர் சரஸ்வதி அய்யர், *சென்னை—24*

பொதுவாக ஆண்களுக்குத் துணிச்சல் அதிகம், நம்பிக்கையும் அதிகம். எதிர்காலத்தைப் பற்றிய கவலை சற்றுக் குறைவுதான்.

''நான் சம்பாதிக்கிறேன்... தாராளமாகச் செலவழித்து, வாழ்க்கையை நன்றாக அநுபவித்து ஆனந்தமடைய வேண்டும். நாளை பற்றி இன்று என்ன கவலை?'' என்னும் நோக்கில் செலவினங்களைச் செய்கிறார்கள்.

மனைவி தைரியத்தைத் திரட்டிக் கொண்டு ''பெண்கள் இருக்கிறார்களே, கல்யாணம் பண்ண வேண்டுமே'' என்று கேட்டால், இப்படியான பதில் வரும்:

''இதோ பார்! நான் கிடையராகி விட்டால் பையன் தலையெடுத்து விடுவான். அவன் சம்பாதிக்கத் தொடங்கி விட்டால் கவலை என்ன? பிள்ளைகளுக்கும் குடும்பப் பொறுப்பு உண்டு!'' என அடித்துப் பேசி விடுவார்கள்.

இப்படியான குடும்பங்களில் கணவர் போக்குப்படி நடக்கும் மனைவியர் சிலரே. குடும்பப் பொறுப்பில் அதிகம் கவலை கொண்டு கணவன் மாதா மாதம் தரும் பணத்தில் மிச்சம் பிடித்துக் கல்யாணத்துக்கு வேண்டியதைக் கொஞ்சம் கொஞ்சமாக வாங்கிப் போடும் பெண்மணிகள் பலர்.

ஸ்ரீமதி சாவித்திரி பத்மநாபன், சென்னை—14

வீட்டுக்கு வெளியூரிலிருந்து விருந்தாளிகள் வருகிறார்கள். அப்போது ஆண்கள் என்ன செய்கிறார்கள்?

குழந்தைப் பட்டாளத்துடன் ஊர் சுற்றிக் காட்டக் கிளம்பி விடுவார்கள்.

குருவி மணி நெல் சேர்ப்பது போல் மாத வருமானத்தில் மிச்சம் செய்த பணமெல்லாம் விருந்தினர் திரும்புவதற்கு முன்னால் கரைந்து போகும். சில சமயம் வீட்டுப் பெண்மணிகளிடம் இருக்கும் பணத்துக்கும் ஆபத்து வரும்!

விருந்தோம்பல் செய்ய வேண்டியது நமது பண்பாடுதான். வீட்டுக்கு வந்திருப்பவர்களுக்கு நம்மால் ஆனபடி உணவுவகைகள் தயாரித்துப் பரிமாற வேண்டுமே ஒழிய சக்திக்கு மீறிச் செலவழிப்பானேன்? இதைச் சொன்னால் ஆண்களுக்குப் புரியவே புரியாது.

ரயில் ஏற்றிவிட டாக்ஸி வைத்துக் கொண்டு போவார்கள், பழக் கூடைகள் வாங்கிக் கொடுத்து அனுப்புவார்கள்.

அதே சமயம் பெண்கள், ''பத்து ரூபாயா? சரி, ஒரு பாத்திரத்துக்கு ஆச்சு!'' என்றுதான் கெட்டியாக இருக்க முற்படுவார்கள்.

ஸ்ரீமதி சாவித்திரி கிருஷ்ணன், சென்னை—4

'' இன்றைக்குப் பவுன் என்ன விலை?'' என்று கேட்டால் ஆண்களிடம் சரியான பதில் கிடைக்காது.

பெண்கள் 'டக்'கென்று சொல்வார்கள்.

பவுன் விலை தெரிந்தால், விலை ஏறும்முன் வாங்கிப் போட்டு வைக்கலாம். பிற்காலத்தில் பெண்கள் கல்யாணத்துக்கு உதவும் என்றுதான் பொன்னுகவும் சேமிக்கிறார்கள், குடும்பத் தலைவிகள்.

நகரில் உள்ள பாத்திரக் கடைகளைப் பாருங்கள்.

'சீட்டு' ஆரம்பிக்காத கடைகளே சென்னையில் குறைவாகத்தான் இருக்கும்.

மாதாந்திரக் குலுக்கல் — ஏ. பி. சி. டி. குரூப்கள் எல்லாம் இருக்கின்றன, பெரிய கடைகளில்.

சில நகைக் கடைகளிலும் பத்து ரூபாய் சீட்டுக்கள் ஆரம்பித்திருக்கிறார்கள். மாதக் கணக்கில் கட்ட வேண்டும். சீட்டு குலுக்கிப் போட்டு, அதிர்ஷ்டமுள்ளவர்களுக்குப் பரிசு தருகிறார்கள். தங்கச் செயினோ அல்லது வேறு ஏதாவது நகையோ கிடைக்கும். பெண்களிடமுள்ள சேமிப்பு மனப்பான்மையை நன்கு புரிந்து கொண்டிருப்பதால்தான் இம் மாதிரி பாத்திரச் சீட்டு, புடவைச் சீட்டு என்று கடைக்காரர்கள் ஆரம்பிக்கிறார்கள். இதுபோன்ற திட்டங்களில் பெண்களின் பெயர்கள்தாம் தொண்ணூற்றெண்பது சதவீதம் இருக்கும்.

சேமிப்பு பற்றி ஆண்களுக்குத் தெரியாது என்பதல்ல. வாழ்க்கைப் பிரச்னையில் ஈடுபட்ட ஆண்கள், இவ்விஷயத்தில் அதிகக் கவனம் செலுத்த முடியாது!

அதற்குத்தான் மனைவி என்றொருத்தி இருக்கிறாளே என்ற நம்பிக்கை போதும்!

பேட்டி: - ஏ. சுவாமிநாதன்





குறிப்பு: ''முடியாது? முடியாது!'' என்ற தலைப்பில் இடம் பெற்றிருக்கும் பேட்டிகள், பொதுவான கண்ணோட்டத்தில் திரட்டியவையாகும். விதிவிலக்கானவர்கள் இரு தரப்பிலும் இருக்கவே செய்கிறார்கள்.

அட்டைப்பட விளக்கம்

அனுபவக் கலைஞர்

தமிழ் நாடகத் துறையில் திரு எஸ். வி. சகஸ்ரநாமத்துக்கு ஒரு சிறப்பிடம் உண்டு. சேவா ஸ்டேஜ் என்ற அமைப்பினை உருவாக்கி 'வடிவேலு வாத்தியார்', 'பிரசிடெண்ட் பஞ்சாட்சரம்', 'தேரோட்டி மகன்', 'போலீஸ்காரன் மகள்' போன்ற சில நாடகங்களை வெற்றிகரமாக அரங்கேற்றி விட்டதால் மட்டும் கிடைத்துவிட்ட சிறப்பிடம் அல்ல அது.

பண வசூல் பிரச்னையை இரண்டாம்பட்சமாக்கி, நாடகத் துறையில் புதுப் புது உத்திகளைக் கையாண்டு பார்க்கத் தயங்காதவர், தைரியமாகப் பல பரிசோதனைகளைச் செய்தவர் என்ற முறையில் தனியிடம் பெற்று விளங்குகிறார்.

இலக்கியத் தரமான கவிதை நாடகத்தைத் துணிந்து அரங்கேற்றி (பாஞ்சாலி சபதம்) வெற்றி கண்டவர். ஜனரஞ்சகமான நாடகங்களை மட்டுமின்றி கவிச் சக்கரவர்த்தி கம்பன் போன்ற நாடகங்களையும் அளித்து மக்களின் ரசனையை வளர்த்தவர். காட்சி ஜோடனைகள் பிரமிக்க வைக்க வேண்டிய அவசியமில்லை; அதில் கலை அழகும் நயமும்தான் முக்கியம் என்று உணர்த்தியவர். இம்முறையில் கலா சாகரம் ராஜகோபாலுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர். ரொம்ப ரொம்ப நாசூக்காகக் கையாள வேண்டிய கதைகளையும் நாடகமாக்கிச் சர்வ ஜாக்கிரதையாக அரங்கேற்றிப் பாராட்டுக்களைப் பெற்றவர் — (வாழ்வில் வசந்தம்). கருத்துள்ள கதைகளை நாடகமாக்க முன்வந்தவர் (மோகினித் தீவு). காந்தி அடிகளின் நூற்றாண்டு விழாவின்போது இரு நாடகங்களை (சறுக்கு மரம், கைவிளக்கு) அரங்கேற்றிப் பெருமையுற்றிருக்கிறார். முதன் முதலில் சுழலும் அரங்கத்தை அறிமுகப் படுத்தியவரும் (1954) முதன் முதலாக நாடக நடிகையின் பாட்டுக்குப் பின்னணிக் குரலை அமைத்தவரும் திரு சகஸ்ரநாமம்தான்.

இப்படிப் பல விஷயங்களில் முன்னோடியாக இருக்கும் சகஸ்ரநாமத்துக்கு ஒரு நாடகம் சரியாக அமையவில்லை என்றால் அதை மறுமுறை அரங்கேற்றாமலிருக்கும் தைரியமும் உண்டு (தளவாய் குமாரபிள்ளை)! 'புகழ்வழி' என்ற மற்றொரு நாடகம் பன்னிரண்டு முறை அரங்கேறியிருந்தது. மிக நல்ல வரவேற்பு தொடர்ந்து நீடிக்கும் என்ற நம்பிக்கையும் இருந்தது. அச்சமயம் இதில் கதாநாயகியாக நடித்த தேவிகா திரைப்படத் துறையில் புகுந்து விட்டார். அவரைக் காட்டிலும் சிறப்பாக அந்தக் கதாபாத்திரத்தினை வேறு ஒருவரால் கையாள முடியாது என்று சகஸ்ரநாமத்துக்குத் தோன்றிவிட்டது. அந்த நாடகத்தை அதோடு நிறுத்தி விட்டார்!

சிறுவன் டி. கே. பகவதி மேடை ஏறி நடித்துக் கரகோஷம் பெறுவதைப் பார்த்துத் தானும் நாடகத்தில் நடிக்க வேண்டும் என்று பிஞ்சுப் பிராயத்திலேயே ஆசைப்பட்டவர் சகஸ்ரநாமம். 'பெற்றோரின் அனுமதி வாங்கி வா' என்று நாடகக் குழு நிர்வாகி கூறவே, சிறுவன் சகஸ்ரநாமம் தானாகவே ஒரு கடிதத்தைத் தயாரித்துக் கொண்டு போனான்! ஆனால் மானேஜர் விவரமறிந்து தகப்பனாருக்குச் செய்தி அனுப்பி விட்டார்! விரைந்து வந்த தகப்பனார் மகனை வாழ்த்தி விட்டு ஆசி வழங்கித் திரும்பினார்!

டி. கே. எஸ். சகோதரர்கள், நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை, என். எஸ். கே. குழு ஆகிய அனைத்திலும் பண்பட்ட பிறகு அநுபவம் அளித்த ஆற்றலுடன் இவர் தொடங்கிய நாடகக் குழு 'சேவா ஸ்டேஜ்'. ஐம்பத்திரண்டு முதல் ஐம்பத்தாறு வரை திரு சிவாஜி கணேசன் இவரது நாடகங்களில் பங்கு பற்றிப் பெருமையுற்றும் பெருமை சேர்த்துமிருக்கிறார். இன்னும் முத்துராமன் போன்ற பல பிரபல நடிகர் நடிகையரை உருவாக்கிய சிறப்பும் திரு சகஸ்ரநாமத்துக்கு உண்டு. நல்ல நடிகர் என்பதுடன் திறமை மிக்க டைரக்டர் என்றும் பெயர் எடுத்தவர்.

ஒவ்வொரு நாடகத்திலும் அழுத்தமான கதை அமைப்பும் கருப் பொருளும் இருக்க வேண்டும் என்பதை என்றும் மறவாதவர் அவர். இளமையிலிருந்து தொடரும் மேடைப் பயிற்சி, இலக்கிய நயம் மிகுந்த எழுத்தாளர்களின் நட்புறவு (தி. ஜானகிராமன், பி. எஸ். ராமையா, கு. அழகிரிசாமி), எளிய ஆனால் இனிய கலை நோக்கு, எதிலும் புதுமையைத் தேடும் சுறுசுறுப்பு — இவை திரு சகஸ்ரநாமத்தின் சிறப்புக்கு அஸ்திவாரங்கள்.

மிகக் குறைந்த கதாபாத்திரங்களை உடைய 'சத்திய தரிசனம்' என்ற நாடகத்தை இப்போது அரங்கேற்றி மற்றொரு புதுமையைச் செய்து வருகிறார்.

திரு எஸ். வி. சகஸ்ரநாமத்தின் பலவித நாடகத் தோற்றங்களை இவ்விதழ் கல்கி மேலட்டையில் காண்கிறீர்கள்.

மே மாதம் 2ந் தேதி முதல் திரு எஸ். வி. சகஸ்ரநாமத்தின் சேவா ஸ்டேஜ் நாடக விழா என். கே. டி. கலா மண்டபத்தில் நடைபெறுகிறது. விழா வெற்றி பெற வாழ்த்துகிறோம்.

விசேஷச் சலுகை!



ரூபாய் 723-00க்கு இந்தியா முழுவதும், இஷ்டம்போல் ரயிலில் ஏர்கண்டிஷன் வகுப்பிலோ அல்லது (ஏர் கண்டிஷன் இல்லாத ரயில்களில்) முதல் வகுப்பிலோ ஒரு மாத காலத்துக்கும் பயணம் செய்யலாம்! 1970 ஆகஸ்ட் முடிவரை இந்தச் சலுகை.

யாருக்கு?

இந்தியாவைச் சுற்றிப் பார்க்க விரும்பும் வெளிநாட்டவர்களுக்கு மட்டும்தான்!

ஆதாரம்: 'யாத்ரி' - தகவல்: ஏ. சுவாமிநாதன்

வெள்ளிக் கிழமை



சில நாடகங்களைப் பார்க்கும் போது, 'இதற்கு விமர்சனம் அவசியமா? எழுதினால் நாடகக் குழுவினருக்கு அது உபகாரம் செய்ததாகுமா? அல்லது அபகாரம் விளைவித்ததாகி விடுமா?' என்றெல்லாம் யோசனைகள் வந்து விடுகின்றன. வேறு சில நாடகங்களைப் பார்க்கும்போதே பையிலிருக்கும் பேனாவை விரல்கள் தடவிப் பார்த்துக் கொள்கின்றன.

நில்லே தியேட்டர்ஸ் தயாரிப்பான வெள்ளிக்கிழமை என்ற நாடகம் இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தது!

கவிஞர் மு. கருணாநிதி அவர்கள் எழுதியுள்ள இந்த நாடகத்தைப் பஞ்சாங்க விரோதிகள் பாராட்டலாம்; மற்றவர்கள், 'தெய்வ நம்பிக்கையை வளர்ப்பதாயும், ஏன், பஞ்சாங்கத்துக்கேகூட பக்கபலமாயும்தானே இருக்கிறது' என்று வாதாடலாம். இரு சாராருக்கும் ஈடு கொடுக்கும் நாடகம் இது !

பெண் பார்ப்பதற்காகத் தன் தாயுடன் கிராமத்துக்கு வருகிறான் இளைஞன். அவனுடைய முஸ்லிம் நண்பனும் உடன் வருகிறான். பெண்ணின் தகப்பனார் பஞ்சாங்கப் பித்தர். 'நாளும் வேளையும் சரியில்லை, வராதே' என்று அவர் கடிதம் எழுதியதையும் மீறி இளைஞர்கள் செயல்படுகிறார்கள்.

பஞ்சாங்கப் பித்தர் எதிர்பார்த்தபடியே ஒன்றன் மேல் ஒன்றாகப் பல சிக்கல்கள், பிரச்னைகள், சங்கடங்கள் ஏற்படுகின்றன. பஞ்சாங்கப் பித்தருக்கு அசல் பைத்தியமே பிடிக்கும் அளவுக்கு விபரீதங்கள் ஏற்படுகின்றன. ஆனால் கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்ற முறையில் கதாநாயகிக்கு இருந்து வந்த தெய்வ நம்பிக்கை வீண் போகவில்லை. நல்ல இதயங்களின் விடாமுயற்சியால் தீய சக்திகள் முறியடிக்கப்படுகின்றன.

சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாய், கோவையாய், துரித கதியில் நிகழ்கின்றன. இரண்டரை மணி நேரம் ஓட்டமாய் ஓடி விட்டது.

வில்லன் டைகராக வரும் தேங்காய் சீனிவாசன் அமர்க்களப் படுத்துகிறார்; அநாயாசமாக நடிக்கிறார். அவரது இளந்தொந்தியும், நீல நிறக் கண்ணாடி ஜிப்பாவுமே பேசுகின்றன. அதற்குமேல் அவரும் பேசுகிறார். சக்கைப் போடாக வசனங்களைத் திறம்படக் கையாண்டு சிறப்புக் களை அள்ளிச் செல்கிறார்.

டைகரின் 'சிஷ்யன்' வேம்புவாகத் தோன்றும் முருகன் சில சந்தர்ப்பங்களில்தான் வந்து போகிறார் என்றாலும் தாளித்துக் கொட்டியது போல் நாடகத்துக்கு மணம் கூட்டுகிறார்.

திரு எஸ். வி. சகஸ்ரநாமத்தின் நடிப்பு அவரது டைரக்ஷன் திறமையுடன் இந்த நாடகத்தில் போட்டி போடுகிறது. இயக்குநர் சகஸ்ரநாமம் நடிகர் சகஸ்ரநாமத்தைவிட நான்கு மதிப்பெண்களை அதிகமாகவே பெற்று விடுகிறார்.

நாடகத்தில் கதாநாயகர் இருவர்; கதாநாயகியர் இருவர். இவர்களுள் முஸ்லிம் நண்பர் நைனா முகமதாகத் தோன்றும் பீலிசிவத்தினிடம் குறிப்பிடத்தக்க அமைதியான நடிப்பைக் காண முடிந்தது. கதாநாயகியாக வரும் ஜி. சகுந்தலாவின் நடிப்பில் அநுபவ மெருகு ஏறியிருப்பது

எஸ். வி. சகஸ்ரநாமமும் தேங்காய் சீனிவாசனும்


உண்மை என்றாலும் திருமணத்துக்குக் காத்திருக்கும் ஓர் இளம் பெண்ணாக அவர் வேஷமேற்பதை ஒப்புக் கொள்வது சிரமமாயிருக்கிறது. காரணம், நடிப்பைக் காப்பதில் காட்டிய கவனத்தை உருவத்தைக் காப்பதில் காட்டாததுதான். டாக்டர் ஆனந்தியின் பாகத்தை ராஜசுலோசனா ஏற்றிருந்தார். இப்போது இதில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அதே போல் கதாநாயகன் அழகப்பனாக நடிக்கவும் வேறு ஆள் தேடலாமே.

வழக்கில் இருக்கும் தமிழில் பேசப்படும் இயல்பான வசனத்துக்கிடையே திடீர் திடீரென்று அடுக்குத் தொடர்களும் அழகு தமிழும் பெருக்கெடுப்பதானது சாம்பார் சாதத்துக்கு மேலே பாயசத்தை ஊற்றியது போல் கஷ்டப்படுத்துகிறது.

மொத்தத்தில்-(இந்த வார்த்தையைப் போடாமல் விமர்சனத்தை முடிப்பதாவது!) படமெடுக்கத் திரைக் கதை தேடி அலையும் படாதிபதிகள் கவனிக்க !

ஜி. சகுந்தலா






இளமை பொங்கும் எழுபது!

அந்த வாரத்தில் நடந்த செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாச அய்யர் அவர்களின் சங்கீதக் கச்சேரி வெகு அமர்க்களமாக அமைந்து விட்டிருந்தது. ரசிகர்களுக்குப் பரம திருப்தி.

அடுத்த கச்சேரிக்குச் செம்பை அவர்களை ஏற்பாடு செய்திருந்தார்கள் சபா நிர்வாகிகள். கச்சேரி தினத்துக்கு இரண்டு நாட்கள் முன், செம்பை எதிர்பாராத காரணத்தால் தாம் வர இயலவில்லை என்று தகவல் அனுப்பி விட்டார். நிர்வாகிகள் கூடிச் சில நிமிட நேரம் ஆலோசித்தார்கள். முடிவு: செம்மங்குடிக்குத் தந்தி பறந்தது. அடுத்த கச்சேரியையும் அவரே செய்ய வேண்டுமென்று! ரசிகர்களின் வேண்டுகோளுக்கு இணங்கிச் செம்மங்குடி மீண்டும் பாடுகிறார் என்று அறிவிப்பும் கொடுத்தாயிற்று.

செம்மங்குடிக்கு இந்தத் தந்தி சற்றுத் தயக்கத்தைக் கொடுத்தது. 'இப்போதுதானே கச்சேரி செய்து விட்டு வந்தோம்? இரண்டு வார அவகாசத்துக்குள் மீண்டும் அதே மேடையில் கச்சேரி செய்து ரசிகர்களைத் திருப்தி செய்ய இயலுமா?' என்று யோசித்தார். ஆனால் வயலின் வித்துவான் ராஜமாணிக்கம் பிள்ளை உற்சாகப்படுத்தினார். அப்படியும் செம்மங்குடி உப்பிலியப்பன் கோவிலில் சீட்டுப் போட்டுப் பார்த்து, 'போகலாம்' என்ற உத்தரவைப் பெற்றுக் கொண்டுதான் சென்னைக்குப் புறப்பட்டார்.



இந்த இரண்டாவது கச்சேரிக்குச் செம்மங்குடிக்குப் பக்கவாத்தியமாக வயலின் வாசிக்க பாப்பா வெங்கட்டராமய்யாவை ஏற்பாடு செய்திருந்தார்கள். பாடகர் வந்து வெகு நேரமாகியும் வயலின் வித்துவான் வந்து சேரும் வழியாகக் காணோம். ரசிகர்களின் பொறுமை கரைந்து கொண்டிருந்தது. சற்றுக் கால தாமதமாக பாப்பா வந்து மேடையில் அமர்ந்தாரோ இல்லையோ, செம்மங்குடி சட்டென்று, 'எனக்கு ஏது வரட்டும், ஏது போகட்டும் உன் சமீபத்தில் இருப்பதை விடமாட்டேன் ஸ்ரீ ராமா' என்று பொருள் படும்படியான 'எந்தரா நீ' என்ற தியாகையரின் கீர்த்தனையை ஆரம்பித்தார். பொருளைப் புரிந்துகொண்ட ரசிகர்கள் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி, கால தாமதத்தை மறந்து விட்டார்கள். அன்றையக் கச்சேரி முதல் நிமிடத்திலேயே களை கட்டி விட்டது.

இன்னொரு சந்தர்ப்பம். சஞ்சீவிராவின் புல்லாங்குழல் கச்சேரி. மாலை நான்கு நாற்பத்தைந்துக்கு சஞ்சீவி ராவ்

மேலே : மாநில அமைச்சரை மகிழ்ச்சியுடன் வரவேற்கும் சபா நிர்வாகிகள்.

கீழே : சபையை நிறைத்துச் சபாவை வளர்க்கும் ரசிகப் பெருமக்கள்.

காம்போஜி ராகத்தை ஆரம்பித்தார். **அந்த காம்போஜிராகம் பூர்த்தியானபோது இரவுமணி எட்டு!** அதைத் தொடர்ந்து சஞ்சீவி ராவ் எடுத்துக் கொண்ட ராகம் சங்கராபரணம். ரசிகர்கள் கடிகாரங்களை மறந்துவிட்டார்கள். ஆனால் அன்று கச்சேரிக்கு மிருதங்கம் வாசித்த பாலக்காடு மணி அவர்களால் அப்படி இருக்க முடியவில்லை. ஒரு இருபசாக ஒன்பது ஐந்துக்குக் கச்சேரியை முடித்துக் கொண்டு அவசரம் அவசரமாகக் கிளம்பி னார். 9–20 ரயிலைப் பிடிக்க.

இவை போன்ற எத்தனையோ சுவாரசிய மான நிகழ்ச்சிகளைக் கடந்த எழுபது ஆண்டு களாகக் கண்டு அநுபவித்து வரும் ஸ்தாப னம் சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள ஸ்ரீபார்த்தசாரதி ஸ்வாமி சபா! எழுபதாவது ஆண்டு விழாவை பிளாட்டினம் ஜூபிலி யாகச் சமீபத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடியது. இந்த நூற்றாண்டின் கலை வளர்ச்சியை அப்படியே பிரதிபலிக்கும் ஸ்தாபனம் அல்லவா ?

ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி கோயிலுக்கு அருகில் வசித்து வந்த மன்னி திருமலாச் சாரியார் என்பவர் தம் வீட்டிலேயே 1896ல் ஆரம்பித்த 'சங்கீத வித்வத் சபா' தான் இந்தப் பார்த்தசாரதி ஸ்வாமி சபாவின் வித்து. அங்கத்தினர்கள், சந்தா என்ற விஷயமெல் லாம் அப்போது கிடையாது. பெரிய பெரிய வித்துவான்களை மன்னி திருமலாச்சாரி யாரும் அவர் நண்பர்களும் அழைத்து வரு வார்கள். அவர் வீட்டில் கச்சேரி நடக்கும். ரசிகர்கள் கூடி அமர்ந்து அநுபவிப்பார்கள். ஒன்றிரண்டு பிரமுகர்கள் வித்வானுக்குச் சன்மானம் செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு விடுவார்கள். சில சமயங்களில் ரசிகர்கள் தங்கள் விரல்களிலிருந்து வைர மோதிரங்களைக் கழற்றி வித்வான்களுக்குக் கொடுத்து விடுவார்கள். அப்படிப்பட்ட காலம்.

கலை நிகழ்ச்சிகளை எல்லோருக்கும் பய னுள்ளதாகச் செய்ய வேண்டும் என்று 1901ம் ஆண்டில் இந்தச் சபையை ரிஜிஸ்தர் செய்தார்கள். சங்கீதத்தோடு கதா காலட் சேபம், உபந்நியாஸங்கள் முதலியவற்றை யும் சேர்த்துக் கொண்டார்கள். அந்த நாட் களில் பிரபலமடைந்திருந்த அத்தனை பாகவத சிரோன்மணிகளும் இந்தச் சபையில் தங்கள் திறமையைக் காண்பிப்பதில் பெருமை யடைந்தார்கள். 'இவர் பார்த்தசாரதி சபா வில் பாடியிருக்கிறாரா? அங்கு உபந்நியாசம் செய்திருக்கிறாரா?' போன்ற கேள்விகள், பாடகர்கள், உபந்நியாசகர்கள் முதலியவர் களின் தகுதியை நிர்ணயிக்கும் கேள்விகளாக அமைந்தன.

சபாவுக்கு என்று தனி இடம் வெகு நாட்கள் வரை இல்லாமல் இருந்தது. தனி யார் இல்லங்கள், டி. யூ. வி. எஸ். மண்டபம், ஹிந்து உயர்நிலைப் பள்ளி முதலிய இடங்களில் அவ்வப்போது கச்சேரிகளுக்கு ஏற்பாடு செய்து வந்தார்கள். இந்த ஏற்பாடுகளில் பல நிர்ப் பந்தங்களும் இருந்தன.

நல்ல வேளையாக இந்த இடப் பிரச்னையை 1959ம் ஆண்டில் காரியதரிசிகளாக இருந்த திருவாளர்கள் பட்சி ராஜகோபாலனும், வெங்கடகிருஷ்ணனும் சமாளிக்க முன்வந் தார்கள். வெங்கடரங்கம் பிள்ளை தெருவி லுள்ள விஸ்தாரமான இடம் ஒன்றைப் பிடித்துப் போட்டார்கள். அதிர்ஷ்டக் காரர் என்று பெயர் பெற்ற திரு எம். ஏ. சிதம்பரம் 1960ம் ஆண்டில் ஒரு சுப தினத் தன்று சபாவின் சொந்தக் கட்டடத்துக்கு அஸ்திவாரம் இட்டார்.

அஸ்திவாரம் போட்டாயிற்று. கட்டடம் வளர வேண்டாமா? வழக்கம்போல் கைகொடுத்து உதவ முன்வந்தார்கள் கலை ஞர்கள். ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர் களின் இசைக் கச்சேரியும், வைஜயந்திமாலா வின் 'திருப்பாவை' நாட்டிய அரங்கேற்றமும் ஸ்ரீமதி பத்மினி குழுவின் 'ராமாயண' நாட் டிய நாடக அரங்கேற்றமும் சேர்ந்து நிர்வாகி களின் பணக் கவலையைப் போக்கின. திறந்தவெளிக் கலை அரங்கம் முதலில் கம்பீர மாக எழுந்தது. 1962 ஜனவரி மாதத்தில் பரோடா மகாராஜா இந்தக் கலை அரங்கத் தைத் திறந்து வைத்து ஒரு கணிசமான தொகை நன்கொடையாகவும் அளித்தார்.

அடுத்தாற்போல் திறந்தவெளி அரங் கத்தை முழுமையான அரங்கமாக ஆக்க வேண்டாமா? திருவாளர்கள், என். இ. ரகு நாதன், ஸ்ரீராம், இ. ஆர். துரைசாமி, ராமாநுஜன் போன்றவர்கள் மற்ற சகாக் களின் துணையுடன் அந்த ஏற்பாட்டில் முழு மூச்சுடன் இறங்கினார்கள். பல கலை நிகழ்ச்சி களுக்கு ஏற்பாடு செய்தார்கள். மத்திய சர்க் காரும் நிதி உதவியது. அறுபத்து ஆறாயிரம் ரூபாய் செலவில் முழுமையான அரங்கம் உரு வாகி விட்டது.

இந்தச் சபாவுக்கு ஒரு விசேஷ போஷகர் உண்டு. அவர் வருடத்துக்கு ஒரு நாள்தான் இந்தச் சபாவுக்கு விஜயம் செய்வார். அது கூட ஏதாவது இசை, நடன, நாடக நிகழ்ச்சிகள் நடக்கும் வேளையில் வரமாட் டார். நள்ளிரவுக்குப் பிறகு சுமார் ஒரு மணி அளவில் வந்து ஒரு மணி அவகாசம் இருந்து விட்டுக் கிளம்புவார். ஆனாலும் அந்த நேரத்திலும் பெரும்பாலான அங்கத் தினர்கள் அவரைச் சந்தித்து அளவளாவ வந்து விடுவார்கள். அந்த போஷகர் யார் தெரியுமா? தம் பெயரையும் அருளையும் இந்த ஸ்தாபனத்துக்கு வழங்கியிருக்கும் சாக்ஷாத் ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமானே தான்! ஆண்டுக்கு ஒரு முறை அவர், சைதாப்பேட்டை ஈக்காட்டில் உள்ள பக்த கோடிகளை அருள்பாலிக்க இரவு பன்னிரண்டு மணிக்குக் கிளம்பும்போது தம் பெயருள்ள சபா அரங்கத்துக்கு வந்து அங்கிருந்து ஈக்காட்டுக்குக் கிளம்புகிறார்.

காரியதரிசிகளாகப் பணியாற்றும் இ. ஆர். துரைசாமி, கே. ஏ. மணவாளன் ஆகியோரும் மற்றும் எம். ஏ. சீநிவாஸன், பட்சிராஜ கோபாலன், பாஷ்யம், ஸ்ரீராம் முதலியவர் களும் தங்கள் வயதுகளை மறந்து உற்சாகத் துடன் ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி சபாவின் ஆண்டு விழாவில் பணியாற்றியதைக் கண்ட போது இந்தச் சபாவின் வயது எழுபதானு லும், இளமை உணர்ச்சி பொங்கும் சபா வாகத்தான் விளங்குகிறது என்று நினைக்கத்

தோன்றுகிறது. இளைஞர் சேஷாத்திரி, முதிர்ந்த பொறுப்புடன் வரவேற்பைச் சமாளித்தார்.

வெகு குறைந்த சந்தா விகிதங்கள், வெளி நிகழ்ச்சிகளுக்கு வெகு குறைந்த வாடகைக் கட்டண விகிதங்கள், கதாகாலக்ஷேப நிகழ்ச்சிகளுக்கு விசேஷ சலுகைகள், ஒரே மாதிரியான ஆயிரத்து அறுநூறு நாற்காலிகள் (மாநில அரசு இதற்குப் பணம் உதவி, தவணை முறையில் திரும்பப் பெற்றுக் கொள்கிறது) பதினையாயிரம் ரூபாய் செலவில் இந்த எழுபதாவது ஆண்டு விழா நினைவாக நிறுவப்பட்டிருக்கும் ஒலிபெருக்கிச் சாதனங்கள் எல்லாமாகச் சேர்ந்து ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி சபா, நகரத்திலேயே முதிர்ந்த சபா என்ற பெருமையோடு, முன்னோடியாக விளங்கும் சபா என்ற பெருமையையும் சம்பாதித்துக் கொள்கிறது. இந்த எழுபதாண்டு விழா, பதினேழு தினங்களில் பத்தொன்பது நிகழ்ச்சிகள் அடங்கிய திருவிழாவாகவல்லவா இருந்தது!

— பட்டினத்தார்

பொது இன்ஷூரன்ஸ்

அரசுடைமையாக்குவது அவசியமா?

பாங்குகள் தேச உடைமையாக்கப்பட்ட வேகத்திலேயே நாட்டில் இயங்கிக் கொண்டிருக்கும் பொது இன்ஷூரன்ஸ் கம்பெனிகளையும் தேசிய மயமாக்க வேண்டும் என்ற பிரசாரம் வலுவாகச் செய்யப்பட்டு வருகிறது.

அரசு சற்று ஆராய்ந்து பார்த்தால் பொது இன்ஷூரன்ஸ் துறையைத் தேசிய மயமாக்கத் தேவையுமில்லை; அதில் லாபமுமில்லை; கஷ்டங்கள் மட்டுமே மிஞ்சும் என்பது தெளிவாக விளங்கும்.

தீவிபத்து, விமான விபத்து, மோட்டார் சாலை விபத்துக்கள், திருட்டுப் பயம் - இப்படிப் பலதரப்பட்ட எதிர்பாராத விபத்துக்களினால் ஏற்படும் நஷ்டங்களுக்கு ஈடாகப் பாதுகாப்புக் கோரப்படுகிறது. இப்பாதுகாப்புகளைக் குறைந்த பாலிஸி கட்டணத்தில் திருப்திகரமாக வழங்குவதுடன் விபத்துக்கள் நேருமாயின், உடனுக்குடனே ஸ்தலத்துக்குச் சென்று நஷ்டத்தை மதிப்பீடு செய்து ஈட்டுத் தொகையைக் கால தாமதமின்றி வழங்க வேண்டும். இரு விதங்களிலும் — பாதுகாப்பு அளிக்கும்போதும், நஷ்ட ஈடு கொடுக்கும் போதும் — சேவை உணர்ச்சியும் விரைவான நடவடிக்கைகளுமே இத் தொழிலில் முக்கியம். கட்டணம் வசூலிப்பதும், நஷ்டத் தொகையும் பிரதானமல்ல. எந்தக் கம்பெனி இந்தச் சேவையைத் திறமையுடன், திருப்தியுடன் அளிக்கிறதோ, அந்தக் கம்பெனி வெற்றிகரமாகத் தொழில் நடத்துகிறது.

தற்போது சுமார் 130 தனியார் துறைக் கம்பெனிகள் இத்துறையில் சேவை புரிந்து கொண்டிருக்கின்றன. இக்கம்பெனிகளில் மூலதனமாக விடுமுதல் செய்யப்பட்டுள்ள தொகை சுமார் 58 கோடி ரூபாயாகும். ஆண்டு வருமானம் சுமார் மூன்று கோடி. ஆகவே தேச உடைமையாக்கினால் அரசாங்கத்துக்குக் கிடைக்கக்கூடிய லாபம் சுமார் ரூ. 60 கோடி. ஆயுள் இன்ஷூரன்ஸ் தேச உடைமையாக்கப் பட்டபோது கிடைத்ததுடன் ஒப்பிட்டால் இது மிகக் குறைவு.

ஆனால் இந்தத் தொழிலை நடத்துவதில் உள்ள சிரமங்கள் அதிகம். உதாரணமாக, பொது இன்ஷூரன்ஸ் தொழிலில் இப்போது வருஷத்துக்குச் சராசரி சுமார் ஐந்து லட்சம் விசாரணைகள் நடத்தி நஷ்டஈடுகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொன்றிலும் நஷ்டத்தை மதிப்பீடு செய்து பின்னரே ஈட்டுத் தொகை வழங்க வேண்டும். ஆயுள் இன்ஷூரன்ஸில் ஆண்டுக்குச் சராசரி இரண்டரை லட்சம் பாலிஸிகளுக்கே பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. அதிலும் கொடுக்கப்பட வேண்டிய தொகை பாலிஸியிலேயே குறிக்கப்பட்டுள்ளபடியால் சந்தேகத்துக்கோ சச்சரவுக்கோ இடமில்லை. விசாரணையும் தேவைப்படுவதில்லை. பொது இன்ஷூரன்ஸ் நடவடிக்கைகளில் மனிதத் தன்மை முக்கியமாக வேண்டும். சர்க்கார் துறையில் இதை எதிர்பார்க்க முடியாது.

இத்துறையை அரசாங்கம் மேற்கொள்வதால் பாலிஸிதாரர்களுக்கு ஒரு லாபமும் இல்லை. ஆயுள் இன்ஷூரன்ஸ் சர்க்கார் உடைமையாகிப் பதின்மூன்று வருஷங்களாகிவிட்டன. லட்சோபலட்சம் பாலிஸிதாரர்கள் என்னென்ன புதுப் புது நன்மைகளை அடைந்து விட்டார்கள்?

போட்டா போட்டி இருந்தால்தான் சேவையின் தாரதம்மியத்தைச் சீர்தூக்கிப் பார்க்க முடியும். ஒப்பிடுவதற்கு இரண்டாவது நிறுவனமே இல்லாமல் சர்க்கார் உடைமையாக்கினால் எது உயர்வு, எது தாழ்வு என்ற பாகுபாடே இருக்காதல்லவா?

ஆயுள் இன்ஷூரன்ஸ் தேச உடைமையாக்கப்பட்டபோது சில கம்பெனிகள் நடத்தி வந்த பொது இன்ஷூரன்ஸ் தொழிலும் ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷனுடன் இணைந்து விட்டது. இன்று எல். ஐ. ஸி. பொது இன்ஷூரன்ஸ் பாலிஸிகளையும் வழங்குகிறது. பொது இன்ஷூரன்ஸ் தொழிலில் இந்த அரசாங்க நிறுவனம் தனியார் துறையுடன் போட்டியிட்டுத் தன் சேவையின் தன்மையை நிலைநாட்டட்டுமே! — சிவஸ்வாமி

இவரிடமிருப்பது பிரஸ்டிஜ் Prestige இவரிடமிருப்பது ப்ரீத் PREETT



இவர் இருப்பது இந்தியாவில்



இவர் இருப்பது வெளிநாட்டில்

இருவரும் உபயோகிப்பது ஒரே பிரஷர் குக்கர்தான் இரண்டுமே டிடி.(பிரைவேட்) லிமிடெட் தயாரிப்புதான் – பெயர் மட்டுமே வித்தியாசம்

இந்தியாவில் பிரஸ்டிஜ் என்றும், ஏற்றுமதிக்கு ப்ரீத் என்றும் தயாரிக்கப்படும் இரண்டு குக்கர்களும் எவ்வகையிலும் ஒன்றுதான். எட்டு லட்சத்திற்கும் அதிகமான குடும்பத் தலைவிகள் இவற்றை நாள்தோறும், ஆண்டுக்கணக்கில் பயன்படுத்துகிறார்கள்.

உங்கள் பிரஷர் குக்கர் பிரஸ்டிஜாகவும் சரி, ப்ரீத்தாகவும் சரி அவை பயன்படுத்தப் பத்திரமானது. ஆயுள்கால உத்தரவாதம் கொண்டது. நாடெங்கும் விற்பனைக்குப் பின்னரும் பராமரிப்புக்கு வசதியுள்ள பிரஷர் குக்கர் இது ஒன்றே.

சீக்கிரமாயும் சுலபமாயும் சமைக்க உதவுபவை, ப்ரீத் 'ஸ்டீம்-இட்', ஸ்கில்லெட், ஸாஸ்பான் பாத்திரங்கள்.

MTA-TTP-3697



டிடி. (பிரைவேட்) லிமிடெட், பெங்களூர் 16



குடை ராட்டினம்

எஸ். ரங்கநாயகி

அத்தியாயம் 16

'என்னை வெறுக்கலாம், குழந்தையை வெறுக்க முடியுமா?' என்று ரூபகுமார் கேட்ட கேள்வி ரமாவை அயர வைத்தது. திட்டமிடாமலே அவனுள்ளிருந்து ஏதோ ஒன்று அவனுக்குச் சொல்லிக் கொடுக்க, அவன் அப்படிப் பேசினான் பொருளுடன்.

ரமா விரக்தியுடன் உதட்டைப் பிரித்துச் சிரிப்பின் நிழலைக் காட்டினாள்.

ரூபகுமார் சிறிது நேரம் அங்கிருந்துவிட்டு எழுந்தான். அறைக்கு வெளியே வரும்போது திடீரென்று ஒரு சந்தேகம் தட்டியது. பொறி தட்டினாற் போல் மீண்டும் உள்ளே ஓடினான்.

''ரமா, நீ பதிலே கூறவில்லையே! நானும் பேசாமல் சென்று விட்டேன். நீ சிரித்தது இப்படியாக இருக்குமோ? ஒருகால்...? பிறப்பும் மரணமும் ஆண்டவன் கையிலிருக்கிறது, ரமா! அவனது படைப்பை நாம் அழிக்கப் பார்த்தால் எத்தனையோ விதச் சங்கடங்கள்...அது உனக்கே தெரிந்திருக்கும்... நான் சொல்வது புரிகிறதா, ரமா...'' அவள் கைகளைப் பற்றியபடி அவன் பரபரப்புடன் கூறினான்.

படுத்திருந்த ரமா மெள்ள எழுந்து அமர்ந்தாள். ''நீங்கள் பெண்களைப் புரிந்து கொண்டதாக ஆரம்பத்தில் பேசிவிட்டாலும் நீங்கள் முழுமையைக் காணவில்லை என்பது இப்போது புரிகிறது. படைப்பை அழிக்கும் உள்ளம் பெண்களுக்கு மட்டும் இருந்திருக்குமானால் ஒரு பிச்சைக்காரிக்கும் கையில் குழந்தை இருக்காது. எப்போதுமே அவன் தனியாக நின்று விடுவான். ஆயிரத்தில் ஒருத்தி அரக்கியாக இருக்கலாமோ என்னவோ? தாய்மையை அழிக்க எந்தப் பெண்ணும் விரும்ப மாட்டாள். அந்தப் பலவீனமே இது வரை பெண்களை அடக்கி ஆண்டு வந்திருக்கிறது!'' என்றாள்.

ரூபகுமார் சந்தேகம் தெளிந்த நிலையில் பெருமூச்சு விட்டுக் கொண்டான். அவன் கை இன்னமும் ரமாவைப் பற்றியபடியேதான் இருந்தது.

ஒரு நிமிட மௌனத்துக்குப் பிறகு ரமா திடீரென்று குலுங்கக் குலுங்க அழ ஆரம்பித்து விட்டாள்.

ரூபகுமார் திடுக்கிட்டு விட்டான். ''என்ன ரமா, என்ன இது?''

''நான் பலவிதமாக வஞ்சிக்கப்பட்டு விட்டேன். இதையெல்லாம் நான் எப்படிச் சகிக்கப் போகிறேனோ! காதலுக்கும் விவாகத்துக்கும் சம்பந்தமில்லாமல் என் திருமணம் நடந்து விட்டது. இப்போதோ தாய்மை வேறு. பிறக்கும் குழந்தையை நான் கண்டிப்பாக வெறுக்க முடியாது. அதைத் தூக்குவேன், கொஞ்சுவேன், பால் ஊட்டுவேன்... 'அம்மா!' என்று அது கூப்பிட்டு வரும்போது மனம் மகிழ்வேன். அப்பொழுதாவது நான் கடந்த கால வாழ்வை மறந்து விடுவேனா? உன்னோடு இப்போது பூஜிக்கும் காதலை மறந்து விடுவேனா?''

எவனிடத்தில் தன் மனத்தைத் திறந்து விட்டால் கெடுதி செய்து விடுவானோ என்ற அச்சம் இருந்ததோ, அவனிடமே இப்போதும் மாறாத தன் அவல நிலையைக் காட்டிவிட்டாள்.

ரூபகுமாருக்கு ஏனோ கோபமே வரவில்லை. அதற்கு மாறாக ஏதோ தெரிந்தாற்போலிருந்தது. தாம்பத்திய வாழ்க்கையின் உள் தத்துவம் புரிந்தாற்போலுமிருந்தது. அவன் மிருகமில்லை; மனிதன். அவனுக்கும் இதயம் உண்டு. அதன் மூலையில் கொஞ்சம் இரக்கமும் உண்டு. இரக்கம் விழிப்படையச் சிலருக்குச் சிலசமயங்களில் தாமதமாகி விடுகிறது. அதற்கு ஒரு நிகழ்ச்சியின் அடிப்படையைத் தேடுகிறது இதயம். அந்த வகையான மனித இதயம் படைத்தவன் ரூபகுமார்.

ரூபகுமார் மெதுவாக ரமாவின் முதுகைத் தடவிக் கொடுத்தான். ''ரமா!'' என்று கூறிவிட்டு ஏதோ சொல்ல வாயெடுத்தவன் சொல்லாமலே நிறுத்திக் கொண்டான். பிறகு அடிமேல் அடி எடுத்து வைத்து மெள்ள அந்த அறையை விட்டு வெளியே வந்து விட்டான்.

வாழ்க்கை என்பது இரு புள்ளிகளின் நடுவே இழுக்கப்படும் நேர்க் கோடு. அதற்கு இரு முனைகள் அவசியம். அப்போதுதான் அக்கோட்டை வரைய முடியும். அக்கோடும் பூர்த்தியாகும். அம் முனைகள் சேராவிடில் கோடு இல்லை. வாழ்க்கைக் கோட்டில் இரு முனைகளாகக் கணவனும் மனைவியும் அமைகிறார்கள். அது நேருக்கு நேர் அமையாவிடில் அதை வாழ்க்கை என்று கூறிவிட முடியுமா? சாப்பிடும் சாப்பாட்டைக் குறித்த முறையில் சாப்பிடுவது ருசித்த உணவாகும். தாறுமாறாக உட்கொள்வது ருசித்த உணவாகுமா? அவன் மட்டும் தன் ஐசுவரியத்தை அனுபவிப்பது போல் மனைவியை அனுபவிக்கிறான். ஆனால் அம் மனைவி அக்கணவனை அனுபவித்தாலல்லவோ நேர் பாதையாக இருக்கும்? இத்தனை நாட்களாக ஏன் அது அவனுக்குத் தோன்றவில்லை? உயர்ந்த பீடத்தில் வைத்து அவன் பூஜிக்க நினைத்த மலர், அவ்வழி தெரியாத அவன் கையிலேயே வாடிவிட்டது. தன் பூஜைக்கெனப் பறித்த மலர் அவனுக்கு மணம் தர மறுத்து விட்டது. மலரைப் பறித்ததன் பலன் அவனுக்குக் கிடைக்கவில்லை. இதில் மிருகத்தனமான செய்கைதான் மிகுந்து நின்றது. மனித இதயம் மறைந்திருந்தது...




இப்படி மனத்தில் எத்தனையோ ஓட்டங்கள்! எத்தனையோ சஞ்சலங்கள்! தான் கணக்குப் போட்டு நிறைவேற்றியதெல்லாம் இப்படிப் பூஜ்யத்தைக் காட்டும் என்று அவன் நினைக்கவில்லை.

ரூபகுமாரின் மனம் சோர்ந்துவிட்டது. ரமாவைப் பார்க்கும்போதெல்லாம் ஏதோ ஒன்று அவனை, 'நீ குற்றவாளி' என்று சுட்டிக் காட்டுவது போன்ற பிரமை. அதனால் அவன் அடிக்கடி காரியாலயத்திலேயே தங்க ஆரம்பித்து விட்டான்.

* * *

வாசு!

வாசுவை நினைக்கும்போதே காந்தியின் மனத்தில் ஒரு கிளர்ச்சி. அரியாசனத்தில் ஏறிவிட்ட மன்னனுக்கு மகுடம் அணிவிப்பது போல் தன் அஞ்சலிகளைச் செலுத்த அவள் மனம் விழைந்தது. வாசு, ரமா இருவரும் ஒருவரையொருவர் நேசித்ததால் அவர்கள் திருமணத்துக்கு அவள் தடையாக இருக்கவில்லை. இப்போதோ?...



நிலை மாறிவிட்டது. ரமா வேறு ஒருவனுக்குச் சொந்தமாகி விட்டாள். அவள் தானாகவே ரூபகுமாரை மணந்ததாக வாசு நினைத்து வருவானாதலால், ரமாவை அவன் வெறுக்கவும் சந்தர்ப்பம் உண்டு. ரமாவை வாசு வெறுக்க முற்பட்டு விட்டால் அவன் தன் வாழ்க்கைத் திசையை மாற்றிக் கொள்ள முடியும். வாசுவின் மனம் மாறி விட்டால் காந்தியின் காதல் நிறைவேற வாய்ப்பு உண்டு.

இதுவரை அவள் காதல் ஒருதலைப்பட்ச காதலாகத்தான் இருந்து வந்திருக்கிறது. அவள் தன் மனத்தோடு போற்றி வந்த காதலை எவரும் அறிய மாட்டார்கள். ரமாவே வாசுவை மணந்திருந்தால் கூட அவளால் வாசுவை மறந்திருக்க முடியாது.

வாசுவின் புகைப்படத்தில் கீழே சிறிது இடைவெளி இருந்த இடத்தில் 'வாசு என் காதலர்! இன்பக் கனவுகளின் இருப்பிடம்!' என்று எழுதி 'காந்தி' என்று கையெழுத்திட்டாள்.

புகைப் படத்தைக் கையில் தூக்கிப் பிடித்தவளுக்கு விரல்களில் பேனாவின் மசி படிந்திருப்பது தெரிந்தது. உடனே புகைப்படத்தை அங்கேயே வைத்து விட்டுக் கை கழுவி வரச் சென்றாள்.

இதே நேரத்தில் காந்தியைப் பார்க்க ரமா அங்கே வந்தாள். 'காந்தி எங்கே போயிருப்பாள்?' என்று எண்ணியவாறு கட்டிலில் உட்காரப் போனாள். அவள் கண்களில் அப்போது பட்டது அந்தப்

புகைப்படம்! அதன் கீழே... ஆ! இது என்ன வாசகம்!...

ரமாவுக்கு ஒரே வியப்பு. காந்தி வாசுவைக் காதலிக்கிறாளா? காந்தியின் காதலன் வாசுவா? காந்தி வாசுவைக் காதலிக்கக் கூடும் என்ற எண்ணமே அவளுக்கு இதுவரை பிறக்கவில்லையே!

முன்பு காந்தி தன்னிடமிருந்து மறைத்த புகைப்படத்தின் நினைவு ரமாவுக்கு வந்தது. இப்போது அதன் மறை பொருள் புரிந்தது. சகோதரிகள் இருவரும் ஒருவனையே விரும்பியிருக்கிறார்கள். சகோதரிக்கு விட்டுக் கொடுப்பதற்காகக் காந்தி தன் காதலை மறைத்திருக்கிறாள். எவ்வளவு மேம்பட்ட உள்ளம்! இதை நினைக்கும் போதே ரமாவின் உள்ளம் சிலிர்த்தது.

இனி ரமா தன் பங்கை நடத்திக் காட்டிவிட வேண்டும். தெரியாத தொன்று இப்பொழுது தெரிந்துவிட்டது. வாசுவுக்கும் இன்னும் விவாகம் முடியவில்லை. அதனால் காந்தியின் காதலாவது வெற்றி பெற முயலவேண்டும்.

காந்தி கை கழுவிவிட்டு உள்ளே வந்தாள். கட்டிலில் ரமா அமர்ந்திருப்பதைப் பார்த்ததும் திடுக்கிட்டாள். "ரமா! நீ எப்போது வந்தாய்?" என்று கேட்டாள்.

"இப்போதுதான்."

காந்தி அவள் பதிலைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் கட்டிலில் மேலும் கீழும் எதையோ தேடலானாள்.

"என்ன தேடுகிறாய், காந்தி?"

"ஒ...ன்...றுமில்லை... வந்து..."

"என்ன... வந்து....?"

ரமா அவளைப் புன்முறுவலுடன் நோக்கினாள்.

காந்தி புரிந்து கொண்டு விட்டாள், ரமாதான் அதை எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறாள் என்று! "ரமா, ப்ளீஸ்! அதைக் கொடுத்துவிடு."

ரமா அவளை இறுக அணைத்துத் தன் பக்கத்தில் உட்கார்த்திக் கொண்டாள்.

"காந்தி! என்னிடமே நீ இப்படி மறைக்கலாமா?"

காந்தி பதிலே கூறவில்லை.

"காந்தி! வாசுவிடம் இவ்வளவு நேசத்தை வளர்த்துக் கொண்டு அதை ஒருவரிடமும் கூறாமல் மனத்தோடு வைத்திருக்கிறாயே! எப்படியம்மா உன்னால் முடிந்தது? எனக்காக நீ எப்படியெல்லாம் விட்டுக் கொடுத்திருக்கிறாய்?" என்று வியந்தாள் ரமா.

"விட்டுக் கொடுத்தும் பலனில்லாமல் போய்விட்டதே!" நாத் தழுதழுக்கக் காந்தி கூறினாள்.

"கடவுள் விருப்பம் எனக்கு இப்போதுதான் புரிகிறது. காந்தி! உன்னையும் வாசுவையும் இணைப்பதுதான் ஆண்டவன் கட்டளை. அதனால்தான் என் விவாகம் வேறு விதத்தில் முடிந்திருக்கிறது. காந்தி! என் காதல் ஈடேறவில்லை. நான் வாழ முடியாமல் நிற்கிறேன். நீயும் அந்த நிலையில் இருக்க நான் விரும்பவில்லை. நீயாவது வாழ்ந்து மகிழ வேண்டும். நமக்கு அம்மா இல்லை. அம்மா நிலையில் இருந்து நான் உன் காதலை நிறைவேற்ற முயலுவேன்."

ரமா வீடு திரும்ப எழுந்தவள் கர்சீப்பில் மறைத்து வைத்திருந்த வாசுவின் புகைப்படத்தைக் காந்தியிடமே கொடுத்து, "காந்தி, அப்பாவை நாளை அங்கு வரச் சொல்கிறாயா? அல்லது நானே இங்கு வரட்டுமா? கல்யாண வேலை தலைக்குமேல் காத்து நிற்கிறதே!" என்றாள்.

"நீ சொல்கிறபடி செய்கிறேன்" என்ற காந்தியின் உள்ளம் உள்ளூறக் குதூகலத்தில் துள்ளிக் குதித்தது.

மறு நாள் காலை காந்தி எதுவும் கூறுவதற்கு முன்பாகவே கோசல்ராம் ரமாவைப் பார்க்க வந்தார். பேச்சுக்

இடையே ரமா "அப்பா, காந்திக்கும் வயதாகிறதே! கல்யாணம் செய்துவிட வேண்டாமா?" என்று கேட்டாள்.

"வேண்டியதுதான். ஆனால்..... பிள்ளை?"

"பிள்ளைகளுக்கு என்ன குறைச்சல்? வாசுவுக்குக் காந்தியை மணம் முடித்து விட்டால் என்ன?" என்று கேட்டாள் ரமா.

"என்ன, வாசுவுக்கா?" ரூபகுமாரே திடுக்கிட்டுக் கேட்டு விட்டான்.

"ரமா! நீ என்ன, விளையாடுகிறாயா? இதைக் கேட்டால் காந்தி உன்னிடம் சண்டைக்கே வந்து விடுவாள்!" என்றார் கோசல்ராம்.

"மாட்டாள், அப்பா! அவளே வாசுவை விரும்புகிறாள். எனக்கு இது நன்றாகத் தெரியும். அதனால்தான் நான் அவளுக்கு வழி விட்டு இவரை மணந்தேன்!" என்று போடு போட்டாள் ரமா.

ரூபகுமார் அவளை வியப்புடன் நோக்கினான்.

அதே சமயம் டெலிபோன் மணி அடித்தது.

ரிசிவரை எடுத்த ரூபகுமார் அதை ரமாவிடம் கொடுத்து, "லேடி டாக்டர் பேசுகிறாள்!" என்றான்.

"என்னது? லேடி டாக்டரா? ரமாவுக்கு என்ன உடம்பு?" — கோசல்ராம் கேட்கவே, ரமாவும் ரூபகுமாரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர். கோசல்ராம் புரிந்து கொண்டு விட்டார்.

அன்று இரவு ரூபகுமார் ரமாவிடம் மெள்ளக் கேட்டான்: "ரமா! காந்தியின் காதலை நிறைவேற்ற என்னை மணந்ததாகக் கூறினாயே! அது உண்மையாக இருக்குமானால்..."

"உண்மையோ, பொய்யோ என் காதலைப் போலில்லாமல் காந்தியின் காதலாவது வெற்றி பெற ஆண்டவன் அருளட்டும்!" என்று முடித்தாள் ரமா.

* * *

அன்று தேவகி சீதாபதியின் வீட்டுக்குச் சென்றிருந்தபோது ஆனந்தும் வீட்டில் இருந்தான்.

"வாருங்கள், அம்மா!" என்று தேவகியை வரவேற்றான் ஆனந்த். "இன்று காலைதான் வெளியூரிலிருந்து திரும்பினேன். ஊட்டியில் சில காட்சிகளைப் பார்த்து வரைந்து தரும்படி ஸ்ரீகாந்த் கூறியிருந்தார்."

"நீ ஊரில் இல்லாதது தெரியாதே! தெரிந்திருந்தால் ஒரு தடவை அப்பாவைப் பார்த்துப் போக நானே வாசுவோ வந்திருப்போமே! நீ பெண்ணூர் சென்றிருந்தபோது நாங்கள் திரும்பிக் கூடப் பார்க்கவில்லைதான். அப்படிப் பட்டவர்கள் இப்போது மட்டும் எங்கே கவனிக்க வரப் போகிறோர்கள் என்று ஒருவேளை நீ எண்ணியிருக்கலாம்! அதனால் தான் சொல்லவில்லையோ?" என்றாள் தேவகி.

"அப்படியெல்லாம் நீங்களாக நினைத்துக் கொண்டு ஏன் மனத்தைப் போட்டுக் குழப்பிக் கொள்கிறீர்கள்? ஆமாம், வாசுவை இப்போதெல்லாம் இந்தப் பக்கமே காணவில்லையே, ஏன்?" என்று கேட்டான் ஆனந்த்.

"ரமாவின் கல்யாணத்துக்குப் பிறகு அவன் வெளிக் கிளம்பிச் சரளமாகப் பேசிப் பழகுவதையே விட்டுவிட்டான். அவன் ஆபீஸ் நண்பர் சுதர்சனம்கூட, 'உங்கள் மகனை இப்படியே விட்டு வைத்திருந்தால் அவனை இழக்க வேண்டியது தான்' என்கிறார்!" தேவகி அழுதே விட்டாள்.

"ஐயோ! என்ன வார்த்தை அம்மா இது?" ஆனந்த் அச்சத்துடன் கூவினான்.

"நான் என்னப்பா செய்யட்டும்? அவன் மனத்தோடு மறுகித் தவிக்கிறான். சுதர்சனமோ அவனுக்கு விவாகம் செய்து வைக்கும்படி கூறுகிறார். அவனிடம் அது பற்றியும் கேட்டு விட்டேன். மிஞ்சியது தோல்விதான்!"

அதே நேரத்தில் வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது. கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தவரை நோக்கியபோது மூவருமே திகைத்தனர்.

'இவள் இங்கே எங்கே வருகிறாள்?'

வரவேற்கக் கூட மறந்து வியப்புடன் மூவரும் அமர்ந்திருந்தபோது ரமா தானாகவே உள்ளே நுழைந்தாள்.

அப்புறம் தான் தேவகி தன்னைச் சமாளித்துக் கொண்டு, "வா, அம்மா! ரமா!" என்று வரவேற்றாள்.

"உங்களைத் தேடிக் கொண்டு உங்கள் வீட்டுக்குப் போனேன். வீடு பூட்டியிருந்தது. இங்கே இருப்பீர்களோ என்று சந்தேகம். அதனால்தான் காரை இந்தப் பக்கம் செலுத்தி வந்தேன். ஜன்னல் பக்கம் நீங்கள் இருப்பது தெரிந்தது...அப்...படி...யும்..... உள்ளே...வர... அச்சம்... கூச்சம்... ஏதோ துணிவுடன்..." ரமாவால் பேச முடியவில்லை. குரல் அடைத்தது. ஏழையொருவன் பணக்காரன் வீட்டில் யோசித்து யோசித்து நுழைவதுபோல் பணக்காரியான அவள் கூசிக் குறுகித் தயக்கத்துடன் நுழைந்திருக்கிறாள்!


"உட்கார், ரமா!" தேவகி நாற்காலியைச் சுட்டிக் காட்டினாள்.

"என் வருகை உங்களுக்கெல்லாம் பிடிக்குமோ பிடிக்காதோ, வந்துவிட்



ஒன்று, இரண்டு, மூன்று
சீக்கிரம்... பாரெக்ஸ் புத்தகம் பெறுவீர்
இலவசம்
உங்கள் குழந்தைக்கு பாரெக்ஸ்
இது புதிய தாய்மார்களுக்கு அவசியம்!
இந்தக் கூப்பனுடன் 20 பைசா தபால் தலை இணைத்து.
டிபார்ட்மெண்ட் சே-1 தபால் பெட்டி 202, பம்பாய்-1.
என்னும் முகவரிக்கு உடனே அனுப்பவும்.
உங்கள் பெயர்
குழந்தையின் பெயர் (வைக்கப்பட்டிருந்தால்)
வயது
முகவரி
CMGI-5-202 TAM

வாழ்வில் முன்னேற விரும்பும் இளைஞர்களில் நீங்களும் ஒருவரா?



முன்னேற விரும்புவோர்க்கு வாழ்வே ஒரு எதிர்நீச்சல்.
அதைச் சமாளிக்க இணையற்ற ஆர்வம், ஈடில்லா முயற்சி,
உத்வேகம் முதலியன உறுதுணை நிற்கும்.

இவை ஒருங்கிணைந்த இளைஞரா நீங்கள்?

அப்படியானால் உங்களுக்கேற்ற சைக்கிள் பிலிப்ஸ்
உங்கள் துடிப்புமிகு தன்னம்பிக்கை, உறுதிமிகு ஆர்வம்,
இவற்றை அப்படியே பிரதிபலிக்கிறது பிலிப்ஸ் சைக்கிள்.

உயரிய எஃகினால் நுண்ணிய வேலைப்பாட்டுடன்
உருவாக்கப்படும் பிலிப்ஸ் உறுதியில் தன்னிகரற்றது,
சவாரிக்கு சுகமானது. தோற்றத்தில் எடுப்பானது.

இந்தியாவில் தயாரிப்போர்: டி.ஐ. சைக்கிள்ஸ்
ஆப் இந்தியா, அம்பத்தூர், சென்னை-53
உரிமையாளர்கள்: டியூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் ஆப்
இந்தியா லிமிடெட், சென்னை-1
பதிவு பெற்ற உபயோகிப்போர்:
• J.A. பிலிப்ஸ் கம்பெனி லிமிடெட்,
ப. கேர்ளின் பதிவுபெற்ற டிரேட் மார்க்குகள்

வெற்றிப்பாதையில்
வேகமாக முன்னேற

பிலிப்ஸ்

சைக்கிள்

டேன்!" என்று கண்ணீரிடையே கூறினாள் ரமா.

"இப்படி யெல்லாம் பேசாதே, குழந்தை! உன்னை எனக்குத்தெரியாதா? உன்னை என்னால் மறக்கத்தான் முடியுமா?" என்றாள் தேவகி.

"ரமா, எதையாவது பிதற்றாதே. வாசுவுக்குத் தெரியாதது கூட எங்களுக்குத் தெரியும். உன் மேல் குற்றமில்லை. நீ முன்போல் எப்போதும் இங்கு வரலாம்" என்றார் சீதாபதியும்.

ஆனந்த் எங்கோ பார்த்தபடி இருந்தான். ரமாவைப் பார்த்ததுமே அவன் எண்ணங்கள் எங்கெங்கோ தாவின.

"அம்மா! நான் வந்த காரணத்தை உடனே கூறிவிட்டுப் போய் விடுகிறேன்... என் சகோதரி காந்தியை உங்களுக்குத் தெரியுமே. நான் அறியாத வகையில் அவள்...அவள்..."

"சொல்லு, ரமா!"

"என் மனம் போலவே அவள் மனமும் வாசுவையே விரும்பி வந்திருக்கிறது. என் காதலை நிறைவேற்ற அவள் இதுநாள் வரை தன் காதலைப் பற்றிக் கூறாமலே இருந்திருக்கிறாள்!"

சீதாபதி, தேவகி, ஆனந்த் எல்லோருமே வியப்புடன் இச் செய்தியைக் கேட்டனர்.

"என் காதல் முறிந்து விட்டது போல் காந்தியும் ஏமாற்றம் காண்பதை நான் விரும்பவில்லை. தயவு செய்து நீங்கள்தான் என் பொருட்டு முயற்சி எடுத்து வாசுவுக்கும் காந்திக்கும் மணம் முடிக்க வேண்டும். நான் உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். நீங்கள் விரும்பினால் வாசுவின் காலில் விழுந்து வேண்டுமானாலும் நான் கெஞ்சுகிறேன்!"

தேவகி வாயடைத்து நின்றாள். வாசு விவாகம் செய்து கொள்வதாக இருந்தால் நல்ல பெண் கிடைக்க வேண்டுமே என்று அவள் அஞ்சினாள். அந்த அச்சம் நீங்கி இப்போது நல்ல பெண்ணாகக் கிடைத்திருக்கிறாள். ஆனால் வாசு விவாகப் பேச்சை எடுத்தாலே சீறிப் பாய்கிறானே! ரமாவிடம் இதை எப்படிக் கூறுவது? அப்படிக் கூறினால் ரமா தானே வாசுவைச் சந்திக்க முற்படுவாள். போதும், அவன் கையினால் ஒருமுறை அவள் அடிபட்டது போதும்.

"ரமா! வாசு உன்னை மறக்க முடியாமல் திணறுகிறான். அப்படி யிருக்கும்பொழுது..."

"அம்மா! வாசுவின் மனம் எனக்குத் தெரியும். ஆனாலும் அவர் மனம் தெளிவடைந்து காந்தியை மணக்க நீங்கள்தான் வழி வகுக்க வேண்டும்.

பணம் நமது தேவைகளைப் பூர்த்தி செய்வதாக நினைப்பது பைத்தியக்காரத்தனம். அது நம் தேவைகளைப் பெருக்கவே செய்கிறது.

'பின்லாந்து' பழமொழி

மனத் திருப்தியைப் போன்ற சுகம், ஒழுக்கத்தைப் போன்ற ஆபரணம், ஆரோக்கியத்தைப் போன்ற லாபம் உலகில் வேறெதுவுமில்லை.

'ஜெர்மன்' பழமொழி - "கோடை அரசு"

வாசுவிடம் என்னைப் பற்றி அவதூறாகக் கூறுங்கள். என்னைத் திட்டிப் பேசுங்கள். என்மீது வெறுப்பை வளருங்கள். அப்போது அவர் ஒருவேளை காந்தியை மணக்கச் சம்மதிக்கலாம்!" என்ற ரமா ஆனந்தின் பக்கம் திரும்பி, "ஆனந்த், உங்கள் மனம் எனக்குப் புரிகிறது. நீங்கள் என்னை உங்கள் வீட்டில் வரவேற்க விரும்பாததற்காக நான் உங்களைக் குற்றம் கூறவில்லை. காந்தியும் வாசுவும் இணைந்து வாழ எல்லோரும் சேர்ந்து வழி தேடுங்கள். அவர்கள் இன்பமாக வாழ்வதைப் பார்க்கும் பாக்கியமாவது எனக்குக் கிட்டட்டும். நான் வருகிறேன்...." என்றாள்.

நிமிட நேரத்தில் மின்னல் போல் அவள் வந்து விட்டு உடனே சென்று விட்டதை மூவரும் உணர்ந்தனர்.

"எப்படி இருக்க வேண்டிய பெண்! எப்படி வேதனையே உருவாகி நிற்கிறாள்!" என்றார் சீதாபதி.

"பெரிய வேண்டுகோளாக விடுத்துச் சென்று விட்டாள். ஆனால் அதை எப்படி நிறைவேற்றுவது என்றுதான் எனக்குப் புரியவில்லை.... ஆனந்த்! நீயாவது முயன்று பாரேன்!" தேவகி குரல் தொய்யக் கூறினாள்.

"ஒருத்தியை மறந்து விட்டு வேறு ஒருத்தியை மணக்கச் சொல்வது நியாயமா? அது நிறைவேறும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா, அம்மா?"

"உங்கள் காதல் பாடமெல்லாம் எனக்கு என்ன அப்பா தெரியும்? காந்தி வாசுவைக் காதலிப்பதாக ரமா கூறுவதால் இவ்விவாகத்தால் தவறொன்றுமில்லையோ என்று நான் எண்ணுகிறேன்!" என்றாள் தேவகி. பிறகு புறப்படும்போது மெல்லக் கூறினாள்: "ரமாவைப் பார்க்கும்போது ...ஏதோ சந்தேகம் தட்டுகிறது!"

"உங்கள் சந்தேகம் பொருள்கொண்டதுதான். அவள் தாய்மை அடைந்திருப்பது உண்மைதான்" என்றான் ஆனந்த்.

தேவகி வழி நெடுக ஏக்கப் பெருமூச்சைப் பரிமாறிக் கொண்டே தன் வீட்டை அடைந்தாள். (தொடரும்)

நியான் விளக்கின் பளிச்சுக்கள். சிவப்பு பச்சை விளக்குகளின் வண்ண ஜாலங்கள். விர்ரென்று சுழலும் மின்விசிறியில் நடுங்கும் புடவைகள். அவைகளோடு போட்டியிடுவது போல் மின்னொளியில் தகதகக்கும் பார்டர்கள்.

ஒன்பது கஜம், ஆறு கஜம், சல்வார்கமீஸ், பட்டு, பருத்தி, நைலான், டெர்லான் ரகம் பல்கள். பவுடர், பூ, வியர்வை — இவற்றின் கதம்ப நெடி. மெட்டியொலி, சதங்கை யோசை, வளையல்களின் கலகல — இவற்றினூடே கட்டைத் தொண்டை, கீச்சுக் குரல், 'அபெக்டெட் டோன்', உருமாறி அழியோரும் சொற்கள். பண்டிகையின் திருக்கோலம் — இன்று வந்திருக்கக் கூடாது !

''வாங்க சார்... கம்மா வாங்க...இப்படி வாங்க....''

பெரும்பான்மை வழிவிட, நான் ஒடுங்கியபடி உள்ளே நுழைகிறேன்.

''வாங்க சார்... என்ன பார்க்கிறீங்க ?''

மூச்சுத் திணறுகிறது! எல்லாருடைய கண்களும் என் மீது குத்திட்டிருக்கின்றன. வெட்கத்தால் உடம்பு நனைகிறது.

எதைக் கேட்பது...? எதை எடுப்பது...?

ஓ, நான் இன்று நிச்சயம் வந்திருக்கக் கூடாது....!

'நீ சாப்பிடும் காய்கறிகளுக்குக்கூட உயிர் உண்டே....?'

'ஊ...ஹும்... அவை இப்படியா துடிக்கின்றன....?'

'உனக்குத் தெரியல்லேன்னு, துடிக்க லேன்னு அர்த்தமா.... போறுமே!....'

அவனது அறியாமை... எனது கேலி...

''சாருக்கு என்ன விலையில் வேணும்...?''

வாங்கப் போகிறவன் விலைக்குத்தானே அஞ்சுவான் ?

கைக்குக் கிடைத்த புடவையைக் கையில் எடுக்கிறேன்.

''இதைப் பாருங்க, புடவைக்கும் பார்டருக்கும்.... ரொம்ப எடுப்பா...'எவ்வளவு அழகாயிருக்கு... நல்லா உழைக்கவும் உழைக்கும்.'' — ஒரு வயதான மூதாட்டி. சுருக்கம் விழுந்த நெற்றியில் மஞ்சளின் பின்னணியில் குங்குமம் பளபளக்கிறது. இளஞ்சிரிப்போடு, எனக்கும் உதவும் எண்ணத்தில் அந்தப் புடவையை என் கையில் கொடுக்கிறாள்.

நல்லா உழைக்கும்... ஆமாம், நல்லா உழைக்கும்...!

நான் புடவை வாங்கப் போனாலே கேலி செய்வாள் அவள்: 'அத்தனை பெரிய கடையில் தேடிப் பிடித்து இதையா பொறுக்கினீர்கள்?'

யாருக்காக...?

கமலா தோதாத்ரி



அவளுக்காக — என் கையாலேயே அவளுக்கு எடுத்துக் கொடுக்கும் நிரப்பிக்காக....

நான் வெறித்தபடி நிற்கிறேன். என்னைக் கேட்காமலே அவன் புடவைகளை விரித்துப் போடுகிறான். கருத்தைக் கொள்ளை கொண்டு வேடிக்கை பார்க்கும் வண்ணங்கள். ஒன்றின் மேல் ஒன்றாக மல்லாந்து விரியும் கட்டங்கள், கோடுகள், பூக்கள், இதழ்கள் — நிமிட நேரத்தில் மலையே எழுகிறது....

என்னுடைய மௌனம்.....

இதில் ஒன்றுகூடவா பிடிக்கவில்லை—சிப்பந்தியின் முகம் கேட்கிறது.

''அம்மா வரல்லீங்களா...?''

தனியாக வந்தது தப்புத்தான் !

அவளுக்குத்தான் தெரியும் — என்னென்னவோ பெயர்கள் சொல்லுவாள். இப்பொழுது சண்டித்தனமாக நினைவுக்கு வர மறுக்கின்றன.

அவளுக்கு எல்லா நிறமுமே பொருந்தும். பட்டுப் புடவை.... அவள் கேட்டதில்லை... 'இத்தனை உயிர்களை வதைத்து இப்படியொரு புடவையா...?' என்பாள்.

'கடைக்காரன்தான் சொன்னான், நன்னா உழைக்கும்னு...'

'ஓ...' இதழ்க் கடையில் கேலியைத் தேக்கியவாறு 'அப்படியா' என்ற பாவனையில் என்னைப் பார்ப்பாள். நான் அசட்டுச் சிரிப்பொன்றை அவிழ்ப்பேன்!....

''ரொம்ப சந்தோஷம்....'' நீர் மல்கிய மௌனம் உன்னைப், பசிவு வாடையின் குளிர்ச்சியில் கரைந்து வழிந்தது... பொட்டென்று தன்னை மீறி விழுந்த அந்த இரு துளிகள் புடவையில் பட்டு விரிகின்றன....

பரிதாபமாக என்னை நோக்கியபடி விழிக்கிறாள்: அந்த மூதாட்டி!

டொக்... டொக்...

டொக்... டொக்... டொக்....

சே, என்ன பலவீனம் — மதிவீனம்!

சட்டைப் பையில் குலுங்கும் சில்லறையோடு சாவி வெளிப்படுகிறது.

கதவைத் திறந்தபோது எழுந்த புழுக்கம். இருள்... வெத வெதப்பான வெறுமை...

ஸ்விச்சின் விசையைக் கீழே தள்ள, இரண்டு மூன்று முறை மினுக்கி விட்டுக் குப்பென்று நிதானம் கொள்ளுகிறது, அந்த ட்யூப் லைட்.

விளக்கின் ஒளியோடு அவளும் சிரிக்கிறாள்; எங்கே நின்று பார்த்தாலும் என்னைப் பார்த்துச் சிரிக்கிறாள்....

புடவையைக் கீழே வைக்கிறேன். மாறாத சிரிப்பு.... ஓ, இதழ்க் கடையில் அதே கேலித் துளி....!

இல்லை.... இது நானாக வாங்கியதில்லையாக்கும்... அந்த... அந்த... ஆமாம்.... உன் இனத்தவர் சொல்லித்தான் வாங்கினதாக்கும்....!

பொட்டலத்தைப் பிரித்த போதும் — புடவையை விரித்த போதும் அதே விலகாத, மங்காத சிரிப்பு....!

பார்.... எப்படி இருக்கு என்று...

அதே சிரிப்பு....

உனக்கும் பிடிக்கவில்லையா...?

அதே சிரிப்பு!

உனக்....கும்...பி...டி...க்...க...ல்லியா?

படத்திலிருந்து பூ ஒன்று நழுவி மிதந்து புடவை மீது பொத்தென்று விழுகிறது...

தானே அவளுக்குத் தலை வருஷம்....!

படித்துப் பாருங்கள்

The Art of Playing Mridangam

கர்நாடக சங்கீதத்தின் லய வாத்தியங்களுள் சிரமமாக விளங்கும் மிருதங்கத்தை வாசிக்கப் பழகிக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் உள்ள நம் நாட்டு, வெளிநாட்டு மாணவர்களுக்கும் பள்ளிகளுக்கும் இசைக் கல்லூரிகளுக்கும் வரப்பிரசாதம்போல் ''மிருதங்கம் வாசிக்கும் கலை'' என்ற அருமையான ஆங்கில நூலை வித்வான் கலாசிகாமணி இன்னியம் வெங்கடராம அய்யர் இயற்றியளித்துள்ளார். இம்மாதிரி ஒரு நூல் எழுதுவதற்கு முழுத் தகுதியைப் பெற்றவர் இன்னியம் திரு வெங்கடராம அய்யர் என்பதில் எவருக்குமே சம்சயம் இருக்காது. சுமார் ஐம்பதாண்டுகளாகப் பல பழைய வித்வான்களுக்கெல்லாம் மிருதங்கம் வாசித்துள்ள முதிர்ந்த அனுபவத்துடன் பல இளம் வித்வான்களைத் தமது சிஷ்யர்களாக அமையப் பெற்றவர். வித்வத் திறமையுடன் போதனா சக்தியும் பூரணமாக உடையவர். அவர் புலமையும் ஆசிரியத் தன்மையும் இந்தப் புத்தகத்தில் நன்கு பிரகாசிக்கின்றன. சுலபமாகப் பயிலப் பாடங்கள் கிரமமாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. மிருதங்க அமைப்பின் அங்கங்கள், விரல்கள் சொற்களை வாசிக்கும்போதும், அரைச் சாப்புக்கும் கால் சாப்புக்கும் இருக்க வேண்டிய ஸ்தானங்கள் முதலியவை படங்கள் மூலம் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன. மூன்று வருஷ காலத்துக்குப் பயில வேண்டும் என்ற அட்டவணைக் கிரமத்தில் 27 தனித் தனிப் பாடங்களும், அதற்கு உரித்தான சொற்களும் தெளிவாகக் கொடுக்கப்பட்டிருப்பது மாணவர்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும். ரசனைக்காகவும் தொனிப்பிக்கவும் ஜதிகளின் உச்சாரணையில் பேதங்கள் இருப்பதை உணர்த்த, ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ள ஜதிச் சொற்களுடன் நாகர லிபியிலும் ஜதிகள் கொடுக்கப்பட்டிருப்பது இந்நூலின் விசேஷ அம்சமாகும். பாடங்கள் உயர உயர, பரன்களும், மோராக்களும், கோவைகளும், தனி ஆவர்த்தனத்துக்கு வேண்டிய அப்பியாசங்களும் தக்கபடி இணைந்திருப்பது இதை ஒரு பூரண அப்பியாச நூலாகச் செய்துள்ளது.

தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் உதவியில், ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ள இந்நூல் இக்கலையை அயல்நாட்டினரும் பயிலப் பெரிதும் பயனளிக்கும்.


புத்தகத்தின் இரண்டாம் பாகத்தில் சுருக்கமாக மிருதங்க சம்பந்தமான பரிபாஷைச் சொற்களும், பிரதான மிருதங்க வித்வான்களின் தனிச் சிறப்புக்களும் தரப்பட்டிருப்பது இந்நூலுக்குப் பெருமை அளிக்கிறது. கலை உலகம் வரவேற்கத் தக்க ஓர் அரிய புத்தகம்.

கிடைக்குமிடம்: 27, முத்துக்காளத்திச் செட்டி தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்-5; விலை ரூ. 6.00.

சுடர்மணி மாலை


பரபரப்பு நிறைந்த இந் நாட்களிலும் தினம் ஐந்து முதல் பத்து நிமிஷங்களாவது பகவானைத் தியானிக்க வேண்டும் என்று நினைக்கிறவர்கள் உண்டு. அந்த ஐந்து நிமிஷங்களில் எந்த ஸ்லோகங்களை அல்லது பாடல்களைச் சொல்லி மனத்தைப் பகவானிடம் லயிக்க விடலாம் என்று யோசிப்பவர்கள் சுடர்மணி மாலை என்ற இந்தச் சின்னஞ் சிறிய நூலினால் பயன் பெறலாம். அஞ்சல் செலவுக்காக 25 பைசா அனுப்பினால் சுடர்மணி மாலை கிடைக்கும்.

தொகுப்பாசிரியர்: வேம்பத்தூர் கிருஷ்ணன், சுடர்மணிப் பதிப்பகம், 17, ராம நாயக்கன் தெரு, சென்னை—34.



நெருங்கி உறவாடும்,





நெஞ்சைக் கவரும் நறுமணமுள்ள

லக்மே டால்கம்

உங்கள் இதயம் கவரும் நறுமணத்தை மணிக் கணக்கில் வீசிக்கொண்டிருக்கும் டால்கம்— நெஞ்சை விட்டகலாத லக்மே! அந்த இணையற்ற இன்பத்தை அனுபவிக்கத் [illegible] இன்றே உங்கள் மேனியின் மீது இன்மணம் கமழும் லக்மே டால்கம் தூவுங்கள். அது பட்டுப்போன்று மென்மையானது: [illegible] இணையில்லாதது. ஒரு நாளை 'லக்மே' மணமாகத் துவக்க, இதை விட இன்பம் தருவது வேறென்ன இருக்கப் போகிறது?

இது இளமை மணம் வீசி, உங்கள் அன்புடன் அணைய வருகிறது. லேவெண்டர், வெட்டிவேர், [illegible], சந்தனம் ஆகிய நான்கும், [illegible] மற்றும் எகானமி சைஸ்களிலே வருகின்றன. [illegible] எல்லாமே இன்ப மணம்: எல்லாமே இன்ப மயம்!

உச்சவரம்பு உடனே வேண்டும்!

நாடோடி

இப்பொழுது எல்லாவற்றுக்குமே உச்சவரம்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஓர் அளவுக்கு மேல் (வருமான வரியைக் கட்டத்தட்ட நூற்றுக்கு நூறு பண்ணிவிட்டதன் காரணமாக) ஒருவர் சம்பாதிக்கக் கூடிய பணத்துக்கு உச்சவரம்பு ஏற்பட்டு விட்டது. வருமானம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை, நாட்டின் நன்மையைக் கருதி, உற்பத்தியை அதிகரிப்போம் என்று ஒரு தொழிலதிபர் ஆரம்பித்தால் அதற்குத் தொழிலாளிகள் தங்கள் வேலைநிறுத்தங்கள் மூலம் ஓர் உச்சவரம்பு நிர்ணயித்து விடுகிறார்கள். விளைச்சல் நிலத்துக்கு ஏற்கனவே ஓர் உச்சவரம்பு இருக்கிறது. இப்பொழுது அதைப் பாதியாகக் குறைக்க வேண்டும் என்று அரசாங்கம் தீர்மானம் நிறைவேற்றி விட்டது. இன்னும், நகர்ப்புறச் சொத்துக்களுக்கும் உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று பிரசாரம் நடந்து கொண்டிருக்கிறது.

ஆக, இதுமாதிரி காரியங்களுக்கு உச்சவரம்பு ஏற்பட்டுக் கொண்டிருந்தும், ஒரு முக்கியமான காரியத்துக்கு உச்சவரம்பு ஏற்படுத்த யாரும் முன்வராமல் இருக்கிறார்களே என்றுதான் எனக்குக் கவலையாக இருக்கிறது.

ஒரு நிமிஷம் இருங்கள். சமையலறையிலிருந்து கொண்டு சரசு ஏதோ கத்திக்கொண்டிருக்கிறாள். என்னவென்று பார்த்து விட்டு வருகிறேன்.

நான்: ஏன் கத்தறே?

சரசு: நான் ஏன் கத்தமாட்டேன்! வீட்டுப் புருஷாள் இப்படிக் காரியம் செய்தால் எந்த மனைவிதான் கத்தமாட்டாள்? முதலில் இந்த முள்ளங்கியையும், வெங்காயத்தையும் அந்தக் கறிகாய்க்காரனிடமே திருப்பிக் கொடுத்து விட்டு மறு காரியம் பாருங்கள். அமாவாசையும் அதுவுமாக முள்ளங்கியும், வெங்காயமும் வாங்கிண்டு வர்றேளே! உங்க மூளையை என்னென்று சொல்றது? நேற்றுச் சாயந்திரம் தான் சாஸ்திரியார் வந்து, "நாளைக்கு அமாவாசை!" என்று சொல்லி விட்டுப் போனார் என்று நேற்று ராத்திரியே நான் சொல்லியிருந்தும், அதற்குள் அது எப்படி உங்களுக்கு மறக்கும்? இந்தாருங்கள், இந்த இரண்டையும் கறிகாய்க்காரன் தலையில் தூக்கி எறிந்து விட்டு, இரண்டு வாழைக்காய் வாங்கிக் கொண்டு வாருங்கள்.

ஒரு மனைவி இத்தனை படபடவென்று பேசியும், நான் ஏன் இடைமறிக்காமல் இருந்தேன் என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் நான் பேசிய இரண்டு வார்த்தைகளுக்கு அவள் எத்தனை வார்த்தைகள் பதில் கூறுகிறாள் என்று எண்ணுவதில் நான் ஈடுபட்டிருந்தேன். அவளை இடைமறிக்கவில்லை. இந்த வார்த்தைகளை எண்ணும் காரியத்தைக் கூட என்னால் சரியாகச் செய்ய முடியவில்லை. ஏனென்றால், ஸ்திரீகள் நிமிஷத்துக்கு எத்தனை வார்த்தை விகிதத்தில் பேசுகிறார்கள் என்பது உங்கள் எல்லாருக்கும் தெரிந்தது தானே!

மற்ற எத்தனையோ காரியங்களுக்கு உச்சவரம்பு நிர்ணயிக்கும் அரசாங்கம் இந்த மனைவி பேசும் வார்த்தைகளுக்கு ஏன் உச்சவரம்பு இன்னும் நிர்ணயிக்கவில்லை என்று கேட்கத்தான் இந்தக் கட்டுரையை எழுத ஆரம்பித்தேன்.

நீங்களே இதற்குள் கணக்குப் போட்டுப் பார்த்திருப்பீர்கள். "ஏன் கத்தறே?" என்று என் இரண்டு வார்த்தைக் கேள்விக்குச் சரசு எத்தனை வார்த்தை பதில் கூறினாள் என்று.

மனைவி பேசும் வார்த்தைகளுக்கு ஓர் உச்சவரம்பு ஏற்படுத்தப்பட்டால் என்ன? கணவன் எத்தனை வார்த்தைகள் பேசுகிறானோ, அத்தனை தான் மனைவியும் பேசவேண்டும் என்று விதிப்பது தவறு என்று நான் ஒப்புக் கொள்கிறேன். ஏனெனில், இது விஷயத்தில் பெண்களுக்குச் சலுகை காட்ட வேண்டியது அவசியம்தான்.

ஆனால் இதற்கும் ஒரு கணக்கு வேண்டாமா? ஐம்பது மடங்கு அதிகம் பேசலாம், அல்லது நூறு மடங்கு அதிகம் பேசலாம் என்று ஒரு கணக்கு வேண்டாமா? அந்தக் கணக்கை விதிக்க அரசாங்கம் முன் வரும் என்றுதான் எதிர்பார்க்கிறேன்.

எனக்கு வெகு காலமாகவே ஓர் ஆச்சரியம்! நாம் பெண் பார்க்கப் போகும் அன்று பேசாமடந்தைகளாக விளங்கிய பெண்கள் நாளு பின்னர் இப்படிப் பத்ரகாளிகளாக மாறுகிறார்கள் என்று ஆச்சரியம்!

ஆனால் இது விஷயத்தைப் பற்றி உங்கள் மாமனார்களிடம் கேட்காதீர்கள்! நான் இப்



படித்தால் என் மாமனுரைக் கேட்கப் போக அவர் என் மண்டையில் அடித்து விட்டார். ''எங்கள் வீட்டில் இருந்தவரை பேசாமடந்தையாக இருந்தவள், உங்களைக் கலியாணம் பண்ணிக் கொண்ட பிறகு பக்காளியாக மாறி விட்டாள் என்றால் அதற்கு யார் காரணம் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்'' என்றார்.

மனைவி பேசினால் பேசி விட்டுப் போகட்டுமே, அதனால் நமக்கு என்ன நஷ்டம் என்று கேட்கும் கணவர்கள் இருக்கலாம். ஆனால் அப்படிக் கேட்பவர்கள் தனிக் காட்டு ராஜாக்களைப் போல நிர்மானுஷ்யமான இடத்தில் வீடு கட்டிக் கொண்டு வசிப்பவர்களாக இருக்க வேண்டும். என்னைப் போல, அடுத்த வீட்டு அண்ணுசாமி வீட்டுக்குப் பக்கத்தில் வீடு கட்டிக் கொண்டு இங்கு நடப்பதெல்லாம் அடுத்த வீட்டில் கேட்கும்படியாக வாழ்கிறேனே, அந்த மாதிரி இல்லாதவர்களாக இருக்க வேண்டும்.

அதிலும் என் மனைவி சரசுவுக்கு, வார்த்தைகளின் எண்ணிக்கையில்தான் உச்சவரம்பு கிடையாதென்றால், அவள் குரலுக்கும் உச்சவரம்பு கிடையாது. அது என்னவோ தெரியவில்லை, நான் பக்கத்தில் நின்று கொண்டிருப்பதாகவே நினைக்காமல் பத்து வீடுகளுக்கு அப்பால் இருப்பதாக நினைத்துக் கொண்டுதான் சரசு பேசுவாள். ஆகவே, அவள் பேசுவதெல்லாம் அடுத்த வீட்டு அண்ணுசாமிக்குக் கேட்காமல் இருக்குமா? அதன் காரணமாக, நான் மனைவிக்குப் பயப்படுகிறவன் என்று அண்ணுசாமி நினைக்க ஆரம்பித்து விட்டார்!

இதைப் பற்றி நான்கூடக் கவலைப்படவில்லை. ஏனெனில், இந்தக் காலத்தில் யார்தான் மனைவிக்குப் பயப்படாத கணவன்? அந்த அடுத்த வீட்டு அண்ணுசாமி மாத்திரம் என்ன வாழ்ந்தார்? ஆனால் சரசுதான் இதைப் பற்றிக் கவலைப்பட ஆரம்பித்து விட்டாள். கணவன் மீது ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்று மனைவி நினைக்கிறளே யொழிய, அது விஷயம் வெளியில் தெரிய எந்தப் பெண்ணும் ஒரு நாளும் ஒப்புக் கொள்ள மாட்டாள். 'என் கணவர் என்னைக் கண்டு பயப்படுகிறவர்' என்று ஒரு மனைவியும் பகிரங்கமாக ஒப்புக் கொள்ள மாட்டாள்!

ஆகவே, இத்தகைய இக்கட்டிலிருந்து மனைவிமார்களைக் காப்பாற்றுவதற்காகவாவது, அவர்கள் பேசும் வார்த்தைகளுக்கும் (முடிந்தால் அவர்களுடைய குரலுக்கும்) உச்சவரம்பு நிர்ணயிக்கவேண்டியது அவசியம்.

இதற்கென்று ஓர் உச்சவரம்பா, ஊமைப் பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக் கொண்டால் போகிறது என்று சிலர் நினைக்கலாம். ஆனால் எல்லாரும் ஊமைப் பெண்தான் வேண்டும் என்றால், அத்தனை ஊமைப் பெண்களுக்கு எங்கே போவது? அதோடு இன்னும் ஓர் ஆபத்தும் இதில் இருக்கிறது. அந்த ஆபத்து என்ன என்பது ஒரு பழைய பிரெஞ்சு நாடகக்கதையில் வருகிறது.

ஒருவன் ஓர் ஊமைப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு விடுகிறான். அவள் ஊமையாக இருப்பதால், அவள் கணவனை எதிர்த்துப் பேசுவதேயில்லை. ஆகவே, கணவனுக்கு அவள்மீது உள்ள அன்பு அதிகரித்திருக்கிறது. இத்தனை நல்ல பெண் பேச ஆரம்பித்தால் இன்னும் எத்தனை நல்லவளாக இருப்பாள் என்று நினைத்து ஒரு சிறந்த வைத்தியரிடம் அவளைக் காண்பித்து, அவளைப் பேச வைக்கிறான்.

ஆனால் ஒரு பெண் பேச ஆரம்பித்தாள் என்றால் கொஞ்சமாகவா பேசுவாள்! அது பெண் தர்மத்துக்கே விரோதமல்லவா! அதோடு, இத்தனை நாட்களாகப் பேசாமல் இருந்தவள், பேசாமல் கழித்த நாட்களுக்கும் சேர்த்துவைத்துப் பேச வேண்டாமா! ஆகவே கடல்மடை திறந்தாற்போல் பேச ஆரம்பிக்கிறாள். கணவன் திக்குமுக்காடுகிறான். என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கிறான். கடைசியில் இவளைக் குணப்படுத்திய வைத்தியரிடமே சென்று, ''மீண்டும் அவளை ஊமையாக்கி விடுங்கள்'' என்று கெஞ்சுகிறான். ''அது முடியாத காரியம். மருத்துவத்தில் அதற்கு ஒரு வழியும் இல்லை'' என்று வைத்தியர் கையை விரிக்கிறார். ஆனால் வைத்தியர் நல்லவராதலால் ஒரு யோசனை சொல்கிறார். ''அவளை ஊமையாக்க முடியாது; ஆனால் உங்களைச் செவிடாக்க முடியும்'' என்கிறார்.



வைத்தியர் யோசனையைக் கணவர் ஒப்புக் கொண்டாரா, இல்லையா என்று நாடகத்தில் கொடுக்கப்படவில்லை. ஆனால், நாடகத்தை இப்படி முடித்திருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும்! ''கணவன் ஒப்புக் கொள்ளத் தயாராகத்தான் இருந்தான், ஆனால் தன்னிடமிருந்து அத்தனை எளிதில் தப்பித்துக் கொண்டு போக மனைவி இடம் கொடுக்கவில்லை'' என்று முடித்திருக்க வேண்டும்.

ஆக, மனைவிகள் பேச்சுக்குச் சீக்கிரம் ஓர் உச்சவரம்பு ஏற்படவில்லையானால், கணவர்களாகிய நாங்கள் செவிடர்களாகி விடுவோம் என்று அபாயத்தை எச்சரிக்கிறேன்!



பிளாஸ்டார்ச்
வாங்கும்போது
நீங்கள் பெறுவது
உள்ளும்
புறமும்
உன்னதமான
ஒரே
டார்ச்
PLASTORCH



களிமண் கால்கள்

ஜி. எஸ். பாலகிருஷ்ணன்

இன்பக்குழப்பங்களிலும் மனம் அல்லல்படும் இரண்டுங்கெட்டான் வயது! உடற்கூற்றில் மளமள வென்று ஏற்படும் மாறுதல்களை ஏற்றுக் கொள்வதற்கான மனப் பக்குவம் முற்றும் ஏற்படாத பருவம். விலங்கினங்களையும் பட்சி களையும் வியந்து பார்த்து 'பொது அறிவை' வளர்த்துக் கொள்ளும் 'அசிங்கமான' வயது... ஆம், இரகசியமாகச் சில புத்தகங்களைப் பசியுடன் படித்துப் புரிந்து கொள்ள முயலும் பருவம். தனக்குப் புதிராக இருப்பவற்றை யும் புரியாதவற்றையும் தோழி கல்யாணியிடம் கேட்டுத் தெரிந்து கொள்வதுதான் ராஜியின் வழக் கம். ராஜி வாழ்க்கைப் பள்ளியில் முதல் கே. ஜி. (Kindergarten) வகுப்பில் பயிலுகிறாள் என்றால், கல்யாணி இரண்டாவது கே. ஜி. யைக் கடக்க முயன்று கொண் டிருந்தாள்!

கல்யாணி வீட்டில் யாரும் அவ்வளவு கண்டிப்புக் கிடையாது. டாக்டரான அவள் அப்பா அவள் இருக்கும்போதே அம்மாவிடம் 'அதிகப்பிரசங்கி'த்தனமான ஹாஸ்யத் துணுக்குகளைப் பரி மாறிக் கொள்வார். 'டிராயிங்' ரூமில் கவர்ச்சிப் படங்கள் இரண்டு மாட்டியிருந்தார். அது மட்டுமா? 'ப்ளே பாய்' பத்திரிகை நடு அறையில் பாராய்க் கிடக்கும்... கல்யாணிகூட எடுத்துத் தாராள மாகப் புரட்டலாம்!

ஆனால் ராஜி வீட்டுச் சமாசாரமே வேறு. அவள் அம்மா, பெண் சினிமாவுக்குப் போவதைக்கூட அதிகமாக விரும்ப மாட் டாள். பதினோரு வயதிலேயே, மரப்பாச்சிக்குக் குழந்தைகள் புடவை உடுத்துவது போல் முன் ஜாக்கிரதையுடன் ராஜியின் குச்சி உடம்பை ஒரு சாக்குத் தாவணியிலும் மூடி மறைத்திருந் தாள். ஆண் பிள்ளைகள் யாராவது வந்தால் அவரோடு பேசி விட்டு உள்ளே ஓடிவிட வேண்டும் என்பது அம்மா சொல்லாமலே ராஜி தெரிந்து கொண்டிருந்த விஷயம். ஆண் — பெண் உறவு என்ற பேச்சு அடிபடும்போது 'கல்யாணம்', 'கொட்டு மேளம்' என்ற வார்த்தைகளைத் தவிர அந்த வீட்டில் வேறு எந்த வார்த்தை யும் அடிபடாது. இப்பொழுது கொஞ்சம் பரவாயில்லை. அதாவது இயற்கை ராஜிக்கு வாழ்க்கையில் ஒரு 'பிரமோஷன்' தந்த பிறகு! 'சாந்தி முகூர்த்தம்' போன்ற வார்த்தைகள்கூட அடிபடுகின்றன!

கல்யாணியின் அப்பாவைப் போல் இராமல் ராஜியின் அப்பா ரொம்பக் கண்டிப்பு. அரசாங்கத்தில் பெரிய பதவி வகிப்பவராயிற்றே! சதா ஆபீஸ் வேலை; 'பைல்'களை எப்பொழுதும் புரட்டிக் கொண் டிருப்பார். அவர் அறைக்குள் யாரும் எட்டிப் பார்க்கும் வழக்கம் கிடையாது. அடிக்கடி எங்கெல்லாமோ 'டூர்' போவார்; விசுவாசச் சேவகன் கறுப்புப் பெட்டியைத் தூக்கிச் செல்வான். ஓய்ந்த வேளை களில் 'பஜனை பாடம்', 'ஆன்மிகர்கள் கூட்டம்' என்று ஏதேதோ செய்துகொண்டிருப்பார். ராஜியிடம் அவர் கலகல வென்று பேச மாட்டார். அவளுக்கு அவரிடம் பயம்... ஏன் பக்திகூட! அம்மா வுக்கும் அப்படித்தான். ஊரிலே அவருக்கு ரொம்ப நல்ல பெயர். நாணயஸ்தர், நேர்மையானவர், லஞ்சம் வாங்காதவர் என்றெல்லாம் பேசிக் கொள்வார்கள்.



அன்று யாரும் வீட்டிலில்லை. அப்பா 'டூர்' போயிருந்தார். அம்மா 'சூப்பர் பஜாரு'க்குப் போயிருந்தாள். ராஜிக்குப் பொழுது போகவில்லை.



ரேடியோவை முடுக்கலாம் என்றால் மின்சாரம் நின்று தொலைத்திருந்தது. அவனுக்கு ரொம்பப் 'போர' டித்தது. என்ன தோன்றிற்றோ, அடி மேல் அடி வைத்து அப்பாவின் அறைக்குள் நுழைந்தான். அதற்கென்றே ஒரு தனி வாசனை இருந்தது. மேஜை மீது ஒரே பேப்பர் பிரளயம். குண்டூசிகள், காகித வெயிட்டுகள், சிவப்பு நாடா கட்டின 'பைல்'கள். உடம்பு ஏனோ கொஞ்சம் நடுங்கிற்று. ஆனால் அதைப் பொருட்படுத்தாது மூலையிலிருந்த பழைய அலமாரியைத் திறந்தான். சாவி அதிலேயே இருந்தது. ஆனால் இது என்ன? கவர் சரிந்து செங்கற்கள்விழுவதுபோல் எத்தனை பொருள்கள் உருளுகின்றன? ராஜியின் இதயம் 'பக் பக்'கென்று அடித்துக் கொண்டது.... யாராவது திடீரென்று வந்து விடுவார்களா?.... ஏதோ ஓர் அசட்டுத் தைரியம் ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்தும்படி அவனை ஊக்கியது. ஒரு சந்தனப் பேலா. ஏதோ ஓர் ஊரிலிருந்து அப்பா மாற்றலாகி வரும்போது அவருக்குச் சன்மானமாகத் தரப்பட்டது. மடிப்பு அங்கவஸ்திரம். அதிலிருந்தா 'செண்ட்' மணம் அப்படி வீசுகிறது? அப்பளக் கட்டாட்டம் ஒரு 'டிக்ஷனரி'...அதில் தொடக்க வார்த்தையே 'Box'.... 'ஏ' என்ற எழுத்துடங்கிய பக்கங்களே இல்லை!

எத்தனை டைரிகள், பஞ்சாங்கங்கள். ரயில்வே 'கைட்'ஒன்று... அப்பப்பா! இவ்வளவு புகைப் படங்களா? எல்லாவற்றிலும் அப்பா மத்தியில் மாலையுடன் வீற்றிருந்தார். யார் யாரோ நின்று கொண்டும் உட்கார்ந்து கொண்டும் இருந்தார்கள். அந்தக் காலத்தில் அப்பா 'டிப்டாப்'பாக இருந்திருக்கிறார்! கோட்டு, டை எல்லாம் பிரமாதம். ஒவ்வொரு 'போட்டோ'விலும்அப்பாவுக்குப் பின்னால் வில்லைச் சேவகன்.... ராஜிக்குப் பெருமையினால் தலைகால் தெரியவில்லை. மேலும் சில புகைப்படங்களைப் புரட்டினான். ஒரு கரப்பு குறுக்கிட்டதைக் கூடப் பொருட்படுத்தவில்லை. ஒரு 'போட்டோ'வில் அப்பா துப்பாக்கி சுடப் பழகிக் கொண்டிருந்தார். (அதை நிச்சயம் கல்யாணிக்குக் காட்டிப் பெருமையடித்துக் கொள்ள வேண்டும்.) இன்னொரு 'போட்டோ'வில் அப்பாவும் ஒரு வெள்ளைக்காரத் துரையும் ஆளுக்கொரு குதிரை மீது ஜம்மென்று வீற்றிருந்தார்கள்... அப்பா முகத்தில் அந்த நாளில் மீசை இருந்ததா என்ன? இல்லை ... இல்லை.. இருக்காது. நாள்பட்டுப் போனதினால் 'போட்டோ'வில் கீறல் ஏதாவது விழுந்திருக்கும்.... இரண்டு தங்கப் பதக்கங்கள், ஓர் இங்க் பாட்டில், ஓர் உடைந்த கூலிங் கிளாஸ்' பழைய கிராமபோன் ரெகார்ட் (சுப்பையா பாகவதரின் பூங்கா விநோதமே!) சிகரெட் லைட்டர்.... இதெப்படி வந்தது? அந்தக் காலத்தில் அப்பா ஒருவேளை....? சே! இருக்காது. எவனாவது விட்டுச் சென்றிருப்பான்.

ராஜிக்கு வியர்த்துக் கொட்டியது. ஒவ்வொரு பொருளாக அலமாரிக்குள் திணிக்கத் தொடங்கினான். திடீரென்று கிழிந்த கொசு வலையினால் சுற்றப்பட்ட ஒரு கவர் கண்ணில் பட்டது. அதற்குள் என்ன தான் இருக்கும்? அவசரமாகத் திறந்தான். அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஒருகணம் மூச்சே நின்று விட்டது. யாரோ தன்னைக் கிள்ளுவது போன்ற உணர்ச்சி. ஒரே குழப்பம்.

சிறப்புச் சிறுகதை

அந்தப் படத்தில் இருந்தது அப்பாவேதான்! சந்தேகமே இல்லை! ஆனால்... ஆனால்? அவனால் நம்பவே முடியவில்லை. மீண்டும் மீண்டும் அந்தப் படத்தை ஆராய்ந்தான். மனத்தில் வெறுப்பு வளர்ந்தது; தலையை என்னவோ செய்தது.

இப்பொழுது அந்தப் புகைப் படத்திலிருந்த பெண் ராஜியைப் பார்த்து விஷமத்தனமாகப் புன்னகை செய்வது போலிருந்தது. சீ! வெட்கம் கெட்ட ஜந்து! ராஜிக்குத் தம்பிப் பாப்பா 'இந்துலேகா' எண்ணெய் தேய்த்துக் குளிப்பதைப் பார்ப்பதற்கே கண் கூசும். இந்தத் தடிச் சிறுக்கியோ வென்றால்—இருபது வயதிருக்குமோ அவளுக்கு? அப்பாவின் கரம்

பற்றி நிற்கிறாளே! இவளுடன் அப்பா எப்படிப் படம் பிடித்துக் கொண்டார்? ஒரு வேளை இது அப்பா இல்லையோ? அவருக்கு இரட்டைச் சகோதரர்கள் யாராவது இருந்தார்களோ? ஒருவேளை கல்லூரி சஞ்சிகையில் வந்திருந்த சிறுகதையில் நடப்பது போல், நாடகத்தில் யாராவது பையன் பெண் வேஷம் போட்டுக் கொண்டு அப்பாவுடன் தமாஷுக்காக எடுத்துக் கொண்ட படமோ?

ஏனோ அவளுக்கு அப்பா பூஜை செய்கையில் சொல்லும் சுலோகம் ஒன்றின் அடி காதுகளில் கணீரென்று ஒலித்தது. வெண்ணீறு பூசின அவர் மேனியும், கம்பீரமான குரலும், கருணை வடியும் கண்களும் நினைவில் தோன்றின. எப்படிப்பட்ட தோற்றம் அவருடையது? பார்த்தாலே பக்தி பிறக்குமே! நேர்மைக்கும் நாணயத்துக்கும் பெயர் போன அவரா இந்தப் படத்தில் அலங்கோலமாக உடை அணிந்த சிறுக்கியுடன் காட்சியளிக்கிறார்?.... இருக்காது. எவ்வளவு முயன்றும் ராஜியினால் தன்னைத் தேற்றிக் கொள்ள முடியவில்லை. அந்தப் பொல்லாத பெண்ணின் பிடரியைப் பிடித்துத் திருக வேண்டும் போலிருந்தது அவளுக்கு.



சாதாரணமா ஆண்டும் கல்கியில் இடம் பெறும் சிறப்புச் சிறுகதைகள் அனைத்திலும் சிறந்த ஒரு சிறுகதையைத் தேர்ந்தெடுப்பதில் வாசகராகிய உங்கள் அபிப்பிராயமும் கோரப்படுகிறது. ஆகவே இந்த இதழையோ அல்லது இந்தக் கதை அச்சாகியுள்ள பக்கங்களையோ பத்திரமாக வைத்திருக்கவும்.

ஆசிரியர், கல்கி

அன்று அவள் சரியாக உணவருந்தவில்லை. இரவில் தூக்கத்தில் ஏதேதோ பிதற்றினாள். மறுநாள் தோழி கல்யாணியிடம் சொல்லி ஆறுதல் பெறலாமா என்று கூட யோசித்தாள். பிறகு அந்த எண்ணத்தைக் கைவிட்டாள். நேற்று வரையில் இமயமாட்டம் நின்று கொண்டிருந்த அப்பாவுக்குத் தன் செய்கையினால் சரிவு ஏற்பட்டு விடும் என்று அஞ்சினாள். மனத்துக்குள் அவள் புழுங்கினாள்.

அம்மா ராஜியின் போக்கிலிருந்த மாறுதலைக் கவனித்து விட்டாள். வயசுப் பெண்ணுக்கு அப்படி என்ன வருத்தம் என்று வியந்தாள். அவள் எண்ணங்கள் எங்கெங்கோ ஓடின. எது எதையோ தொட்டுச் சாடின.

இரவு சரியான மழை. ஜன்னல் வழியாகத் தெருவைப் பார்த்துக் கொண்டிருந்த ராஜி தூரத்தே தெரிந்த தென்னை மரங்களின் போராட்டத்தை ரசித்துக் கொண்டிருந்தாள். திடீரென்று அவளுக்கு அந்தச் சிறுக்கியின் நினைவு வந்தது. அவள் வாய் விட்டுச் 'சனியனே' என்று கத்தி விட்டாள். படுக்கையில் சாய்ந்தபடி வாரப் பதிப்பு ஒன்றைப் படித்துக் கொண்டிருந்த அம்மா, "என்னடி?" என்று கேட்டாள் வியப்புடன்.

"ஒன்றுமில்லை."

"..............."

"அம்மா!"

"உம்...."

"நம்ம அப்பாவுக்கு இரட்டைச் சகோதரர்கள் யாராவது உண்டா?"

"என்னடி உளறுகிறாய்?"

"சும்மா கேட்டேன்."

"என்னடி, எனக்கா காது குத்துகிறாய்? என்ன விஷயம்?"

"ஒன்றுமில்லை."

"சொல்லப் போகிறாயா, இல்லையா?"

ஒரு கணம் மௌனம் சாதித்தபின் ராஜி அழத் தொடங்கினாள். தாயார் பக்கத்தில் வந்து அமர்ந்தாள். வெகு நேரம் விசித்தபின், ராஜி தான் அப்பாவின் அலமாரியைத் திறந்ததையும், அதற்குள் அந்த போட்டோ இருந்ததையும் வெளியிட்டாள். அம்மா அந்தப் போட்டோவை எடுத்து வரும்படி கூறினாள். "வேண்டாம் அம்மா, அது அப்பாவாக இராது" என்று சிணுங்கினாள் ராஜி. "அப்பா அப்படியெல்லாம் செய்யமாட்டார்" என்றாள் தொடர்ந்து.

"அடி, அசடே! எனக்குத் தெரியாதா உங்க அப்பாவை? அவர் ஒரு தப்புத் தண்டாவுக்குக்கூடப் போக மாட்டார். பிற பொம்மனாட்டிகளிடம் முகம் கொடுத்துப் பேசவே பயப்படுவார். அவரை மாதிரியெல்லாம் இந்தக் காலத்தில் யார் இருக்கிறார்கள்? எல்லாம் என் தாலி பாக்கியம்; வேறென்ன?"

அம்மா இவ்வளவு தூரம் பேசவும் ராஜிக்குத் தைரியம் வந்து விட்டது. அவள் ஓடிச் சென்று புகைப்படத்தை எடுத்து வந்தாள். அதை அம்மாவிடம் தரும்போது ஏனோ அவளை வெட்கம் பிடுங்கித் தின்றது.


அம்மா போட்டோவை உற்றுக் கவனித்தாள். ஒன்றும் பேசவில்லை. சற்றுப் பொறுத்து நிதானமாக, "இதற்காகவாடி மனத்தை அப்படி அலட்டிக் கொண்டாய்?... அடி அசடே! அந்தப் படத்தில் இருப்பது யார் என்று உனக்குத் தெரியவில்லையா? அது நான் தானடி! கல்யாணமான புதிதில்..." என்றாள்.

"நீயா அம்மா?"

"இன்னுமாடி சந்தேகம்?"

"அது உன்னைப் போலவே இல்லையே! உன் மூக்கு நீளமாக இருக்கிறது.... வட்டமான முகம்....."

"பைத்தியக்காரி, சின்ன வயதில் எடுத்த உன் படத்தை முப்பது வருஷங்களுக்குப்பின்



மதுரை மீனாக்ஷி கோயில்
தென்னிந்திய கட்டிடக்
கலையின் உன்னதமான
எடுத்துக்காட்டு.

22 காரட் தங்கம் மற்றும்
வெள்ளியிலிருந்து
பிரமாதமான திறமையுடன்
உருவாக்கப்படும்
தென்னிந்திய நகைகளின்
தரத்திற்குச் சின்னம்

நட்வர்லால் கோவிந்த்ஜீ ஜவேரி

ஜுவெல்லர்கள்,
ஏற்றுமதியாளர்கள் மற்றும்
இறக்குமதியாளர்கள்
நாணயம் மாற்றுவோர்
லைசென்ஸ் ந. 36/69


ஏர்-கண்டிஷன் செய்யப்பட்ட
எமது, பின்வரும் காட்சிக்
கூடத்திற்கு விஜயம்
செய்யுங்கள் :

அம்ருத்லால் மேன்ஷன்,
264-சி, எல். நப்பூ ரோடு,
மாதுங்கா (மத்திய ரெயில்வே)
பம்பாய்-19 DD, இந்தியா
போன் : 473526
கிராம்ஸ் : JAMNADIL

வியாபார நேரம்:
காலை 11 மணி முதல்
இரவு 8 மணி வரை.
திங்கட்கிழமை விடுமுறை.



cam/hgs/11 Tam



Kleertone

கிளீயர்டோன் ஆட்டோமேட்டிக் இஸ்திரிப் பெட்டி மின்சார செலவை மிச்சப்படுத்துகிறது.

இம்பீரியல் ஆட்டோமெட்டிக் இஸ்திரிப் பெட்டி

- 230/250 ஏஸி அல்லது ஏஸி/டிஸியில் இயங்குகிறது
- 800 வாட்ஸ்கள்
- 2.7 கிலோ எடை
- சூட்டைக் கூட்டி, குறைக்கும் தெர்மோஸ்டட் வசதி

Kleertone

கிளீயர்டோன்- உன்னத
மின்சார சாதனங்கள்

நேஷனல் ரேடியோ & எலக்ட்ரானிக்ஸ் கம்பெனி லிட்.,
(ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ் பிரிவு)
பம்பாய் • கல்கத்தா • டெல்லி • சென்னை.

ULKA-KLI- TM

உனக்குக் காட்டினாலும் 'இது நானே இல்லே' என்றுதான் சாதிப்பாய். காலம் போல் லாதது. அது ஏற்படுத்தும் மாறுதல்கள் எத்தனையோ! போ... போய் நிம்மதியாய்த் தூங்கு.''

அன்று இரவு ராஜியின் அம்மா தூங்க வில்லை. அழுது கொண்டிருந்தாள். பிழியப் பிழிய அழுதாள். இதற்கு முன்னும் எத்தனையோ ஆண்டுகள் தனியே தன் தலை விதியை எண்ணி அவள் அழுதிருக்கிறாள். மகள் கண்டெடுத்த அழகியைப் போல் எத்தனை அழகிகளோ! கல்யாணமான சில தினங்களிலேயே கணவனின் குணம் அவளுக்குத் தெரிந்து விட்டது. நேர்மைக்கும் நாணயத்துக்கும் பெயர் போன அவருக்கு இப்படி ஒரு சபலம். இந்த வயதில்கூட என்ன? 'டூர்' போகிறேன் என்று சொல்லி அவர் எங்கு போகிறார் என்று அவளுக்குத் தெரியாதா என்ன? தெரியாதது போல் பாசாங்கு செய்கிறாள்; தனிமையில் பொருமு கிறாள்! அவ்வளவுதான்!

ஆனால் பாவம் ராஜி! தன் அப்பாவை யாராலும் அசைக்க முடியாத குணச்சிலை என்று எண்ணிப் பெருமையுடன் வாழ்கிறாள். சிலையின் கால்கள் களிமண் கால்கள் என்று அவளுக்கு ஏன் தெரிய வேண்டும்? மகள் நிம்மதியாகத் தூங்கியிருப்பாள் என்று எண்ணினாள் தாயார். ஆனால் அதுதான் இல்லை!

மறுநாள் பூங்காவில் அமர்ந்தபடி தன் தோழியிடம் பேசிக் கொண்டிருந்தாள் ராஜி. ''பொய் சொல்வதைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?'' என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டாள், ராஜி.

''ஏன், என்ன விஷயம்? பெரிய 'பிலாசபராக' மாறுகிறாயா என்ன?'' என்று கேலி செய்தாள் கல்யாணி.

''சொல்லுடி. பொய் சொல்வதைப் பற்றி உன் அபிப்பிராயம் என்ன?''

''சில்லறை விஷயங்களுக்குப் பொய் சொல்வது தவறு... ஆனால் தர்மத்துக்குக் களங்கம் ஏற்பட்டு விடும் என்று தோன்றுகையில், பொய் சொல்லலாம்.''

''நீ என்ன சொல்லுகிறாய்?''

''எனக்குச் சரியாகச் சொல்லத் தெரிய வில்லையடி... மகாபாரதத்தில் யுதிஷ்டிரர் அஸ்வத்தாமா இறந்து விட்டதாகச் சொல்ல வில்லையா? அதுபோன்ற சந்தர்ப்பங்களில் உண்மையைத் திரித்துச் சொல்வதில் தவறில்லை....''

'அதைத்தான் 'தர்மம்' என்று குறிப்பிட்டாயாக்கும்? புருஷனின் கீர்த்திக்குக் களங்கம் வராமல் காப்பதுதானே மனைவியின் தர்மம்? அதற்காக அவள் பொய் சொல்வதில் தவறில்லை, அப்படித்தானே?' என்று பேச நினைத்த ராஜி ஏனோ பேசவில்லை!

சிலந்திக்குப் பார்வை சற்று மங்கலானது. ஆனால் அதற்கு ஈடு செய்யும் வகையில் அதற்குத் தொட்டுணர்ச்சி மிகுதியாய் உள்ளது. வலையைப் பின்னிவிட்டு அவ்வலை பின்னத் தான் சுரக்கும் பட்டு இழையை நீட்டிக் கொண்டே வந்து தனது காலில் அவ்விழையை நன்கு பற்றிக் கொண்டு ஏதாவது ஒரு மூலையில் அல்லது மறைவிடத்தில் இருந்து கொள்ளும். வலையினுள் சிறு பூச்சிபோன்ற இரைகள் வந்து விழுவதற்காகக் காத்திருக்கும். ஏதாவது ஒரு சிறிய பூச்சி அறியாத்தனமாக இவ்வலையினுள் வந்து விழுந்துவிட்டால் பூச்சி தப்பிக்க முயன்று அசைவதானது வலையிலிருந்து செல்லும் மெல்லிய இழையின் வாயிலாக இமைக்கும் நேரத்தில் சிலந்தியை வந்தடைகிறது. அசைவின் உணர்வை அறிந்த சிலந்தியானது சடக் பாய்ந்தோடி வந்து வலையினுள் விழுந்த பூச்சியைத் தன்னுடைய கால்

சிலந்திக்கு ஒரு சோதனை!


களினால் பந்து போன்று உருட்டிவிட்டு அதே சமயத்தில் தனது உடலினின்று வெளியாகும் பட்டு நூலைக் கொண்டு அப்பிராணியின் உடல் முழுதும் சுற்றி விடும். இரையானதும் ஒவ்வொரு பூச்சியையும் பட்டு நூல் பொதியிலிருந்து நீக்கி உண்ணும். பூச்சி வலையினுள் விழுந்ததும், அந்த இடத்தில் இழைகள் அறுந்து வலையில் ஓட்டை விழுந்துவிடும். பாழ்பட்ட வலையைச் சிலந்தி உடனுக்குடன் தான் சுரக்கும் பட்டு நூலினால் செம்மைப்படுத்தி விடுகிறது. இத்தகைய செய்கைகளினால் சிலந்தியின் தொட்டுணர்வும், அறிவுக் கூர்மையும், முன் யோசனையும் நமக்குத் தெரிய வருகின்றன.

சிலந்தி வலையின் சமீபம் சென்று ஒரு மிகச் சிறிய களிமண் உருண்டையை அவ்வலையின் நடுப் பாகத்தில் மெதுவாக விட்டெறியுங்கள். சிலந்தி வலையினுள் ஏதோ பூச்சி ஒன்று விழுந்து விட்டது என்று பாய்ந்தோடி வரும். களிமண் உருண்டையைக் கண்டு ஏமாற்றம் அடையும். உடனே சிலந்தியானது தன் மறைவிடத்துக்குச் சென்று விடுவதில்லை. களிமண் உருண்டை அவ்வலையினுள் ஒட்டிக் கொண்டிருப்பதானது பூச்சிகள் அவ்வலையினுள் விழத் தடைகளாக இருக்கும் என்பதைச் சிலந்தி உணர்ந்து களிமண் உருண்டையைச் சுற்றியுள்ள வலையின் இழைகளை வட்டமாகத் துண்டித்து விடும். களிமண் உருண்டை தரையில் விழுந்ததும் மிகக் கவனமாகவும், வேகமாகவும் ஓட்டை விழுந்த பாகத்தைப்



பட்டு நூலால் வேய்ந்து வலையைச் செம்மைப்படுத்தி விடும். பிறகு தன்னுடைய மறைவிடத்தை முன் போல் வந்தடையும். மேற்கூறியவாறு பல முறை நாம் களிமண் உருண்டையை வலையினுள் வீசி எறிந்தாலும் சற்றுக்கூடச் சிலந்தி சலிப்படையாமல் தனது வலையைப் புதுப்பித்துக் கொண்டே யிருக்கும்.

— அந்தோணி பேசில்


சென்னை
கெயிட்டி
பிரபாத் — சரவணா
மற்றும் தென்னாடெங்கும்
மே 1 முதல்
மாடர்ன் தியேட்டர்ஸ்
சி.ஐ.டி
சங்கர்
டைரக்ஷன்
R. சுந்தரம் B.E.
கதை, வசனம்
A.L. நாராயணன்
பாடல்கள்
கண்ணதாசன்
இசை
வேதா

கொறிக்கவும் சிரிக்கவும்!

கோமதி சுவாமிநாதன்

உழைப்பும் பிழைப்பும்

இராக்கப்ப பூபதி கஞ்சப் பிரபு. புகழ் முழங்கும் கவிதைகளுடன் வரும் புலவர்களைக் கண்டால் அவருக்குப் பிடிக்காது. பரிசுகள் கொடுக்க வேண்டுமே என்ற பயம். இதை மறைக்க, பொய்ப் பொருள் நிறைந்த புகழ் மொழிப் பாடல்களைக் கேட்கவே முடியாது என்று புலவர்களை அண்ட விடாமல் சமாளித்தான். ஆனாலும் விடா முயற்சியுள்ள ஒரு புலவர் தம் பாடலில் உண்மையைத் தவிர வேறு ஒன்றுமே கிடையாது என்றார். அதைக் கேட்டு இராக்கப்ப பூபதியும் புலவருக்குப் பரிசுகள் கொடுத்துப் பாராட்டினன். பிழைக்கத் தெரிந்த புலவர் எழுதிய பாடல் இதுதான்:



அண்ணன் என்பவன் தம்பிக்கு மூத்தவன்
வெண்ணெய் என்பது பாலில் விளைவது
திண்ணை என்பது தெருவில் உயர்ந்தது
கண்ணன் என்பவன் கண் இரண்டுள்ளவன்
பாக்கென்பது கமுகின் பழம்
பருப்பென்பது துவரை
நாற்காதமும் முக்காதமும்நடந்தால் ஏழுகாதம்
மேற்கே நின்று பார்த்தால் கிழக்கது தெரியும்
ராக்கா உண்மைகளைச் சொன்னேன் ரட்சிப்பாயே!

இப்படிப் பிழைக்கத் தெரியாது பழக்கமான பாணியிலேயே போய்ப் பிரலாபிக்கும் வேறொரு கவிராயர் பாடலையும் கேளுங்கள் :

கல்லாத ஒருவனை நான் கற்றாயென்றேன்
காடெறியுமவனை நாடாள்வாயென்றேன்
பொல்லாத ஒருவனை நான் நல்லாயென்றேன்
போர்முகத்தை அறியானைப் புலியேறென்றேன்
மல்லாரும் புயனென்றேன் சூம்பல் தோளை;
வழங்காத கையனைநான் வள்ளலென்றேன்
இப்போது சொன்னேனுக்கில்லை யென்றான்;
யானுமென்றன் குற்றத்தாலேகின்றேனே.

அட்சய பாத்திரம்

"என்னையா! பொழுது விடிஞ்சா இந்த ராமானந்த பவான் ஹோட்டல் டிபன். கிருஷ்ணப் பிரசாத் ஹோட்டல் சாப்பாடு! அலுத்துப் போச்சு!" என்று அங்கலாய்த்துக் கொள்ளும் சாப்பாட்டுப் பிரியர்கள் தயவுசெய்து நியூயார்க் நகரத்தில் இருப்பதாகச் சில விநாடிகளுக்குக் கற்பனை செய்து கொள்ளட்டும். ஒவ்வொரு வேளை உணவுத் தேவைக்கும் வெவ்வேறு ஹோட்டலுக்குப் போய் இந்த நியதியைத் தொடர்ந்து கடைப்பிடித்தால் நீங்கள் பத்தொன்பது ஆண்டுகள் நியூயார்க்கில் கழிக்கலாம். ஒரு தடவை நுழைந்த ஹோட்டலுக்குள் இன்னொரு தடவை போக வேண்டாம். அத்தனை ரெஸ்டாரெண்டுகள் அங்கே இருக்கின்றன. ஒரு கணக்குத்தான் போட்டுப் பாருங்களேன்....! சுமார் 20705 உணவு விடுதிகள். போதுமா?





பாரதத்துக்கு முதன் முதலாக மோனிகா ஸெல்ஸ்டன் வந்த போது நடந்தது இது. கல்கத்தா விமான நிலையத்தில் வந்து இறங்கினார். அவரைக் கல்கத்தாவுக்கு வருமாறு அழைத்தவர்களை அங்கு காணோம். காத்திருக்கத் தீர்மானித்தார் ஸெல்ஸ்டன். சில நிமிடங்கள் கழித்து வங்காள பாணியில் உடை உடுத்திய ஒரு வயோதிகரும் ஒரு யுவதியும், கைகளில் மலர் மாலைகளுடனும் பூச்செண்டுகளுடனும் அங்கே வந்தார்கள். வந்தவர்கள் மோனிகா ஸெல்ஸ்டனைத் தாண்டி நடந்து மற்றொரு ஐரோப்பிய மாதின் கழுத்தில் மாலையைப் போட்டு வரவேற்புக் கூறி உற்சாகத்துடன் பேச ஆரம்பித்தார்கள்.

அந்த ஐரோப்பிய மாது ஏதோ 'ஸெல்ஸ்ட்மேன், ஸெல்ஸ்ட் மேன்' என்று சொல்லிக் கொண்டிருந்தாள். ஸெல்ஸ்டனுக்கு நிலைமை புரிந்தது. எழுந்து அவர்களிடம் போய், "நீங்கள் மோனிகா ஸெல்ஸ்டனை அழைத்துப் போகத் தானே வந்திருக்கிறீர்கள்? நான்தான் மோனிகா ஸெல்ஸ்டன்" என்றார். உடனே அவசரம் அவசரமாக மாலைகளும் பூச்செண்டும் கழுத்து மாறின, கரம் மாறின!

மாலை மாற்றம் கல்யாணத்தில் அல்ல....! - 2

மத்திய மந்திரி சபையில் ஏராளமான மந்திரிகள் இருப்பதால் அவர்களை அடையாளம் கண்டுகொள்ளக் கஷ்டத்தில் இயலவில்லை. சமீபத்தில், மத்திய மந்திரி ஸ்ரீ பகத் வருவதாக இருந்த நிகழ்ச்சிக்கு அவருக்குப் பதிலாகக் கடைசி நேரத்தில் வேறு ஒரு மந்திரி வந்தார். விமான தளத்தில், மந்திரிக்குப் பதிலாக, முன்னால் இறங்கிய வேறு யாருக்கோ சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மாலை மரியாதை செய்துவிட்டார்கள்! தமிழக நிதி அமைச்சர் மதியழகன் இதைக் கூறியதாகப் பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது.


மாலை மாற்றம் கல்யாணத்தில் அல்ல....! - 3

சிவகாமியின் சபதம் நாட்டிய நாடகம் நூறாவது நிகழ்ச்சியின் போது அமைச்சர் மதியழகனிடம் ஒரு மாலை தரப்பட்டது. நாட்டிய நாடகம் முதன் முதலில் அரங்கேறக் காரணமாயிருந்த திரு பாலு அதைப் பெற்றுக் கொள்ளக் கழுத்தை நீட்டினார். ஆனால் அமைச்சர் அதைக் கவனிக்கவில்லை. 'இது என்ன எனக்கு நானே மாலை போட்டுக் கொள்வதா! விசித்திரமாயிருக்கிறதே!' என்று கேட்டபடியே அதை அணிந்து கொண்டு விட்டார்! பிறகு விஷயம் புரிந்ததும் அவசரம் அவசரமாய் மாலை கழுத்து மாறியது!


படுமாமா சிடுமாமி

கணவன்: இது என்னடி கோலம்?

மனைவி: கொடி பிடித்துக் 'கோஷ் கோஷ்' என்று கோஷம் எழுப்பிக் குறுக்கேயும் நெடுக்கேயும் நடந்தாலாவது வீட்டுச் செலவுக்கு அதிக பணம் கொடுப்பீர்களா என்று பார்க்கிறேன். இதுதானே இன்றைய பாஷன்!



சீதா கல்யாணம்



"டா, சீதா! சீக்கிரம் டிரஸ் செய்து கொண்டு தயாராக இரு. உன்னைப் பெண் பார்க்கறதுக்கு, அவாளெல்லாம் இதோ வந்துடுவா!....'' என்று அருமைத் தங்கைக்குக் கட்டளையிட்டுக் கொண்டே, கூடத்தில் பத்தமடைப் பாயை எடுத்து விரித்தான் சுந்தரம். வாசல் ஆளோடியில் போட்டிருந்த இரட்டைப் பலகையைச் சேர்த்து ஒன்றாக ஆக்கிய பெஞ்சை, அம்மாவின் ஆணையுடன் கூடத்துக்குள் கொண்டு வந்து சுவர் ஓரமாகப் போட்டான்.

''நான் தயாராகி விட்டேன், அண்ணா!'' என்று காமிரா அறையிலிருந்து குரல் கொடுத்தாள் சீதா. குயிலா அது! கந்தர்வன் யாழ் எடுத்து மீட்டுறாப் போலிருந்தது. குரல் மாத்திரம்தானா? அவளுக்கு அழகுக்குத்தான் என்ன குறைச்சல்? ஆனால் அவளுடைய ஜாதக விசேஷம் என்னவோ அழகிருந்தும், குணமிருந்தும், குரலிருந்தும் நல்ல வரன் எதுவும் இதுவரை தகையவில்லை. அவளுடைய ஒரே அண்ணனும் அவளுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டிய மாபெரும் பொறுப்பும் கடமையும் உள்ளவனுமான சுந்தரம், இதுவரை எவ்வளவோ முயற்சி செய்தும் எந்த வரனும் கைகூடவில்லை. இருபது வயதில் ரெவின்யூ இலாகாவில் கிளார்க்காகச் சுந்தரம் வேலைக்கு அமர்ந்ததும், அத்தோடு தன் பொறுப்பு விட்டது என்று சொல்வதுபோல் அவன் அப்பா மாரடைப்பால் காலமானார். அப்போது சீதாவுக்கு வயது பதினைந்து. இளமையின் தலை வாசலில் நின்று இளமைக் கனவுகளில் மிதந்து, இன்பகரமாக உலகத்தின் இனிப்பையெல்லாம் அநுபவித்துவிடத் துடிக்கும் ஆர்வத்தில் இருந்தாள் சீதா. அப்போதே அவளுக்கு ஒரு கல்யாணத்தைச் செய்து விடுவது என்று முழு முயற்சியில் சுந்தரம் ஈடுபட்டான். ஏனோ இதுவரையில் தள்ளிக்கொண்டே வந்து விட்டது.

சீதாவுக்குப் பிராப்தம் என்பது இந்தப் பிள்ளையின் உருவத்தில்தான் வருகிறதோ என்று சுந்தரம் நினைத்துக் கொண்டான். பிள்ளைக்கு, சுந்தரத்தின் வயதுதான் ஆகிறது. எங்கேயோ ராபர்ட் அன்டு ராபர்ட் கம்பெனியில் அக்கௌண்டெண்டாக வேலை பார்க்கிறானாம். மாதம் நானூறு ரூபாய்க்குமேல் சம்பளமாம். தாய், தந்தை, இரு சகோதரர்கள் உண்டென்றும், இப்போது பெண் பார்க்கத் தாயாரும், சகோதரர் ஒருவரும் பிள்ளையும் வருவதாக 'புரோக்கர்' முன்பேயே சுந்தரத்திடம் தெரிவித்திருந்தார். அந்தப் பிள்ளை ராமுவையும் ஒரு வாரத்துக்கு முன்பு திருவல்லிக்கேணி பைகிராப்ட்ஸ் ரோட்டில் அவன் எங்கேயோ பிராக்குப் பார்த்துக் கொண்டு போகும்போது சுந்தரத்திடம் 'அவன்தான் பெண் பார்க்க வரப் போகும் பிள்ளையாண்டான்' என்று காண்பித்திருந்தார் புரோக்கர்.

அசப்பில் பார்த்தாலும் சுந்தரத்தின் மனத்தில் பதிந்து விட்டது அவன் உருவம். செக்கச் சிவந்த மேனி; சீதாவுக்கு ஏற்றஉயரம்தான்; இரட்டை நாடி என்று சொல்ல முடியாவிட்டாலும் ஒடுக்கு விழும் தேக அமைப்பல்ல.

'இந்த வரனாவது, சீதாவுக்கு அமைய வேண்டும்' என்று பட்டாபிஷேக ராமர் படத்தைப் பார்த்து மானசீகமாக வேண்டிக் கொண்டான் சுந்தரம்.

சுமார் ஏழெட்டு வருடங்களுக்கு முன்பு, சுந்தரத்தின் உயிர்ச் சிநேகிதன் ராமு—அவன்

பெயரும் ராமுதான் — இப்படித்தான் தன்னுடைய பெற்றோருடன் பெண் பார்க்க வந்திருந்தான். அவனுக்குத் தன் தங்கையை மணம் செய்து கொடுப்பதில் சுந்தரத்துக்கு அளவிலாத மகிழ்ச்சி. ராமுவுக்கும் தான் சீதையை மனைவியாக அடையத் தவமிருந்தவன் போல், பெண் பார்க்க வந்த அன்று அவனுக்குள்ளேயே மனத்தின் ஒரு மூலையில் பிரமை ஏற்பட்டது. ஆனால் அவன் தாய் தந்தையர் சீர் என்றும், வரிசை என்றும் எதிர் ஜாமீன் என்றும், சுந்தரமும் அவன் தாயாரும் கேட்டு மலைக்கும் அளவுக்கு லிஸ்ட் கொடுத்ததும் அந்தக் கல்யாணம் நின்று போய்விட்டது. அதற்குப் பிறகு அந்த உயிர் நண்பனைச் சந்திக்கவே முடியவில்லை. இருவரும் சென்னையிலேயே இருந்தாலும், அடுத்தடுத்த வீட்டில் இருப்பவர்கள் யார் என்று தெரியாத நிலையில் வசிக்கும் சென்னையில் எங்கெங்கேயோ விலாசம் தவறிப் போனவர்கள் விதிவசத்தால் மறுபடியும் சந்தித்தால்தான் உண்டு. இதற்குப் பிறகு பலபேர் சீதாவைப் பெண் பார்த்து விட்டுப் போய் விட்டார்கள். ஆனால் கல்யாணம்தான் நடக்கவில்லை.

"என்ன சுந்தரம்? பிள்ளையாத்துக்காரா இன்னும் காணுமே?...." என்று கவலையுடன் கேட்டுக் கொண்டே கூடத்துக்கு வந்தாள் சிவகாமி.

பழைய நினைவுகளிலிருந்து யதார்த்த நிலைக்கு வந்த சுந்தரம், திடுக்கிட்டு அம்மாவைத் திரும்பிப் பார்ப்பதற்கும், வாசலில் டாக்ஸியில் பிள்ளை வீட்டுக்காரர்கள் வந்து இறங்குவதற்கும் சரியாக இருந்தது.

அவர்களைக் கண்டதும், சிவகாமி, "டேய் சுந்தரம், அவா வந்துட்டா! வாசலிலே போய்க் கூப்பிடு!..." என்று சொல்லி விட்டு அவசரம் அவசரமாகச் சமையற்கட்டுக்குள் நுழைந்து கொண்டாள்.

சுந்தரம், நிலைகொள்ளாத தவிப்புடன், வாசலுக்குச் சென்று, "வாங்கோ.....! வாங்கோ... உள்ளே வாங்கோ...." என்று வரவேற்று உபசரித்துக் கூடத்திலிருந்த மின் விசிறியைச் சுழல விட்டான்.

பிள்ளையும், பிள்ளையின் தாயாரும், பிள்ளையின் மூத்த சகோதரனும் வந்திருந்தார்கள்.

ஒவ்வொருவராக நமஸ்கரித்த சீதா, ராமுவையும் நமஸ்கரித்தபோது அவன் பார்த்த பார்வை... அப்பப்பா! அவளை அப்படியே விழுங்கி விடுபவனைப் போலிருந்தது.

வெளிப் பேச்சுக்கள் ஆரம்பித்த போது புரோக்கர் வந்து சேர்ந்து கொண்டார். பதினைந்து பவுனில் நகைகளும், வெள்ளிப் பாத்திரம் ஆயிரம் ரூபாய்க்கும், பித்தளை எவர்சில்வர் பாத்திரங்கள் இரண்டாயிரத்துக்கும் செய்வதாக அப்படியே ஒப்புக் கொண்ட பிள்ளைக்குக் கையில் ஆயிரம் ரூபாய் கொடுப்பதாகச் சொன்னதும் அதை மூவாயிரமாகக் கேட்டனர். கல்யாணச் செலவு சேர்த்து இதுவே பத்தாயிரம் ஆகி விடுகிறதென்றும் இதற்கு மேல் செலவழிக்கத் தன்னிடம் தம்பிடி கூடக் கிடையாதென்றும் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தான் சுந்தரம்.

ஆனால் புரோக்கர் அவனைத் தனியே அழைத்துச் சென்று, நல்ல வரன் என்றும், பையன் கம்பெனியில் நல்ல வேலையில் இருக்கிறான் என்றும், பிரமோஷன் கிடைக்குமென்றும் எப்படியும் இதை முடித்து விடுமாறும் ஆலோசனை கூறினார்.


சுந்தரத்துக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. சமையற்கட்டுக்குச் சென்றான். அங்கே அம்மாவும், சீதாவும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

"என்னடா சுந்தரம்? இன்னும் எத்தனை நாட்கள் இப்படிக் கல்யாணத்தைத் தள்ளிக் கொண்டே போகிறது? எங்கேயாவது புரட்டிக் கொடுக்க முடியுமா என்று பாருடா?" என்று சிவகாமி கெஞ்சினாள். இந்த வரனை எப்படியும் முடித்துவிட வேண்டும் என்ற ஆர்வம் அவள் பேச்சில் தொனித்தது. மகளுக்கு விரைவில் கல்யாணமாக வேண்டும் என்ற அவசரம் தாயாரைத் தவிர வேறு யாருக்கு இருக்க முடியும்? சீதாவைப் பார்த்தான் சுந்தரம். ஏதோ ஒரு கனவு மயக்கம் அவள் கண்களில் பளிச்சிட்டது.

அவனுக்குத் திடீரென்று ஞாபகம் வந்தது. சர்க்காரில் இப்போது, இதைப் போன்ற திருமணச் செலவுகளுக்காக மூவாயிரம் ரூபாய் கடன் கொடுக்கிறார்கள்! தங்கையின் மகிழ்ச்சியே தன் மகிழ்ச்சி என்று ஒரு முடிவுக்கு வந்தவனாகப் புன்முறுவலுடன் சீதாவைப் பார்த்த சுந்தரம், திரும்பவும் கூடத்துக்கு வந்தான்.

"எப்படியும் பத்து நாட்களுக்குள்ளே கையிலே மூவாயிரம் ரூபாய் கொடுத்துடறேன்! என்னாலே நேரே வர முடியாவிட்டால் கூட 'பாங்க் டிராப்டா'க வாவது வாங்கி அனுப்பிச்சுடறேன். முகூர்த்தத்துக்குத் தேதியைப் பார்த்துக் கடுதாசு போடுங்கோ!" என்றான் சுந்தரம்.

மறு நாளே தன்னுடைய அதிகாரியைப் பார்த்து, கடனுக்கு விண்ணப்பம் கொடுத்து விட்டான் சுந்தரம். இப்போது செய்யப் போகும் சீரையும், கையில் கொடுக்கப் போகும் ரொக்கத்தையும் நினைத்தவுடன் சுந்தரத்துக்கு அவனுடைய பழைய நண்பன் ராமுவின் ஞாபகம்தான் வந்தது. கிட்டத்தட்ட இந்த அளவுக்குத்தான் அவன் பெற்றோரும் கேட்டனர். செய்து கொடுத்திருந்தால் சீதாவுக்குக் கல்யாணமாகி இன்று ஏழெட்டு வருடங்கள் ஓடியிருக்கும். குறைந்தது இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகி இருப்பாள் சீதா. தனக்குப் பழைய இடத்தில், சுகத்தையும் துக்கத்தையும்



பகிர்ந்து கொண்டு மனத்தைத் திறந்து கூறி ஆறுதல் பெறும் அளவுக்குப் பழக்கமுள்ள நண்பனின் மனைவியாக அவள் இருந்திருப்பாள். அவையெல்லாம் இப்போது பழைய கதையாய், பழங் கனவாய்ப் போய்த்துப் போய் விட்டவை போலத் தோன்றியது சுந்தரத்துக்கு.

கடன் வாங்கியும் ஆதி ஐந்து நாட்களுக்குள் ஐயாயிரம் ரூபாய் பணம் சுந்தரத்தின் கைக்கு வந்து விட்டது. வேலையின் நடுவே பாங்குக்குச் சென்று மாப்பிள்ளைப் பையன் பெயருக்கு 'பாங்க் டிராப்ட்' ஒன்று வாங்கிவந்தான்.

இனி அம்மாவிடமும், தங்கையிடமும் காட்டினால் எவ்வளவு மகிழ்ச்சி அடைவார்கள்! உலகத்திலே யாருக்குமே கிடைக்காத அன்பு அண்ணன் கிடைத்திருக்கிறான் என்று சீதா பூரித்துப் போவாள்! பிறகு வீட்டுக் கவர் ஒன்று வாங்கி வரச் சொன்ன சுந்தரத்துக்கு அம்மாவின் முகமும், சீதாவின் முகமும் மாறி மாறி மனக் கண்ணில் நிழலாடின. டிராப்டைக் கவரில் போட்டு, அவளின் மீது விலாசம் எழுதி ரிஜிஸ்தர் செய்து வைப் பியூனிடமே கொடுத்து விட்டுத் தன் வேலையில் ஈடுபட்டு விட்டான் சுந்தரம்.

அன்று கொண்டு வந்த டிபன்கூடச் சாப்பிடாமல் வேலையைச் செய்தான் சுந்தரம். அவனோடு வேலை செய்பவர்கள் யாவரும் வீட்டுக்குப் போய் விட்டிருந்தனர். பியூன் கதிர்வேலு மாத்திரம், ஆபீசை இழுத்துப் பூட்டுவதற்காக, சுந்தரம் எப்போது வீட்டுக்குக் கிளம்பப் போகிறான் என்று எதிர் பார்த்துக் காத்திருந்தான்.

சுந்தரம் அவசரம் அவசரமாக மேஜை டிராயரை இழுத்துப் பூட்டிக் கொண்டு மத்தியானம் சாப்பிடாத டிபனையும் கையில் எடுத்துக் கொண்டு ஆபீசை விட்டு வெளியே வந்தான். உடல் சற்று ஆயாசமாக இருந்தது.

ஐயாயிரம் ரூபாய் பணத்தை அனுப்பியாயிற்று. 'சீக்கிரமாகத் தேதியை வைத்துக் கொண்டார்களானாலும் சட்டுப்புட்டென்று கல்யாணத்தை முடித்து விடலாம். என்ன செய்கிறார்களோ?' என்று நினைத்துக் கொண்டே மியூசியம் அருகே வந்தவனுக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது.

யாரை இத்தனை வருடங்களாகப் பார்க்காமல் இருக்கிறோமோ, எந்த உயிர் நண்பனைப் பிரிந்து விட்டோமோ என்ற எண்ணம் இப்போது சில நாட்களாக அடிக்கடி அவன் மனத்தில் எழுந்து சஞ்சலப்படுத்தி வந்ததோ, அந்த உயிர் நண்பன்—அவன்தான் ராமு—எழும்பூர் ஆஸ்பத்திரிக்கருகே உள்ள பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தான்.

"டேய், ராமு.... நீதானா... நீதானடா!" என்று கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிய, முகம் மகிழ்ச்சியைப் பிரதிபலிக்கக் கேட்டான் சுந்தரம்.

பஸ் ஏதேனும் வருகிறதா என்று பார்த்துக் கொண்டிருந்த ராமு, பழக்கமான குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். ஆச்சரியத்தால் ஸ்தம்பித்து, ஒருவரை ஒருவர் சிறிது நேரம் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தனர்.

ராமுதான் முதலில் கேட்டான்.

"சுந்தரம்! அம்மா தங்கை எல்லாரும் சௌக்கியமா....? நீ இப்போ எங்கே வேலையிலிருக்கே?...."

"அம்மா, தங்கை எல்லாரும் சௌக்கியந்தாண்டா!.... தங்கைக்குத்தான் இன்னும் கல்யாணமாகல்லே! இப்ப முடிஞ்சாப்ல மாதிரி தான்! ஒரு வரன் இப்பத்தான் அமைஞ்சது. இன்னிக்குத்தான் ஐயாயிரம் ரூபாய் வரதட்சிணைக்கு பாங்க் டிராப்டை அனுப்பினேன். பின்னே வீட்டிலிருந்து தேதி முடிவு பண்ணி வந்ததும் கல்யாணந்தான்! நான் இங்கே தாம்பரம் ஏஜன்ஸியிலே இருக்கேன். கோடம்பாக்கம் போஸ்டாபீஸ்ட்டே... அதே வீடு. அப்பா, அம்மா சௌக்கியமா இருக்காங்களா? எத்தனை குழந்தைகளைப் பெத்துவச்சிருக்கே?..." என்று பதில் கேள்விகளை அடுக்கினான்.

"அம்மா இறந்து போயி நாலு வருஷங்களுக்கு மேலே ஆயிடுச்சுடா! அப்பா சொந்த ஊரு சேலம் நடராஜபுரத்திலே நிலபுலன்களைப் பார்த்துக்கிட்டு இருக்காரு. எத்தனை குழந்தைகளைப் பெத்து வச்சிருக்கேன்னு கேட்டியா? நான் கம்பனிட்டா கம்பனியிலே பிஸினஸ் அடாப்ட் செய்யறேன். கல்யாணம் செஞ்சுக்கிட்டாத்தானே இந்த வம்பெல்லாம். கல்யாணமே செஞ்சுக்கல்லே!..." என்று சிரித்துக் கொண்டே கூறினான்.

"அப்படியே என் தங்கையைக் கட்டிக்கிட்டிருக்கலாம்!... ஹம்... எங்களுக்குக் கொடுத்து வச்சது அவ்வளவுதான்!...." என்று முனகினான் சுந்தரம்.

"அப்படியெல்லாம் இல்லே, சுந்தரம்! எங்களுக்கும் பிராப்தம் அவ்வளவுதான். நீ அவ்வளவு செய்யணும், அது இதுன்னு சொன்னாலே என் அம்மா. கடைசியிலே என்னைக் கல்யாணக் கோலத்திலே பார்க்க முடியலியேன்னு கஷ்டப்பட்டுக்கிட்டே செத்தாள். அதிலேயிருந்து ஒரு விரக்தி எனக்கு; அவ்வளவுதான்! நல்லா இருந்தா இந்த வரனாவது முடியட்டும். சரி... பின்னே எங்கே வேலையிலே இருக்கான்? அப்பா அம்மா இருக்காங்களா?...." ராமுவின் பேச்சில் உலகத்தையே வெறுத்த மனப்பான்மையும் அதே சமயத்தில் தன் நண்பனின் தங்கை நல்ல இடத்தில் வாழ்க்கைப்பட வேண்டுமே என்ற கவலையும் தொனித்தன.

"பையன் பரவாயில்லேப்பா, சீதாவுக்கு ஈடா இருப்பான். ராபர்ட் அண்டு ராபர்ட் கம்பெனியிலே அக்கௌண்டெண்டா இருக்கானாம்! பேர்கூட உன் பேர்தான் 'ராமசாமி'! பையனுக்கு அப்பா அம்மா ரெண்டு அண்ணனும் இருக்காங்க!" என்றான் சுந்தரம்.

"என்ன, என்ன, எந்தக் கம்பெனியிலே?" அதிர்ச்சியுடன் கேட்டான் ராமு.

"ஆமாம்ப்பா ராபர்ட் அண்ட் ராபர்ட் கம்பெனியிலே அக்கௌண்டெண்ட்! ஏன் ராமு, ஏதாவது தவறுதலா இருக்குமா?" மனம் படபடக்கக் கேட்டான் சுந்தரம்.

"சுந்தரம்! என்னைத் தவறுதலா நினைக்காதே. இவ்வளவு கஷ்டப்பட்டுப் பணத்தை வாரிக் கொட்டிக் கல்யாணம் செய்யப் போறே! பின்னே யோசிச்சு இருக்க வேண்டாமா!... அவன் அங்கேதான் வேலை செய்யறானுன்னு



உங்களை விட நான்
வலிமை மிகுந்தவன்
நான் பருகுவது ஓவல்டின்
OVALTINE
The Supreme Food Beverage
ஓவல்டின்
ஆரோக்கியம்
ஓவல்டின்
வலிமை
ஓவல்டின்
சக்தி

விசாரிச்சியா ?....'' என்று கலக்கத்துடன் கேட்டான் ராமு.

''என்னடா ராமு? இந்த லாரியை அனுப்பக் கிட்டு வந்த புரோக்கர்தான் சொன்னாரு!... பின்னே வீட்டுக்காரங்களும் இதை ஒத்துக்கிட்டாங்களே?...'' திகிலும், அனுப்பி விட்டோமே என்ற அதிர்ச்சியும் சுந்தரத்தின் குரலில் பிரதிபலித்தன.

''அந்தக் கம்பெனிக்குப் போனாயா, அது உண்மைதானான்னு விசாரிச்சியா?.....'' என்று ஆத்திரத்துடன் கேட்டான் ராமு.

''இல்லேடா... கேட்கவில்லே. அந்தப் புரோக்கரை ரொம்ப நாட்களாகத் தெரியும். அவர் சொன்னதை நம்பி விட்டேன். என்னடா, நீதான் விஷயத்தை உடைச்சுச் சொல்லேன்? உன் உறவுக்காரங்க யாராவது அந்தக் கம்பெனியிலே இருக்காங்களா?...'' சுந்தரத்துக்கு அவசரம் பீறிட்டுக் கொண்டு வந்தது.

''உறவுக்காரங்க ஒருத்தரும் இல்லே! நான்தான் அந்தக் கம்பெனியிலே இருக்கேன்! அது மாத்திரமில்லே!... நான்தான் அந்த அக்கௌண்டெண்ட். போதுமா?''

சுந்தரத்துக்கு மூளை குழம்பியது. அவன் காலையில் எட்டரை மணிக்கு வீட்டில் சாப்பிட்டது. ஆபீசில் ஒரு கப் காபி குடித்ததோடு சரி. மத்தியானம் ஒன்றும் சாப்பிடவில்லை. மன உளைச்சல் வேறு. இப்போது இந்த அதிர்ச்சி தரும் செய்தி. எல்லாம் ஒன்றுசேர்ந்துகொண்டு அவன் இதயத்தை வாட்டி, அவன் மூளையை ஸ்தம்பிக்கச் செய்து, உணர்ச்சிகளைக் கலக்கி அவனைக் கிறுகிறுக்கச் செய்தது.

சட்டென்று கைத் தாங்கலாக அவனைப் பிடித்துக் கொண்டான் ராமு. கிறுகிறுப்புக்கெல்லாம் 'எனக்கு ஒன்றுமில்லை' என்று சமாளித்துக் கொண்டான் சுந்தரம்.

இந்த நிலையில், அவனை நடந்து வீட்டுக்குச் செல்ல விடக் கூடாது என்று தீர்மானித்த ராமு, டாக்ஸியை அழைத்து அதில் அவனை ஏறச் செய்து, நாளைக் காலையில் ஆபீசுக்கு வரும்படி சொல்லிவிட்டு டாக்ஸி டிரைவருக்கு முன்கூட்டியே இரண்டு ரூபாய் பணத்தையும் அவரிடம் கொடுத்து அனுப்பினான்.

டாக்ஸி சத்தத்தைக் கேட்டு வாசலுக்கு வந்தாள் சிவகாமி. டாக்ஸியை விட்டு இறங்கின சுந்தரம், அம்மாவைப் பார்த்தவுடன் தலையைக் குனிந்து கொண்டான். கண்களில் வந்த நீரைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு உள்ளே சென்றான்.

வழக்கம்போல் டிபன் பாக்கெட்டைத் தேய்த்து வைப்பதற்காக, அதை எடுத்துச் சென்ற சீதா, டிபன்பாக்ஸ் கனமாயிருக்கவே அதைத் திறந்து பார்த்தாள். காலையில் அனுப்பிய டிபன் அதில் அப்படியே இருந்தது.

''என் அண்ணா?... உடம்பு சரியில்லையா? நான் கொஞ்சம் காப்பி போட்டுத் தரட்டுமா?....'' என்று சீதா அவனுக்கு அருகில் வந்து நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள். நல்ல வேளையாக அவள் நினைத்தது போல் ஜுரம் ஒன்றும் இல்லை.

''எனக்கு அப்படியொன்றும் ஜுரமில்லை சீதா. தலைவலி ரொம்ப அதிகமாயிருக்கு. அசதியும் ரொம்ப அதிகமாக இருக்குது.

கப்பலைத் தடுத்து நிறுத்திய கொசு!

உலகப் பிரசித்தி பெற்ற பனாமாக் கால்வாயை வெட்டும் மாபெரும் முயற்சியை முதலில் மேற்கொண்டவர்கள் பிரஞ்சுக்காரர்கள்தான். ஆனால் அந்த வேலையைப் பூர்த்தி செய்தவர்கள் அமெரிக்கர்கள்.

இந்த அரும்பெரும் பணியைப் பிரஞ்சுக்காரர்களால் நிறைவேற்ற முடியாததற்குக் காரணம் மஞ்சள் ஜுரம் என்ற ஒரு பெருவாரி வியாதிதான்.

அந்த விஷ நோய்க்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதை ஆராய்ந்து அறிய ஜெஸ்ஸி லேஸியர், வால்டர் ரீட் என்ற இரண்டு அமெரிக்க டாக்டர்கள் முற்பட்டனர். அவர்கள் மட்டும் அம்



முயற்சியில் ஈடுபடாமல் இருந்திருந்தால் அட்லாண்டிக் மகா சமுத்திரத்திலிருந்து பசிபிக் மகாசமுத்திரத்துக்குச் செல்லும் சரக்குக் கப்பல்கள், இன்றும் தென் அமெரிக்காவின் முனையைச் சுற்றிக் கொண்டுதான் போய்க் கொண்டிருக்கும்.

மஞ்சள் ஜுரம் என்ற விஷநோயைப் பரப்புவது ஒரு வகைக் கொசுதான் என்பதைக் கண்டுபிடித்தனர். அதை அழிக்கும் வேலையை அமெரிக்க ராணுவ டாக்டர் வில்லியம் கோர்காஸ் மேற்கொண்டார். கொசுக்கள்மீது மாபெரும் போர் தொடங்கினார். வெற்றி பெற்றார். பிறகுதான் உலக வர்த்தகத் துறைக்குப் பெருமளவு பயன்படும் பனாமாக் கால்வாய் வேலை இடையூறு எதுவும் இன்றி முடிவு பெற்றது.

ஆதாரம்: லைஃப் ஸைன்ஸ்
தகவல்: விஜயம்

எவ்வளவுதான்!... ராத்திரி எனக்கு ஒன்றும் வேண்டாம். படுத்துத் தூங்கிக் காலையில் எழுந்தால் உடம்பு சரியாகப் போயிடும்!....'' என்று கூறிக் கொண்டே கைகால்களைக் கழுவிக் கொண்டான் சுந்தரம்.

அவன் மத்தியானம் சாப்பிடாத விஷயத்தைப் புரிந்து கொண்ட அவன் அம்மா, ''சுந்தரா..... கொஞ்சம் ரசம் சாதமாவது சாப்பிடேம்பா! பட்டினி போட்டு உடம்பைக் கெடுத்துக்காதே....'' என்று சொல்லிப் பார்த்தாள்.

''ஒன்றுமாம்... ஒன்றும் வேண்டாம்மா... என்னைத் தொந்தரவுபடுத்தாதே!...'' என்று சொல்லிக் கொண்டே சுந்தரம், அறைக்குள் சென்றான்.

''போனால் போகட்டும் விட்டோமே. மூவா யிரம் ரூபாய் பணத்தை அவனுக்கு அனுப்பி விட்டோமே?... அவனிடமிருந்து எப்படித் திருப்பி வாங்குவது?....'' என்று யோசனையில் ஆழ்ந்தபடி புரண்டு புரண்டு படுத்தான் சுந்தரம்.

யோசனை செய்து, யோசனை செய்து மூளையைக் கசக்கிக் கொண்டதுதான் மிச்சம். எந்த வழியும் அவனுக்குப் புலப்படவில்லை. 'பின்னே வீட்டுக்காரர்களிடம் நேரில் போய்ச் சண்டையிடுவது. இப்படி இல்லாத வேலையைச் சொல்லி ஏமாற்றி விட்டார்களே என்று கூறி, அனுப்பின பணத்தைத் திருப்பி வாங்குவது

"75 காசு டிக்கெட் இரண்டு வாங்கிட்டு இரண்டு பேரும் இங்கே வந்துட்டீங்களே! இது ரூ. 1-50 என்ட்ரன்ஸ்!"

"பரவாயில்லே! இரண்டு பேரும் ஒரே ஸீட்டில் உட்கார்ந்து கொள்கிறோம்."



ருக் கூடப் புரோக்கர்தான் வரவேண்டும். புரோக்கரையே கேட்டால் என்ன? 'பொய்யாகத் திரித்துக் கூறி இல்லாத வேலையைச் சொல்லி ஏமாற்றி விட்டாயே' என்று அவரையே கேட்டு விட்டால் என்ன?' என்று ஒரு கணம் யோசித்தான்.

'எனக்கு என்ன ஸார் தெரியும்? அவங்க சொன்னதை உங்ககிட்டே சொன்னேன்? நீங்க அது உண்மைதானான்னு தெரிஞ்சிக்க வேண்டாமா?....' என்று அவனைத் திருப்பிக் கேட்டால்....

சிந்தனைக் குழப்பத்தில் தலை ஒரேயடியாக வலித்தது. அந்தத் தலைவலியையும் மீறி எப்போது கண்ணயர்ந்தானோ அவனுக்கே தெரியாது. காலையில் சீதா வந்து எழுப்பியபோது தான், காலை ஏழு மணி வரை தூங்கியிருக்கிறோம் என்பது அவனுக்குத் தெரிந்தது.

பல்லைத் தேய்த்து விட்டு, சமையற்கட்டுக்குள் நுழைந்து, சீதா கொடுத்த காப்பியை வாங்கிக் குடித்தான்.

இதற்கு மேல் தாயிடமிருந்தோ தங்கையிடமிருந்தோ செய்தியை மறைக்க முடியவில்லை. பாங்க் டிராப்ட் வாங்கி அனுப்பியதையும், ஆனால் நேற்று இரவு அதிர்ஷ்டவசமாக ராமுவைச் சந்தித்தபோது அவன் சொன்ன விஷயத்தையும் தெரிவித்து விட்டான் சுந்தரம்.

சிவகாமி திக்பிரமை அடைந்துவிட்டாள்.

"என்டா, சுந்தரம்? அந்த மாதிரி பொய் புரட்டு சொல்கிற இடத்திலே நம்ம குழந்தையை எப்படிடா குடுக்கிறது? பணத்தை வேறு அனுப்பிச்சிட்டியே?... எப்படித் திரும்பி வாங்கறது?"

"பணத்தைப் பத்திக்கூடக் கவலைப்படாதே அண்ணா! என் கல்யாணம் ஆகாவிட்டால்கூட அதைப் பத்திக் கவலையில்லே! நான் இப்படியே கன்னியாவே இருந்துடறேன்! இந்தமாதிரி ஓர் இடம் மட்டும் எனக்கு வேண்டவே வேண்டாம்!" என்று உறுதியுடன் கூறினாள் சீதா.

"சரி.... எதுக்கும் நான் அந்தப் புரோக்கரைப் போய்ப் பார்த்துட்டு வந்துடறேன்." அவசரம் அவசரமாகக் கிளம்பினான் சுந்தரம்.

புரோக்கர் வீடு நுங்கம்பாக்கத்தில்தான் இருந்தது. சுந்தரம், அவர் வீட்டுக்குச் சென்றபோது அவர் வீட்டில் இல்லை. மாம்பலம் போயிருப்பதாக வீட்டில் சொன்னார்கள். மாம்பலத்தில் ஸ்டேஷனுக்கு எதிர்த்த கோயில் அருகில் எங்கேயாவது பார்க்கலாம் என்ற நம்பிக்கையில் மாம்பலம் வந்தான். புரோக்கர் கிடைக்கவில்லை. அன்றும் இன்றும் அலைந்ததில் மணி பத்துக்கு மேல் ஆகிவிட்டது. ஆபீசுக்கு இனி மேல் இன்று போக முடியாது. அந்த பாங்க் டிராப்ட்டை இன்று எப்படியாவது திரும்பப் பெற வேண்டும் என்ற உறுதியுடன் பப்ளிக் டெலிபோன் பூத்திலிருந்து ஆபீசுக்கு ஒரு நாள் லீவுக்கு டெலிபோன் செய்துவிட்டு ஓய்ந்து போய் வீட்டுக்குத் திரும்பினான். குளித்துச் சாப்பிட்டு விட்டு மறுபடியும் தேடலாம் என்ற எண்ணத்தில் வீட்டுக்கு வந்த அவனைச் சீதா மகிழ்ச்சியுடன் வரவேற்றாள்.

"அண்ணா! நீ அனுப்பிச்ச பாங்க் டிராப்ட் எனக்கே வந்து சேர்ந்துடுத்து!.... இதோ பார்!..." சந்தோஷ மிகுதியால் ஓடி வந்து ஒரு கவரை நீட்டினாள் சீதா.

சுந்தரத்துக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. அவசரம் அவசரமாகக் கவரை வாங்கி மேல் விலாசத்தைப் பார்த்தான்.

என்ன அதிசயம்! கவரின் மேல் சுந்தரம் தான், சீதாவின் பெயரை எழுதி விலாசத்தையும் எழுதியிருந்தான். கவரில் விலாசம் எழுதும் போது தங்கையின் முகம் மனக் கண்ணில் வந்ததும், அவளுடன் தான் மானசீகமாகப் பேசிக் கொண்டே கவரில் விலாசம் எழுதியதும் எவ்வளவு நல்லதாகப் போயிற்று! கடவுள் ஒரு பெரிய பாபத்திலிருந்து, பண நஷ்டம், மனக் கஷ்டம் இவைகளிலிருந்து தக்க சந்தர்ப்பத்தில் காப்பாற்றியிருக்கிறார்.

"சுந்தரம்! இந்தப் பணத்தை உன்னுடைய சிநேகிதன் ராமசாமிக்குக் கொடுத்து இந்தக் கல்யாணத்தை நிச்சயம் செய்துடடா....!" என்று கூறிக் கொண்டே வந்தாள் சிவகாமி.

"ஆமாம்மா! அதுதான் செய்யப் போகிறேன்! பாங்க் டிராப்ட் வி. ராமசாமி என்ற பெயருக்குத்தான் வாங்கியிருக்கிறேன். இந்தப் பணத்தை என் சிநேகிதனே வாங்கிக் கொள்ளலாம். அவனுக்கும் சீதாவைக் கல்யாணம் செய்து கொள்ள மிகவும் விருப்பம். அதனால்தான் இது வரை கல்யாணமே வேண்டாம் என்று சொல்லிக் கொண்டிருந்தான். இந்த டிராப்டை அவனிடம் கொடுத்துவிட்டு, ஊரில் அவன் அப்பாவிடம் நாங்கள் இரண்டு பேருமாகவே சென்று கல்யாணத் தேதியை நிச்சயம் செய்து கொண்டு வந்து விடுகிறோம்" என்று சந்தோஷ மிகுதியால் சொல்லிக் கொண்டே அந்தக் கவருடன் டாக்ஸியைப் பிடிக்க ஓடினான் சுந்தரம்.

"பெண் பார்க்கும் போது முதன் முதலில் அவர் காலில்தான் விழுந்து நமஸ்கரித்தேன். அவரே கணவராக வர வேண்டும்...." பட்டாபிஷேக ராமனைப் பார்த்து மௌனமாக வேண்டிக் கொண்டாள் சீதா.

பட்டாபிராமன் அதே புன்சிரிப்புடன் காட்சியளித்துக் கொண்டிருந்தான்.


அளவோடு பெற்றால்
வளமோடு வாழலாம்
என்னுடைய குடும்பம் சிறியது—எனக்கு இரண்டே குழந்தைகள் தான்
இரண்டு குழந்தைகள் தானா! எங்களுக்கு வருடமொரு குழந்தை பிறக்கிறது! என்ன செய்வது?
என்ன செய்வதா? என்னைப் போல் நீரும் நிரோத் உபயோகப்படுத்து
உங்கள் குடும்பம் பெருகாமல் தடுக்கும் சக்தி உங்களிடமே இருக்கிறது.
நிரோத்
குடும்பத்தைக் கட்டுப்படுத்த
15 காசுக்கு 3
நாடு முழுதும் இப்பொழுது கிடைக்கிறது. வீட்டுச் சாமான்கள், மருந்து, வெற்றிலைப்பாக்கு ஆகியவை விற்கும் கடைகளில் கிடைக்கும்.

வட்ட மேஜை

பெட்டிக்குள் உள்ள கடிதம் ரூ. 15 - பரிசு பெறுகிறது.

தற்சமயம் தமிழ்நாடெங்குமுள்ள அரசாங்க நூல் நிலையங்களில் பொதுமக்கள் திருப்தி அடைவதாகத் தெரியவில்லை. தொடர்ந்து வாங்கிக் கொண்டு வந்திருந்த பிரபலமான சஞ்சிகைகளையெல்லாம் நிறுத்தி விட்டிருக்கிறார்கள். அங்குள்ள அதிகாரிகளை அணுகி, காரணம் கேட்டால், போதிய பணம் அரசு வழங்குவதில்லை என்று சொல்லி, மேற்கொண்டு பேச முடியாமல் செய்கிறார்கள். எல்லோரும், எல்லாப் பத்திரிகைகளையும் சொந்தமாக வாங்க முடியாதென்பது யாரும் ஒத்துக் கொள்ளும் உண்மையே. அப்படியிருக்கும் போது அவர்கள் நூலகங்களுக்காவது சென்று, பத்திரிகைகளைப் படித்து, மகிழ நூல் நிலையங்கள் வசதி செய்ய வேண்டும். மேலும், அரசாங்க நூல் நிலையங்களில் ஆண்டுதோறும் வாங்கப்படும் புதிய நூல்கள் விஷயத்தில் போதிய கவனம் செலுத்தப்படுவதில்லையென்று தெரிகிறது. அதற்கென ஒதுக்கப்படும் தொகை மிகவும் சொற்பம். வாங்கப்படும் நூல்கள் தரமாக இல்லாததும் குறிப்பிடத்தக்கது. தற்சமயம் நூல் நிலையங்களிலுள்ள அலமாரிகளில், கீழ்த்தரமான உதவாக்கரையான நாவல்களும், சிறிதும் பயனில்லாத நூல்களுமே மலிந்து கிடக்கின்றன. நூலகங்களை நல்ல முறையில் இயங்கச் செய்வது அரசினரின் மிக முக்கியமான பணியாகும்.

உதகமண்டலம்
10-3-70 நா. மனோகரன்

பெரிய நகரங்களில் பிரபல நடிகர்கள் நடித்த திரைப்படங்கள் வெளியானால் வரிசையில் நின்று டிக்கெட் வாங்க முற்பட்டாலும் டிக்கெட்டுகள் கிடைப்பதில்லை. டிக்கட்டுகளை ஒன்றுக்கு ஐந்து மடங்கு விலை வைத்துத் திருட்டுத்தனமாக வெளியில் விற்கிறார்கள். இச்செயலைச் செய்பவர்கள் மீது தியேட்டர் உரிமையாளர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை.

அரசு இவ்விஷயத்தில் தீவிர கவனம் செலுத்திச் சம்பந்தப்பட்ட சமூக விரோதிகள் மீது நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.

திருச்சி ப. வைத்தியலிங்கம்

போனமாதம் சென்னை செல்லும் நீலகிரி எக்ஸ்பிரஸில் 'டூ டயர்' 'லேடீஸ் கம்பார்ட்மெண்டில்' இரண்டு பர்த்துகள் ரிசர்வ் செய்து கொண்டேன். ரயிலில் ஏறிய பிறகுதான் இரண்டும் மேல் பர்த் என்பது தெரிந்தது. எனது சிறிய தங்கை அதில் ஏறிப் படுக்கப் பயப்படவே நான் அதைக் காலியாகவே விட்டுவிட்டேன்.

இரவு பதினொரு மணி சுமாருக்கு இரண்டு ஆண்கள் அதில் ஏறிப் படுத்துக் கொண்டார்கள். அநுமதியில்லாமல் மேலே ஏறிப் படுத்துக் கொண்டு விட்டுப் பண்பற்ற பேச்சு வேறு. இரவு வெகு நேரம் வரை ஒரே சிரிப்பு. சென்னை வந்ததும்தான் கீழே இறங்கினார்கள்.

இப்படி நடந்தால், பெண்களுக்கென்று தனியிடம் ஒதுக்குவதன் பொருள் என்ன? நாகரிகம் வளர வளரப் பண்பு மக்களிடம் விடைபெற்று வருகிறது.

பொள்ளாச்சி
16-4-70 குமாரி விமலா

பள்ளிக்குச் செல்வதற்காக நான் ஏறியிருந்த பஸ்ஸில் ஏறினான் ஒரு மாணவன். பாஸ் வைத்துக் கொண்டு தினமும் பஸ்ஸில் தன் பள்ளிக்குச் செல்பவன் அவன். பஸ்ஸில் ஏறியவுடன் டிரைவர் இடத்துக்கு அருகில் அமர்ந்து கொண்டு "இன்று என்ன முட்டுக்கட்டையா?" என்றான். பஸ்ஸின் 'கியர்' மாற்றியவுடன் அது அந்நிலையிலிருந்து நழுவாமலிருக்க ஒரு கட்டையை இடையில் பொருத்த வேண்டியிருந்தது. ஒவ்வொரு ஸ்டாப்பிலும் பஸ் நின்றவுடன் அம்மாணவனே அக்கட்டையை எடுத்து விடுவதும் பின் பஸ் புறப்பட்டதும் அதைப் பொருத்துவதுமாக இருந்தான். இறங்கும் இடம் வரும்வரையில் அவன் டிரைவருக்கு இவ்வாறு உதவி செய்து கொண்டே வந்தான். மேலும் ஒவ்வொரு ஸ்டாப்பிலும் ஏறும் இறங்கும் பிரயாணிகளைக் கவனித்துக் கண்டக்டருக்கும் தகவல் கொடுத்து உதவி வந்தான்.

ஒவ்வொரு மாணவனிடமும் பொறுப்பு உணர்ச்சி, சேவை மனப்பான்மை ஆகியவற்றைப் பள்ளி ஆசிரியர்கள் வளர்த்து வந்தால் இதுபோன்று பள்ளிக்குச் செல்லும் நேரத்திலும், பள்ளியை விட்டுத் திரும்பும் நேரத்திலும் சமுதாயத்துக்கு மிகவும் பயனுடையவர்களா விருப்பார்கள். மக்களும் போற்றுவார்கள்.

நன்னிலம்,
18-2-70 எம். பஞ்சரத்தினம்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam

கொட்டாவி விடாமல் காரியத்தில் ஈடுபடுங்கள்



காரியாலயத்திலும் சரி, சமூகத்திலும் சரி, முன்னேற்றம் அடைய ஆரோக்கியமும் தெம்பும் தேவை.

சரீரத்தின் வலுவையும் சக்தியையும் நிலை நாட்ட சமசத்துணவு தேவை. ஆனால், பெரும்பான்மையோர் உடலுக்கு எது தேவையோ அதைச் சாப்பிடுவதில்லை. போதாக்குறைக்கு சீதோஷ்ண நிலையும் அயர்ச்சியை அளிக்கிறது.

ஆகவே, சரீரத்திற்குத் தேவையான சத்துக்கள் கிடைக்கச் செய்வதெப்படி? சுலபம் தான், தினமும் 'விடாமினெட்ஸ்' ஃபோர்டே சாப்பிட்டால் போதும். இதில் 11 வைட்டமின்களும் 5 தாது உப்புக்களும் அடங்கியுள்ளன. இன்றே மருந்து வியாபாரியிடமிருந்து விடாமினெட்ஸ் ஃபோர்டே வாங்குங்கள். இந்த மின்னும் சிவப்பு மாத்திரைகளில் ஜீவ சத்து நிறைந்துள்ளது. தினமும் ஒரு மாத்திரை உட்கொண்டால் தெம்புடனும் சுறுசுறுப்புடனும் திகழ முடியும்.

விடாமினெட்ஸ் ஃபோர்டே 'ரோஷ்'

'நாளொன்றுக்கு 15 பைசாவிலும் குறைந்த செலவில் ஆரோக்கியமும் சக்தியும் பெறுங்கள்'

'ரோஷ்' தயாரிப்பு

ஏகபோக விநியோகஸ்தர்கள்:
வால்டாஸ் லிமிடெட்

VT-8144

REGISTERED No. M. 4392

Registered as a Newspaper in Ceylon



லின்டாஸ்-INC-4-140 TM